

கல்கி

KALKI
17.6.2001
ரூ. 5.00

ஹாலிவுட் டு
கோலிவுட்!



வர்த்தமானன் பதிப்பகம்

வழங்கும்

மாபெரும் முன்வெளியீட்டுத் திட்டம்

சலுகை, சலுகை மேல் சலுகை, தவணை முறை

ஆகிய அனைத்தும் உண்டு.

ஆழ்வார்களின் அமுதப் பாடல்களான

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மூலமும் விளக்கவுரையுமாக - 9 தொகுதிகள்

(4,500 பக்கங்களில்) விலை	ரூ. 1000.00
வர்த்தமானன் அறக்கட்டளையினரின் உதவித்தொகை	ரூ. 250.00
	ரூ. 750.00
முன்வெளியீட்டுச் சலுகை	ரூ. 150.00
சலுகை விலை	**ரூ. 600.00**

'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்களால் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துப் பாடப்பட்ட தெய்வப் பனுவல் தான் **'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்'** ஆகும். திருமாலின் உயர் நலங்களில் ஆழ்ந்தவரால் பாக்களாகப் பாடப் பட்டமையாலும், தெய்வத் தொடர்புடை மையாலும் இது திவ்வியப் பிரபந்தம் எனப்படுகிறது.

இந்நூலிற்கு உரைவகுத்த டாக்டர் இரா. வ.கமலக்கண்ணன் வித்துவான், பி.லிட், எம். ஏ (சிறப்புநிலை) பி.எட், பி.எச்.டி, முதலிய பட்டங் களைப் பெற்றவர். பல ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், பின்னர் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவரின் 'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு 'முதலாழ்வார் பாசுரங்கள் முந்நூறுக்கும்' இவர் 'சொல்லடைவு' அமைத்துக் கொடுத்துள்ளார். திருமலை திருப்பதி தேவஸ்தான மாத வெளியீடான 'சப்தகிரி'யில் இவரது வைணவ சமயம் பற்றிய கட்டுரைகள் பல இடம் பெற்று வருகின்றன. 'ஆலய தரிசனம்' மாத இதழிலும் இவரது கட்டுரைகள் வெளிவருகின்றன.

இப்படியாக எழுத்தாற்றல் அனுபவமும், சென்னை வானொலியில் சமய இலக்கியப் பேருரைகள், பல வைணவ மாநாடுகளில் சிறப்புரையாற்றிய அனுபவமும், 40 ஆண்டுகளாக இவர் சேகரித்து வைத்த ஆய்வுச் செய்திகளுடன், சம்பிரதாய நூல்களை வல்லார் வாய்க் கேட்டும் பெற்ற அனுபவ அறிவும் சேர்ந்து உருவானது தான் இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்த விளக்க உரை.

4000 பாடல்களுக்கும் விளக்கவுரை மற்றும் சிறப்புரையும் என்று அமைக்கப்பட்ட இந்நூலின் தொடக்கத்தில், உரையாசிரியர் எழுதிய ''நூலினைப்பற்றிய செய்திகள்'' என்னும் பகுதி விரிவான முன்னுரையாக, நூலிற்கு முத்தாய்ப்பாய் அமைகிறது.

தபாலில் பெற

சலுகை விலையான ரூ.600 இல் ரூ.300 (M.O / DD) மட்டும் 7.7.2001 க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்க. 6.8.2001 லிருந்து பணம் வந்த வரிசைப்படி 9 தொகுதி களும் V.P.P.யில் அனுப்பபடும். மீதித் தொகை ரூ.300, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.350 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பெற

எமது அலுவலகத்தில் ரூ. 300 மட்டும் செலுத்தி (7.7.2001 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் மீதித் தொகை ரூ.300 மட்டும் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை.

ஞாயிறு விடுமுறை.

முகவரி: வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. (பனகல் பார்க் அருகில்) ✆ : 8142377 .

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப்படமாட்டாது M.O./DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ஒரே தடவையில் சலுகை விலையினைச் செலுத்துவோர்க்குச் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது.

ஹாலிவுட் டு கோலிவுட்!



கமர்ஷியல் சினிமாவில், கவித்துவம் மிக்க கேமராக்காரராக இயங்கிக் கொண்டு, ஓர் இலக்கிய வாதியாகவும் தன்னை அடையாளப்படுத்தி வரும், தங்கர் பச்சான் முதல் முறையாக ஒரு படத்தை இயக்குகிறார். அந்தப் படம் 'அழகி.' 'ஃபயர்' திரைப்படம் பற்றி எரிந்தபோது, அந்த வெளிச்சத்தில் வெளியே தெரிந்தவர் நந்திதாதாஸ். 'எர்த்', 'வாட்டர்' என்று கலைப் படங்களை மட்டுமே கையிலெடுத்துக் கொண்டு, பாத்திரமாகவே வாழ்ந்துவிடும் இந்த மாறுபட்ட நடிகையை அடையாளம் கண்டு, ஹாலிவுட் இயக்குனர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் கூட நந்திதாவை, நடிக்க வைத்து விட்டார். 'சாண்ட் ஸ்டார்ம்' ஆங்கிலப் படத்தில் நடித்து முடித்த கையோடு, தங்கர்பச்சான் அவரைத்

நந்திதாவுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். ''அவர்களோடு பழகும்போது, நம் மனத்துக்குக் கட்டுப்பாடோ, கடிவாளமோ போட வேண்டிய அவசியமில்லை. அவர்களோடு செலவழிக்கிற ஒவ்வொரு கணமும் நாமும் குழந்தையாகவே மாறிப் போகிறோம்'' என்கிறார்.

இவரது இளைய சகோதரன் சித்தார்த் மலைப்பிரதேசமான ரிஷிவேலேயில் படித்து வருகிறான். பாடங்களோடு, ஓவியம், நடனம், இசை போன்ற பிற நுண் கலைகளையும் கற்றுத் தரும் அந்தப் பள்ளியில் நந்திதாவுக்கு ஆசிரியையாகப் பணி புரிந்த அனுபவமும் உண்டு.

''வழக்கமான பாணியில் இல்லாமல், கலாபூர்வமான புதிய முறையில் கற்பிக்கச் சொன்னார்கள். என் அப்பா ஓவியர், அம்மா எழுத்தாளர். நான் ஹிந்துஸ்தானி இசையும் ஒடிஸி நடனமும் கற்றிருக்கிறேன். இந்தக் கலைகளின் அனுபவம் கொண்டு, பாட்டு, நடனம், நாடகம் மூலம், அந்தக் குழந்தைகளுக்குப் புதிய வழியில் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது எனக்குச் சுலபமாக இருந்தது. குழந்தைகளும் இந்த முறையில் ஒன்றிப் போனார்கள்.

அதே மாதிரி ஒரு பள்ளியை நானே ஆரம்பித்து நடத்த வேண்டும் என்பதை லட்சியமாகவே வைத்திருக்கிறேன். இந்த லட்சியத்திற்கு அதிக பணம் வேண்டும். அந்தப் பணத்திற்காக என் போக்கில் எந்த சமரசமும் செய்து கொள்ள மாட்டேன். சினிமாவை விட நடிப்பையே நேசிக்கிறேன்'' என்கிறார் நந்திதா.

சினிமா மீதும், சினிமா சம்பந்தப்பட்டவர்களிடமும் அவருக்கு ஆழமான ஈடுபாடு இருந்தாலும், சினிமா தனது எஞ்சிய வாழ்க்கையின் மீது அழுத்தமான ஆதிக்கத்தையும், ஒரு அழுத்தத்தையும் உருவாக்கும்

தமிழுக்குக் கொண்டு வருகிறார்.

'அழகி' படத்தில் தனலெட்சுமியாக அவருக்குத் தமிழழகி பட்டம் சூட்டியிருக்கிறார் தங்கர்பச்சான். மசாலா மணம் கொஞ்சமும் குறையாத தமிழ்ச் சினிமாவில் நடிக்க நந்திதா எப்படிச் சம்மதித்தார்? இனி தங்கர் பச்சான்.

''சினிமாவில் ஒவ்வொருவருக்கும் ஒரு விலையிருக்கிறது. ஆனால் நந்திதா பணத்திற்காக நடிப்பவர் அல்ல. அவரை விலை கொடுத்து வாங்க முடியாது. நான் செய்த பகீரத முயற்சிகளுக்குப் பிறகே கதையைக்





நிலை வந்தால், அதை உதற ஒருபோதும் தயங்க மாட்டாராம். தாம் காலம் பூராவும் சினிமாவில் நடித்துக் கொண்டிருக்க முடியாது என்று தெரிந்திருப்பதால் அவர் பிற கலைகளில் தனக்குள்ள ஆர்வத்தையும், திறமையையும் வளர்த்துக் கொள்வதில் கவனமாகவே இருக்கிறார்.

தொடர்ந்து படப்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் போது, இடைவெளி கிடைத்தால் நேரே வீட்டிற்கு வந்து பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது வரை அனைத்து வேலைகளையும் செய்கிறார். வீட்டில் உடல்ரீதியாக உழைக்கும் போது மனம் இலேசாகும் என்கிறார். இப்படித்தான் தன்னை, ரீ-சார்ஜ் செய்து கொள்கிறார் நந்திதா.



பள்ளிக்கூட கனவு!

கேட்டார். கண்கலங்கினார்.

"நீங்கள் அடிப்படையில் ஒரு கேமராமேனாக இருக்கிறீர்களே; இத்தனை அற்புதமான கதையை எப்படி படமாக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார். அப்போதுதான் எனது இலக்கியப் பின்னணியை எடுத்துக் கூறினேன். ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்ட எனது 'ஒன்பது ரூபாய் நோட்டு' நாவலையும், 'வெள்ளை மாடு' சிறுகதைத் தொகுப்பையும் கொடுத்தேன். இந்தத் தொகுப்புகளில் இருந்தே அழகியை உருவாக்கியிருக்கிறேன் என்று சொன்னேன். மொழிபெயர்ப்பைப் படித்த நந்திதாவுக்கு, என் மீது நம்பிக்கை பிறந்தது. அதை அந்த யதார்த்த முகத்தின் பிரகாச சிரிப்பால் வெளிப்படுத்தினார். அந்த முகமும், சிரிப்பும்தானே எல்லோரையும் வசீகரிக்கிறது?

"நந்திதாவுக்கு உலக சினிமா, உலக இலக்கியம், உலக அரசியல், நடைமுறை வாழ்க்கை எல்லாமும் தெரிகிறது. நடைமுறையில் போலித்தனம் இல்லாத சாதாரணப் பெண். நானும் அப்படிப் பட்டவன் என்பதால் எங்கள் சிந்தனை ஒத்துப் போய் விட்டது.

"ஆனாலும் படப்பிடிப்பில் நான் நந்திதாவுடன் நிறைய சண்டை போட வேண்டியிருக்கும். அவர் தர்க்கரீதியான பெண்.

"நந்திதா நாயகியாக நடிப்பதால், இது கலைப் படமா என்று கேட்கிறார்கள். உலக அளவில் வெகுஜன ரசிகர்களைச் சென்றடையக்கூடிய, தமிழ் அடையாளம் மிக்க ஒரு நிஜ தமிழ் சினிமாவாக அழகி இருப்பாள். உலக சினிமாவிலும் பேசப்படுவாள், வர்த்தக சினிமாவிலும் ஒரு புதிய வழியைத் திறந்து விடுவாள். காரணம் திரைக்கதை. அதுதான் இந்தப் படத்தின் சிறப்பு. அதனோடு மேஸ்ட்ரோவின் இசை. எல்லா பாடல்களையும் இசைஞானியே எழுதுகிறார். அதற்குக் காரணமிருக்கிறது. இந்தக் கதையில், வீட்டுக்கு வீடு பேசப்படப் போகும் ஒரு காதலும் இருக்கிறது.

சந்திப்பு : **ஜெயந்தன்**



குற்றம் புரிந்தால் தண்டனைதான் என்கிறாரே ஜெ...

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? 133 தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதைக் குறிக்கும் வகையில் 133 கற்கள் வைத்த தங்கக் கம்மலை திருநெல்வேலியில் ஜெயலலிதாவுக்கு வழங்க இருக்கிறார்களாமே...?

! கூடவே, நான்கு தொகுதிகளில் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதன் நினைவாக நான்கு வடச் சங்கிலியும் போடச் சொல்லுங்க!

● பூரி ஜெகன்னாதன், சென்னை-73 ❐

? இந்தியாவில் 59 மில்லியன் குழந்தைகள் அடிப்படை கல்வி கற்காமல் உள்ளனர் என்ற அறிவிப்பு எந்த நிலையைக் காட்டுகிறது?

! கடந்த காலத்தின் அலட்சியத்தை;
நிகழ்காலத்தின் பரிதாபத்தை;
எதிர்காலத்தின் அபாயத்தை!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? மணிப்பூர் முறுக்கு எதில் போய் முடியும்?

! குடியரசுத் தலைவர் ஆட்சியில் நமுத்துப் போய் முடிந்திருக்கிறது.

● கே.என்.பாலகிருஷ்ணன், கும்பகோணம்

? த.மா.கா.வின் லட்சியம் எப்போது நிறைவேறும்?

! லட்சியமா? த.மா.கா.வுக்கா...? ஹஹ்ஹஹ்ஹா!

● கு.ப.இரகுநாதன், சென்னை - 56

? 'குற்றம் புரிந்தவர்கள் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்' என்று சொல்கிறாரே ஜெ...?

! கரெக்‌ஷன்! குற்றம் புரிந்தவர்கள் தண்டனை பெற்றே தீர வேண்டும். அனுபவித்தே தீருகிறார்களா இல்லை முதல்வராகிறார்களா என்பது அவரவர் சாமர்த்தியத்தைப் பொருத்தது.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? காங்கிரஸ் - த.மா.கா. இணைப்புக்காக விரைவில் நிச்சயதார்த்தம் நடைபெறும் என குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளாரே...?

! டைவர்ஸ் ஆனவர்கள் மீண்டும் சேர்ந்து வாழ நிச்சயதார்த்தம் எதற்கு...? திருமணம் தான் எதற்கு?... அலகாபாத் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதை வேறு சுட்டிக்காட்டுகிறார் சென்னை-12 கல்கி வாசகர் எஸ்.இ.தாஸ்!

● வாசுதேவன், பைந்தூர்

? ஒப்பிடுக - கொத்துமல்லி சாதம், கறிவேப்பிலை சாதம்!

! கொத்துமல்லி - எளிமையான லைட் மியூசிக்; கறிவேப்பிலை - கனமான கர்நாடக சங்கீதம் (acquired taste).

● வி. பரமசிவம், அரசரடி

? பரிதி இளம் வழுதி மீது போலீஸ் அதிகாரி ரெங்கராஜன் நடத்திய தாக்குதல் பற்றி?

! அந்தத் தாக்குதலை நீதிபதியே கண்டித்த போதிலும் ஆளுங்கட்சியினர் யாருமே கண்டிக்கவில்லை என்பதுதான் மனித உரிமை பேரில் நடத்தப்பட்டுள்ள மிகப் பெரிய தாக்குதல்!

● சாத்தூர் சபாபதி, திருச்சி - 18 ★

? ஊழல், கோர்ட், வழக்கு, விசாரணை

❐ ரூ.50 பரிசு பெறுபவர் :
பூரி ஜெகன்னாதன்,
C/o ஜி.எஸ். பிரபாகரன், 7, நாலாவது பிரதான சாலை, ஐ.ஓ.பி. காலனி, சேலையூர், சென்னை - 73

நீங்கள் கேட்டவை - தராசு



✱ இணைப்பிசை!



✱ விண்ணப்பமும்...



✱ ...விளம்பரமும்!



✱ செய்தவம்!



✱ அம்மா குரல்!



✱ லாஹூரும்...



✱ ... கார்கிலும்!



✱ மாடத் தோழி!

கமிஷன், தனிமனித காழ்ப்புணர்ச்சி... இவை யில்லாத சிறப்பான ஆட்சிதனை நம் தமி ழகம் காணும் காலம் எப்போதும் வரும்...?

!அமாவாசை அன்று முழு நிலவு வரும் போது...!

● **எஸ். இராமலிங்கம், ஆத்தூர்**

? பி. சுசீலாவுக்கு, ஐம்பதாண்டு கால சேவையைப் பாராட்டி விழா எடுத்தது குறித்து?

! நினைவில் நிற்கும் பல அற்புதமான திரைப்பாடல்களை வழங்கியவர். அவர் பெய ரில் ஓர் அழகான திரையிசை அருங்காட்சி யகம் தொடங்கி அவரைக் கௌரவித்தால், பழைய திரையிசைக்கும் நவீன திரையிசைக் கும் பாலம் அமைத்த ஒருவருக்குச் செய்யப் பட்ட பொருத்தமான கௌரவமாக இருக்கும்.

● **உமரி பொ. கணேசன், மும்பை-7**

? தமக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை என்று சந்திரலேகா கூற, அதை 'மலிவான விளம்பரம்' என்று வளர்மதி குற்றம் சாட்டியுள்ளாரே?

! ஆஸிட் தாக்குதலுக்கும் பிளாஸ்டிக் சிகிச்சைக்கும் வளர்மதி ஆளாகி இருந்தால் இப்படிப் பேசமாட்டார். மலிவான விளம் பரம் எது என்று தெரியவேண்டுமானால், வளர்மதி சென்னை கத்திப்பாரா சந்திப்பில் வைத்துள்ள 'ஹோர்டிங்' பார்க்க வேண்டும்.

● **ஆர். கர்ணன், தனக்கர்குளம்**

? ம.தி.மு.க. என்ன செய்யப் போகிறது...?

! பொதுக்குழு... செயற்குழு... மாநாடு... பொதுக்குழு... செயற்குழு... மாநாடு... பொதுக்குழு...

● **எஸ். மாலதி, முசிறி**

? 'நக்கீரன் கோபால், நெடுமாறனை மூன்று மணி நேரம் ஐஸ்கட்டியில் படுக்க வைத்தால் வீரப்பன் ஒளிந்திருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு விடலாம்' என்று பேசியிருக்கிறாரே ஓர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ...?

! செருப்படியும் உருட்டுக்கட்டை அடியும் மலிவாகிப்போன அ.தி.மு.க. ஆட்சியின் அடுத்த கட்ட கொடூரம் எப்படி இருக்கும் என்று கோடி காட்டுகிறார் போல...!

● **சி. தேவி, விருதுநகர்**

? சட்டப் பேரவையில் கவர்னர் ஆற்றிய உரை அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பேசியதுபோல் அமைந்துள்ளதா...?

! சட்டமன்ற தொடக்கத்தில் ஆளுனர் உரை என்பது அவருடைய சொந்த உரை அல்ல... ஆட்சியில் இருப்பவர்கள் எழுதிக் கொடுப்பதைத்தான் ஆளுனர் படிக்கிறார்.

● **கே. மூர்த்தி, குட்டலாடம்பட்டி**

? முஷரஃப் - வாஜ்பாய் கடிதம்; அதனை யடுத்த பேச்சுவார்த்தை முயற்சிகள்... இரு நாடுகளின் பகை உணர்ச்சியைக் குறைக் குமா...?

! அப்படி முழுசாக நம்புவதற்கில்லை. முன்பு வாஜ்பாயின் லாஹூர் பஸ் பயணத் துக்குப் பிறகுதானே கார்கில் வெடித்தது.

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டு பாளையம்**

? 'உயிர்த்தோழி' எப்படி இருக்கிறார்...?

! சட்டசபை வரை வந்து மாடத்தில் அமர்ந்து அக்காவின் பேச்சை ரசிக்கும் நிலையில் நன்றாகத்தானிருக்கிறார்.

★ ரூ.25 பரிசு பெறுபவர் :

சாத்தூர் சபாபதி,


C/69, பத்தாவது கிராஸ், தில்லை நகர், திருச்சி - 18.

V'ருந்து.

"விருந்தில் பறிமாறப்பட்ட உணவு ஐட்டங்கள் எல்லாம் எப்படி இருந்தன?" என்று முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கன்னடத்தில் கேட்டார் வெங்கடேஷ் பட். "ரொம்ப சுவையாக இருந்தன" என்று கன்னடத்திலேயே பதில் சொன்னார் ஜெ. முதல்வரிடம் விசாரித்த வெங்கடேஷ்பட், தாஜ் கொரமாண்டல் நட்சத்திர ஓட்டலின் பிரதான செஃப். இந்த மாதம் முதல் தேதியன்று, ஜெயலலிதாவுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் மூப்பனார் தாஜ் ஓட்டலில்தான் விருந்து அளித்தார். அதற்கான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்த வெங்கடேஷ் பட், வழங்கும் சில சுவையான தகவல்கள் :

விருந்துக்கான ஏற்பாடுகளை, த.மா.க. சார்பில் கவனித்துக் கொண்டவர் மூப்பனாரின் மகன் கோவிந்தவாசன்.





• வெங்கடேஷ் பட்

தாஜ் ஓட்டலின் 'சதர்ன் ஸ்பைஸ்' உணவகம், இந்தியாவின் மிகச் சிறந்த தென்னிந்திய உணவகம் என்ற பெருமை பெற்றது. அங்கே தரப்பட்ட மெனு பட்டியலிலிருந்துதான், மூப்பனார் அளித்த விருந்துக்கான மெனு முடிவு செய்யப் பட்டது.

நானூறு விருந்தினர்கள் வருவார்கள் என்று ஓட்டல் நிர்வாகத்துக்கு சொல்லப் பட்டது. ஆனால் விருந்துக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்ததுமே, உஷாராகி, அறுநூறு பேருக்கு உணவு தயார் செய்துள்ளார்கள். சுமார் ஐந்நூற்று ஐம்பது பேர் அன்று சாப்பிட்டார்கள்.

தாஜ் ஓட்டலின் மிகப் பெரிய ஹால் ஆன பால் ரூம் ஏற்கெனவே வேறு ஒருவரால் 'புக்' செய்யப்பட்டிருந்த போதிலும் இது தமிழக முதல்வர் கலந்து கொள்ளும் பெருமைக்குரிய விருந்து என்பதால், சம்பந்தப்பட்டவர்களிடம் நிலைமையை விளக்கிச் சொல்லி, மாற்று ஏற்பாடு செய்து கொடுத்தோம். பால் ரூமில் விருந்தினர்களுக்கு 'பூஃபே' முறையில் விருந்து சாப்பிட ஏற்பாடு செய்திருந்தோம்.

அதனை ஒட்டிய ஹேஸ்டிங்ஸ் ஹாலில் சுமார் முப்பது வி.ஐ.பி.கள் அமர்ந்து சாப்பிடும்படி மேஜைகள் தயார் செய்தோம்.

மதியம் ஒன்றரை மணிக்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், ஒரு மணிக்கே மூப்பனார் வந்து விட்டார். அவரைத் தொடர்ந்து வந்திருந்த பல்வேறு அரசியல் தலைவர்களின் பட்டியல் வருமாறு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், நல்லக்கண்ணு, அப்துல் லத்தீப், கி. வீரமணி. வராத முக்கியஸ்தர்கள் சங்கரய்யா, டாக்டர் ராமதாஸ்.

விருந்தின் மெனுவில் இடம் பெற்றிருந்த

முக்கிய ஐட்டங்கள் வெஜிடபிள் சூப், பிரைடு ரைஸ், சிக்கன் ஃபிரை, மட்டன் ஃபிரை, மீன், பரோட்டா, மசால்தோசை, தயிர் சாதம். அதனைத் தொடர்ந்து வெனிலா ஐஸ்கிரீம், ஜிலேபி.

விருந்து நடந்த ஹாலிலேயே தோசைக்கல் வைத்து சுடச்சுட மசால்தோசை, பரோட்டா போட்டு கொடுக்கப்பட்டது.

வி.ஐ.பி. விருந்தினர்களைப் பதினைந்து ஊழியர்களும், மற்றவர்களை முப்பது ஊழியர்களும் பம்பரமாய்ச் சுழன்று உபசரித்தார்கள்.

மூப்பனார் ஐஸ்கிரீம் சாப்பிடவில்லை. ஜெயலலிதா விருந்துக்குப் பின் சுடச்சுட டிகிரி காபி குடித்தார்.

ஐந்து நட்சத்திர ஓட்டலின் பூஃபே முறை விருந்து. வந்திருந்தவர்களில் பலருக்குப் பழக்கமில்லை என்பதால், பலர் ஸ்பூன், முள் கரண்டி பயன்படுத்தாமல் கையால் சாப்பிட்டார்கள்.


போன தடவை ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, அளிக்கப்பட்ட விருந்தின் போது, ஓட்டலின் சமையல் தளப் பகுதிக்கு, மோப்ப நாய்களைக் கொண்டு வந்து, பாதுகாப்பு பரிசோதனையெல்லாம் நடந்தது. ஆனால் இந்தத் தடவை அப்படி ஏதுமில்லை.

உணவு தயாரானவுடன், தமிழக அரசின் உணவு சோதனை அதிகாரிகள் உணவை ருசி பார்த்து, சோதனை யிட்டார்கள்.

ஜெயலலிதா, வந்தபோது மணி 2.10. சாப்பிட்டு முடித்துப் புறப்பட்டபோது மணி 3.15.

மிகச் சிறப்பாக விருந்துக்கான ஏற்பாடுகளை நான் செய்ததாக என்னைப் பலரும் பாராட்டினார்கள். ஆனால் இந்தப் பாராட்டுகளில் என்னுடன் பணி புரியும் ராஜேஷ், நவீன், சோனி முத்து, கோபால் என்ற நான்கு செஃப்களுக்கும் பங்குண்டு.

தொகுப்பு : **மௌலி**



''ஜிலேபி, ஐஸ்க்ரீம் சாப்பிட்டீங்க... அல்வாவை அப்படியே வைச்சுட்டீங்களே... ஏம்மா?''

''அதை மூப்பனாருக்குத் தரலாமேன்னுதான்...''



• தி.மு.க. பொதுக்குழு

கால் அடிக்கக் கூடாது என்பது அவர்கள் வாதம். சில மாஜி மாண்புகளுக்கு மண்டலப் பொறுப்பாளர் பதவி கொடுக்கப்பட்டதிலும் சர்ச்சை இருக்கிறது.

"அந்தம்மா (ஜெ) தேர்தல் சமயத்தில் ஒரு மாவட்டச் செயலாளரையே தூக்கியடிக்கிறார். ஆனால் இங்கே தேர்தலில் துரோகம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் இருக்கிறது. தலைவரே, நீங்கள் கட்சி நலனை முன்னிட்டு சர்வாதிகாரத்தனமாக நடவடிக்கை எடுங்கள்" என்று பொதுக் குழுவில் பேசிய பாரிதிக்கு ஒரே கைதட்டல்.

"தயிர்சாதப் போக்கைக் கைவிடுங்க தலைவரே"

தமது உடல்நலம் காரணமாக ராஜினாமா செய்யும் எண்ணத்திலிருந்த மாறன் தம் முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறார். "எமர்ஜென்சியிலும் 1991-96 கால கட்டத்திலும் மத்திய, மாநில அரசுகளை எதிர்த்து அரசியல் நடத்தி வந்தவர்கள். நாங்கள். ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக கொஞ்சம் சுகவாசிகளாகிவிட்டோம். ரியல் எஸ்டேட், ஒயின்ஷாப் என்று எங்கள் ஆட்களுக்கு இப்போது நிறைய பிஸினஸ். அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இன்னும் சிறிது நாளில் முழு வேகத்தோடு, களத்தில் குதிப்போம்" என்கிறார் அறிவாலயப் பிரமுகர் ஒருவர்.

• சுலோசனா சம்பத்தும் மைத்ரேயனும் தேர்தலில் தோற்றதில் முதல்வருக்கு மிகவும் வருத்தம். குறிப்பாக மைத்ரேயன் விஷயத்தில் ஆறு மாதத்திற்கு முன்னரே 'அவர்தான் மைலாப்பூர் வேட்பாளர்' என்று அம்மா தீர்மானித்து விட்டாராம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பொறுப்பும் கொடுக்கப்பட இருந்ததாம். சுலோசனா சம்பத்துக்கு அ.இ.தி.மு.க. அவைத் தலைவர் பொறுப்பு கொடுக்கப்படலாம் என்கிறார்கள் புதிய அமைச்சர்கள் அவருக்குத் தக்க மரியாதை கொடுக்கவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். மைத்ரேயனைப் பொருத்தமட்டில் முதல்வருக்கு நிர்வாகத்தில் நேரடியாக உதவக் கூடிய வகையில் ஏதாவது பொறுப்பு கொடுக்கப்படும் என்கிறார்கள். இதற்கு முதல்வரின் 'உள்வட்டம்' கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறதாம்.

• பொதுக் குழுவுக்குப் பிறகு தி.மு.க.வில் உற்சாகம் கூடியிருக்கிறது. ஆனால் தலைவர் 'தயிர் சாத போக்கைக் கைவிட வேண்டும்' என்கிறார்கள் தொண்டர்கள். அதாவது கட்சிக்கு துரோகம் செய்தவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அவர்களை மயிலிற

காதில் விழுந்தவை!

• 'எல்லா உழவர் சந்தைகளையும் மூடப் போவதில்லை, செயல்படாத உழவர் சந்தைகளை மட்டும்தான் மூடப்போகிறோம்' என்று அரசு தரப்பில் சொன்னாலும் எல்லாவற்றையும் காலப் போக்கில் மூடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க புதிய மாவட்ட ஆட்சியாளர்கள் ரகசியமாக பணிக்கப்பட்டிருக்கிறார்களாம். அதாவது உழவர் சந்தைகளுக்கு செய்து தரப்பட்டிருக்கும் வசதிகளை சத்தமில்லாமல் குறைப்பது முதல் கட்ட வேலையாம். ஏற்கெனவே பல ஊர்களில் விவசாயிகள் சரக்கு எடுத்து செல்லவிடப்பட்டிருந்த பேருந்துகள் ரத்து செய்யப்பட்டு விட்டனவாம். இப்போது உழவர் சந்தைக்குப் பொறுப்பான அலுவலர்கள்' பணிமாற்றம் செய்யப்பட்டு, பதவிகள் காலியாக வைக்கப்பட்டுள்ளதாம்.

- சஞ்சயன்

படம் : டி. பரத்குமார்

புதிய வெளியீடு!

அருட் பொக்கிஷம்

காஞ்சி மகாஸ்வாமிகளின் அருள்வாக்கு

நமது மதத்துக்குரிய கலாசாரம், பண்பாடு, ஆன்மிக வாழ்க்கை நெறிகள், அன்றாடம் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகள், பண்டிகைகள், தெய்வ தத்துவம் ஆகிய பலவற்றையும் தெரிந்து கொள்ள மக்களிடையே மிகுந்த ஆர்வம் இருக்கிறது.

அந்த ஆர்வத்துக்கு உறுதுணையாக 'அமரபாரதி' இதழில் வெளிவந்த மகாஸ்வாமிகளின் கட்டுரைகள் அனைவருக்கும் வழிகாட்டக் கூடியவையாக அமைந்துள்ளன.

நவரத்தினங்களாக ஜொலிக்கும் மகாஸ்வாமிகளின் 95 கட்டுரைகள், ஒன்பது தலைப்புகளில் தொகுக்கப் பெற்று அழகிய புத்தக வடிவில் அருட் பொக்கிஷமாக வெளிவந்துள்ளது. அருள் நிரம்பிய காஞ்சி மாமுனிவரின் வண்ண ஓவிய மேலட்டை புத்தகத்தை அலங்கரிக்கிறது.



400 பக்கங்கள். விலை ரூ. 80/-

பதிவு தபாலில் பெற ரூ. 95/- **M.O.** செய்க

வி.பி.பி.யிலும் பெறலாம். வி.பி.தபால் செலவு தனி.

விவரங்களுக்கு:

திருவரசு புத்தக நிலையம்.

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 600 017.

தொலைபேசி எண்: 4342810



உ

சிவமயம்

அருள்மிகு ஜலநாதீஸ்வரர் ஆலயம்

குருபகவான் தமிழ்நாட்டில் 3–வது ஸ்தலம்

ஸ்ரீதட்சிணாமூர்த்தி அபூர்வ திருக்கோலம்

தக்கோலம் குரு பெயர்ச்சி விழா

பேரன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 30ம்தேதி (13.6.2001) புதன் கிழமை சூரிய உதயாதி நாழிகை 30–36க்கு மாலை மணி 6–10க்கு ஸ்ரீ குரு பகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்கு பெயர்ச்சி ஆவதால் தக்கோலம் என வழங்கும் திருவூறலில் ஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்ற க்ஷேத்திரத்தில் அருள்மிகு. கிரிராஜ கன்னிகாம்பாள் சமேத ஸ்ரீ ஜல நாதீஸ்வரர் ஆலயத்தில் **அருள்மிகு. அபூர்வ திருக்கோலத்தில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தி சுவாமிக்கும் குருபகவானுக்கும்** விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை நடைபெற உள்ளதால் அன்பர்கள் தரிசித்து நற்பயன்பெற வேண்டுகிறோம்.

13.6.2001 புதன்கிழமை மாலை 6.15 முதல் மறுநாள் 14.6.2001 வியாழக் கிழமை இரவு 9 மணி வரையிலும் தரிசனம் அர்ச்சனை நடைபெறும்.

மேஷம், மிதுனம், கடகம், கன்னி, விருட்சிகம், மகரம், மீனம் ராசிக்காரர்கள் அர்ச்சனை செய்து தரிசனம் செய்வது மிகவும் நல்லது.

அர்ச்சனை டிக்கெட் விலை ரூ. 30.00

அர்ச்சனை டிக்கெட்டை நேரிலோ, M.O. மூலமாகவோ பெற்று, விழா அன்று வருகை தந்து சிறப்பிக்க கோருகிறோம். அர்ச்சனை டிக்கெட் பெறுவருக்கு சுவாமியின் திருவுருவம் பதித்த துணிப்பையுடன் பிரசாதம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய குரு ஸ்தலங்களில் தக்கோலம் என்ற வரிசையில் மூன்றாவது இடமாக தக்கோலம் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது இத்திருத்தலம் சமயக்குரவர் நால்வர்களால் பாடப்பெற்ற ஸ்தலமாகும்.

மற்றும் அறங்காவலர்கள்:
A.S. கோவிந்தராசன், N.ஆறுமுகம்,
C.அசோக்குமார் M.A., தி. பாலசந்தர் M.A.,

இப்படிக்கு, V. சுப்பிரமணியம்
அறங்காவலர் குழு தலைவர்
அருள்மிகு ஜலநாதீஸ்வரர் ஆலயம்
தக்கோலம்-631 151. வேலூர் மாவட்டம்

அமரர் கல்கி அவர்களின் புகழ்பெற்ற எழுத்தோவியங்கள்

சிவகாமியின் சபதம்	(புதிய பதிப்பு)	240–00
பொன்னியின் செல்வன்	1–ம் பாகம்	135–00
பொன்னியின் செல்வன்	2–ம் பாகம்	147–00
பொன்னியின் செல்வன்	3–ம் பாகம்	130–00
பொன்னியின் செல்வன்	4–ம் பாகம்	120–00
பொன்னியின் செல்வன்	5–ம் பாகம்	260–00

தரமான அச்சு மற்றும் அழகான வண்ண அட்டை பைண்டிங்.

சிறப்பு தள்ளுபடி ரூ. 232/–

ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை

6 நூல்களும் ஒரே நேரத்தில் வாங்குங்கள்
சிறப்பு தள்ளுபடி கழித்து
ரூபாய் 800/–
மட்டும் அனுப்புக


தபால் செலவு தனி.

பூம்புகார் பதிப்பகம்
புதிய எண். 36, M.S. கோவில் தெரு,
சென்னை – 600 013.
தொலைபேசி : 5952694.

பண்டிட் D.கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும்



அருணா
ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு

சியவன ப்ராஷ்
இருமலுக்கு

ரக்த சோதக
ரத்த விருத்திக்கு

பால ப்ராண்
குழந்தைகள் டானிக்

1898 முதல் பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம் பிரைவேட் லிமிடெட்
155, G.N. செட்டி ரோட், தி.நகர்,
சென்னை - 600 017.
போன் : 91-044-8281381, 8214193
E-mail : drdesikacharulu@yahoo.com
Website : ayurvedasramam.com

ஓம் ஸ்ரீ குருப்யோ நம: ஹரி : ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம: ஓம் ஸ்ரீ மாத்ரே நம:



ஸ்ரீ ஆதிசங்கரா பவுண்டேஷன்ஸ்
ஸ்ரீமாத்ரு பூமி டூர்ஸ் & டிராவல்ஸ்
SRI MAATHRU BHOOMI TOURS & TRAVELS



Office : 53-55, C N K Road, Chepauk, Triplicane, Chennai:
Res : No.25, 1st Floor, Ganesh Ngr, Thiruvanmiyur, Chennai-41, **Ph: 4480501.**

அலஹாபாத் - காசி - கயா - மஹாளய பக்ஷ சிரார்தம் யாத்ரை

ஒவ்வொரு குடும்பத்திலும் காலமான மூதாதையர்கள், பெற்றோர் மற்றும் உறவினர்களின் ஆன்ம சாந்திக்காகவும் சந்ததிகள் சுபிட்சமாக ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழவும் இந்துமதத்தின் ரிஷிகளும் மஹான்களும் சாஸ்திர சம்பிரதாயத்தில் கூறியுள்ளது போல். அலஹாபூாத் (பிரயாகை) கங்கா யமுனா, சரஸ்வதி நதிகளில் புனித நீராடி, காசி, கயா ஆகிய இடங்களில் சென்று சிரார்தங்கள் செய்து பெற்றோர் மூதாதையர்களின் ஆசிகளையும் காசி ஸ்ரீவிசாலாக்ஷி, விஸ்வநாதர், அன்னபூர்ணேஸ்வரி, கயா மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹ ஆசிகளை பெற அன்புடன் அழைக்கிறோம்.

முதல் குழு சென்னையிலிருந்து 01-09-2001ம் தேதி சனிக்கிழமை புறப்பட்டு 12-09-2001ம் தேதி புதன்கிழமை சென்னை அடையும். இரண்டாம் குழு 08-09-2001 சனிக்கிழமை புறப்பட்டு 19-09-2001 புதன்கிழமை சென்னை அடையும்.

12 நாட்கள் யாத்ரை. நபருக்கு கட்டணம் ரூ.4560/- மட்டும். விரைவில் பதிவு செய்யவும்.

2ம் வகுப்பு இரயில் கட்டணம், தூய சைவ உணவு, தங்குமிடம் அலஹாபாத்திலிருந்து காசி செல்லும் 2 x 2 சூப்பர்டீலக்ஸ் பஸ் (அ) வேன் கட்டணம் உட்பட அலஹாபாத் காசி, கயா, சிரார்த்த / படகு செலவு தனி.

60 வயது பெண்கள் 65 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு இரயில் விதிப்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

சோழநாடு மற்றும் பாண்டிய நாடு 58 வைஷ்ணவ திவ்யதேசங்கள் மிகப்புராதனமான சைவ/வைணவ திருத்தலங்கள் 29-9-2001 சனிக்கிழமை அதிகாலை 2 x 2 சூப்பர் டீலக்ஸ் பஸ்சில் புறப்பட்டு 6-10-2001 சனிக்கிழமை இரவு சென்னை அடையும். 8 நாட்கள் யாத்திரை. பஸ் கட்டணம், தங்குமிடம் உட்பட. நபருக்கு கட்டணம் ரூ.2,650/- மட்டும்.





2001 ஜூன் 17
விஷு ஆனி 3
மலர் : 59
இதழ் : 46

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஆக்ஷன் த்ரில்லர் - அடுத்த கட்டம்!


பொதுவாக, நூறு நாட்கள் ஆகும்வரை ஒரு புதிய ஆட்சி விமர்சிக்கப்படுவதில்லை. புதிய அரசு இயந்திரம் இயங்க ஆரம்பித்து ஒரு சீரான கதிக்கு வருவதற்கு, அந்த நூறு நாள் அவகாசம் தருவது மரபு.

ஆனால், இன்றைய அ.தி.மு.க அரசு விஷயத்தில் அந்த மரபைக் கடைப்பிடித்தோமானால், நூறு நாட்கள் முடிவதற்குள் தமிழ்நாடே உண்டு இல்லை என்றாகிவிடும் போலிருக்கிறது! முதல்வர் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் அவ்வளவு தடாலடியானது மட்டுமல்ல; அந்த அளவுக்குத் தனிநபர் விரோதத்தையும் கசப்புணர்வையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

சட்டசபையில் எதிர்க்கட்சியினர் பேச ஆரம்பிப்பதற்குள்ளாகவே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு அவர்களை அமர்த்தி விடுகிறார்கள்.

"கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவே இல்லை" என்றும் முன்னாள் முதல்வருக்கு ஆதரவாக ஆந்திர முதல்வரும் பொய் சொன்னார் என்றும் சட்டசபையில் இந்நாள் முதல்வர் பேசுகிறார்! ஆந்திர முதல்வரின் ஆதாரபூர்வமான மறுப்பைக் கண்டதும் வேறு வழியின்றி ஜெ மௌனமாக வேண்டியிருக்கிறது. ஆந்திர - தமிழக உறவுகளை அபாயத்துக்கு உட்படுத்தக் கூடியது முதல்வரின் இந்த பொறுப்பற்றப் பேச்சு.

'கிருஷ்ணா திட்டத்தை நம்பிப், பயனில்லை; புதிய வீராணம் திட்டத்தை உயிர்ப்பிக்கப் போகிறோம்' என்ற அறிவிப்பும் தமிழக அரசிடமிருந்து 'வந்துள்ளது. வீராணத்தில் தண்ணீர்



நிறைவது காவிரியில் நீர் வரத்தைப் பொறுத்தது. காவிரி நீரோ, எப்போதுமே இழுபறி. மேலும், வழி நெடுக விவசாயிகள், தங்களுக்கும் நீர் வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். இதனால்தான் தி.மு.க அரசு இதை அமுல்படுத்தவில்லை. இந்நிலையில் அந்தப் பாசன ஏரியிலிருந்து தலைநகருக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை மீண்டும் தொடங்க என்ன அவசியம்? கடந்த ஆட்சி நிராகரித்ததை ஏற்று அமுல்படுத்திவிட வேண்டும் என்ற நோக்கம்தான்.

'பொது விநியோகத் துறை வசம் இருக்கும் அரிசி புழுத்துப் போயிருக்கிறது' என்று மற்றொரு ஆதாரமற்ற குற்றச்சாட்டை ஜெயலலிதா சட்டசபையில் தாக்கல் செய்ய, அதை முன்னாள் உணவுத்துறை அமைச்சர் ஆதாரத்துடன் மறுக்க, மீண்டும் முதல்வரின் வாய் அடைக்கப்பட்டுள்ளது.


நபார்டுக்குக் கடிதம் எழுதிய விவகாரத்திலும் உழவர் சந்தைகளை மூடும் விவகாரத்திலும் அவசரப்பட்டு அறிக்கைகள் விட்டு, பின்னர் அதைவிட அவசரமாக பல்டியடிக்க நேர்ந்திருக்கிறது.

போதாத குறைக்கு முதல்வர் புதுடெல்லிக்கு ஓடோடிச் சென்று 'மரியாதை நிமித்தம்' பிரதமரைச் சந்தித்து, சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் ஒரு பிரதியை அவர் கையில் கொடுத்துவிட்டு வருகிறார்!

"1991 முதல் 96 வரை முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு அப்போது ஏன் சர்க்காரியா கமிஷன் அறிக்கை குறித்து ஞாபகம் வரவில்லை?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் சுப்ரமண்யம் சுவாமி.

தமது பேரில் போடப்பட்ட வழக்குகளுக்கு ஈடாக, கருணாநிதி பேரிலும் வழக்குகள் போடப்பட்டு, அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தின்போதே வெளிப்படையாகப் பேசியவர்தான். தமது பிற வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறாரோ இல்லையோ, இந்தச் சூளுரையை மெய்ப்பிப்பதில் அவர் குறியாக இருப்பது தெளிவு.

சர்க்காரியா கமிஷன் அறிக்கையை நோண்டுவது, செத்த பாம்பை அடிப்பது போன்ற காரியம்தான் என்றாலும் அந்தச் செயலின் பின் உள்ள வன்மமும் அதிகாரிகள் பணி மாற்றத்தில் காட்டப்பட்ட பகிரங்கமான பாரபட்சமும் அரசு நிர்வாகத்தை ஒரு கலக்கு கலக்கியிருக்கிறது.



கண்காணிப்புத்துறை அதிகாரியை அவசர அவசரமாக மாற்றி; கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சியினர் நன்மதிப்பைக் கூட பெற்ற மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணனைக் கட்டாயக் காத்திருப்பில் வைக்கப் போக, மாநகராட்சி திட்டப் பணிகள் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன. ஃபைல்களில் கையெழுத்திடவே அஞ்சுவதாகவும்; எது சரி எது தவறு என்பது குறித்து குழம்பியிருப்பதாகவும் அரசு ஊழியர்கள் சொல்கிறார்கள்.

ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், 'தண்டனை டிரான்ஸ்ஃபர்'களைக் கண்டு சற்று ஆடிப் போயிருக்கிறார்கள். கடந்த ஆட்சியின்போது சஸ்பெண்ட் செய்யப்பட்ட நான்கு உயரதிகாரிகளின் தற்காலிகப் பணி நீக்கம் ரத்து செய்யப்பட்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்! இந்த நால்வரும் ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் வழக்குகளில் குற்றம் சாட்டப் பெற்றவர்கள்.

இத்தனைக்குப் பிறகு, முதல்வர் தமது நடவடிக்கைகள் யாவுமே வழக்கமானவைதான் என்று கூறுகிறார்! இதில் பழிவாங்கல் எதுவுமில்லை என்கிறார். கூடவே, 'டெல்லியில் பிரதமரிடம் விவரித்த அனைத்தையும் விளக்கிக் கூற முடியாது' என்று பொடி வைத்தும் பேசுகிறார்.

பிரதமரிடம் முதல்வர் வைத்த கோரிக்கைகளைப் பார்த்தால், புதிதாக, கொண்டாடத் தக்கதாக எதுவும் இல்லை. முதல்வரின் டெல்லி விஜயம் சர்க்காரியா கமிஷன் புனருத்தாரண யாத்திரைதான் என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது!

புதிய புதிய குற்றச்சாட்டுகள் பேரில் தாமரைக்கனி கைது; கைதாகி, சிறையில் உள்ள ரங்கநாதனைக் காண சிதம்பரத்துக்கு அனுமதி மறுப்பு என்று பட்டியல் தொடர்கிறது.

இப்படியே, கடந்த ஐந்தாண்டு காலத்தில் தாம் சந்தித்த வழக்குகள் குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் தமது பிரத்யேகப் பாணியில் ஜெ 'பதில்' சொல்லப் போகிறார் என்றால், வரும் ஐந்தாண்டு அ.தி.மு.க ஆட்சி முழுதும் சகிக்க முடியாத பழிவாங்கல் படலமாகவே அமையும்.

ஆக்ஷன் த்ரில்லர் ஆட்சியின் வன்முறைக் காட்சிகளைக் கற்பனை செய்யவும் அச்சமாயிருக்கிறது! ○



ராமேஸ்வரத்தில் கிரியை

நேபாள மன்னர் குடும்பத்தினரது இறுதிச் சடங்குகள், ராமேஸ்வரத்தில் நடைபெறுவது சிலருக்குப் புதிராக இருக்கலாம். ஆனால், ராமேஸ்வரத்துக்கும் நேபாள அரச குடும்பத்துக்கும் இடையிலான தொடர்பு பல நூற்றாண்டுகளாகவே இருந்து வருகிறது. நேபாள மன்னர் குடும்பத்தின் குல தெய்வங்களுள், ராமேஸ்வரம் ராம நாத சுவாமியும் உண்டு. மன்னர் குடும்பத்தினருக்கு ராமேஸ்வரம் கோவிலில் கருவறை வரை சென்று சாமி கும்பிடும் உரிமை இருக்கிறது.

அதுமட்டுமின்றி, நேபாளத்தில் புதிய மன்னர் பொறுப்பேற்கிறார் என்றால், ராமேஸ்வரம் கோவிலிருந்து பூர்ணகும்பமும், சால்வையும் அனுப்பி வைக்கப்படும்.

மகாபாரதத்தில், நேபாள நாட்டை 'யலம்பர்' என்ற மன்னன் ஆண்டதாக குறிப்பு வருகிறது. புத்த மதத்தை ஸ்தாபித்த பின், புத்தர், நேபாளத்தின் பல இடங்களுக்கும் சென்றிருக்கிறார். அசோகர், புத்த மதத்துக்கு மாறியபின், நேபாளத்துக்கு விஜயம் செய்து, நான்கு தூண்களை நிறுவினார். நேபாளத்தில் அதன்பின், புத்த மதம் மறைந்து, இந்து மதம் வளர்ச்சி பெற்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டில், நேபாளத்தை ஆண்ட 'மல்லர்'களின் காலம் பொற்காலம் என குறிப்பிடப்படுகிறது.

அதன்பின் நேபாளம் பல்வேறு சின்னஞ்சிறு நாடுகளாகப் பிரிந்து விட்டது. அவற்றுள் ஒரு நாடு கூர்கா நாடு. அந்நாட்டை ஆண்ட மன்னரான பிரிதிவி நாராயண ஷா, சிறு நாடுகளை வென்று, தம் ராஜ்ஜியத்தை விஸ்தரித்து, காட்மாண்டுவை, தலைநகராக்கிக் கொண்டார். பதினெட்டாம் நூற்றாண்டில், சீனாவுடன் போர் செய்து, சீனா பதிலடி கொடுக்க, நேபாளம் சீனாவுக்குக் கப்பம் செலுத்த வேண்டியதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஜங்பகதூர் ராணா என்பவர் மன்னர் ஷா பரம்பரையை எதிர்த்துக் குரல் கொடுத்து, 1846ல் ஆட்சியைப் பிடித்தார். அடுத்த ஒரு நூற்றாண்டுக்கு ராணா பரம்பரையினரது ஆட்சிதான் நேபாளத்தில் நடைபெற்றது.

1950ல் பிரச்னை ஏற்பட்டது. ஷா பரம்பரையைச் சேர்ந்த திரிபுவன், இந்தியாவுக்குத் தப்பி வந்துவிட்டார். கொய்ராலாவின் நேபாளி காங்கிரஸ் கட்சி, ராணா பரம்பரை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்திய அரசு தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்த, திருபுவன் மன்னர் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் ஏற்படுத்திய அமைச்சரவையில் ராணா பரம்பரையினரும், நேபாளி காங். கட்சியினரும் இடம் பெற்றனர். 1955ல், மன்னர் திரிபுவன் மரணமடைய, மன்னர் மகேந்திரா பொறுப்புக்கு வந்தார். இவர் பாராளுமன்ற ஆட்சி, தமக்குக் கீழே செயல்பட வழி செய்தார். ஆனால் 1962ல் அரசியல் கட்சிகளுக்குத் தடை விதித்து, கட்சி அடிப்படையில் இல்லாத பஞ்சாயத்து ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார்.

1972ல் மன்னர் மகேந்திராவின் மறைவுக்குப்பின், இளவரசர் பீரேந்திரா தம் இருபத்தி ஆறாம் வயதில் பதவிக்கு வந்தார். மறுபடி பாராளுமன்ற ஆட்சி முறை அமுலுக்கு வந்தது.

கடந்த பத்து ஆண்டுகளில் ஏழு பிரதமர்களுக்கு மன்னர் பீரேந்திரா, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- சி.எம்.



ஆனந்தம்

குளோபலைஸேஷன் கொடி பறக்கும் டைடல் காலத்தில் கூட்டுக் குடும்பத்தின் மேன்மையை, மென்மையாக, மிகைப்படுத்தாமல் காட்டியிருக்கிறார்கள்.

திருப்பதிசாமி குடும்பத்தின் ஆலமரம், அப்பா டெல்லிகணேஷ். ஆணிவேர், அம்மா ஸ்ரீவித்யா என்றால், விழுதுகள் மம்முட்டி, முரளி இருவரும். இவர்களின் இயல்பான பாச வலையில் அப்பாஸ், ஷ்யாம் என்று இரண்டு தம்பிகள்.

வற்றிப் போகாத ஆர்ட்டீசியன் ஊற்று மாதிரி, போலித்தனமற்ற பாசம் பாய்ந்து வருகிறது. அடடா! இப்படியொரு குடும்பம் நமக்கும் வாய்த்திருக்கக் கூடாதா என்று ஏங்கி, தியேட்டரில் இருப்பதையே மறந்து விடுகிறோம். வீட்டிற்கு வந்த மருமகன், தம்பியின் காதல் என்று குடும்பத்தில் எதிர்ப்படும் சின்னச் சின்னக் குழப்பங்களால், எங்கே குடும்பம் சிதறி விடுமோ என்று பதற வைத்து விடுகிறார் இயக்குனர். நல்லவேளை அப்படியொரு அபத்தம் நேராமல் இயல்பாய் முடிகிறது படம்.

குடும்பச் சுமையைத் தோள்களில் தாங்கி, நிதானம், கண்டிப்பு, கண்ணியம் என்று திருப்பதிசாமியாகவே லயித்து விட்டிருக்கிறார் மம்முட்டி. அண்ணனின் சுமைக்கு, கை கொடுக்கும் தம்பியாக கச்சித முரளி.

குழந்தையின் மருத்துவச் செலவுக்கு, முரளி பணம் எடுக்கப் போய், அதைப் பார்த்துவிடும் மம்முட்டி, தம்பி பொறுப்பில்லாமல், பணத்தைக் கையாள்வதாகக் கருதி, "ஆள் ஆளுக்கு பீரோவில் கை வைக்காதீங்க'' என்று அவசரப்பட்டு வார்த்தையைக் கொட்டிவிட, அதில் துவண்டு வாடும்போது முத்திரை முரளி. தவறை உணர்ந்து மருத்துவமனை தேடிப் போய், தம்பியிடம் மன்னிப்பு கேட்கையில் மெகா மம்முட்டி.

"எட்டு மணிக்கு பீர் குடிச்சிட்டு, பதினோரு மணிக்குச் சாப்பிட்டா வயிறு என்னத்துக்கு ஆகும்?" என்று கொழுந்தன்களைக் கடிந்து கொள்கிற அண்ணி (இன்னொரு அம்மா?) தேவயானியை, குளோனிங் எடுத்து வீட்டுக்கொரு அண்ணி கொடுக்கலாம்.


இன்னும் ரம்பாவில் தொடங்கி, 'அந்த' வேலைக்காரன் வரை போட்டி போட்டுக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள்.

எல்லா பாத்திரங்களையும் தூக்கி நிறுத்தியிருப்பது 'அ'வில் தொடங்கி 'ஃ'ல் முடியும் அல்பபெட் திரைக்கதையின் நேர்த்தி. இன்னும் மிச்சமிருக்கும் குடும்ப மதிப்பீடுகளைப் பிரதி எடுத்தது மாதிரியான எளிய காட்சிகள். அவற்றில் இடிக்காத யதார்த்தமான சென்டிமெண்ட் டச்.

கும்பகோணத்தில் நடக்கும் கதைக்கு, தஞ்சை வழக்கில் இத்தனை யதார்த்தமாக வசனம் எழுத முடியுமா? சாதித்திருக்கிறார் பிருந்தா சாரதி. சூழ்நிலையோடு பொருந்திப் போகிற பாடல்கள் என்றாலும் முதல் பாதியில், இரண்டுக்குக் கவலைப்படாமல் கத்திரி வைத்திருக்கலாம். தியேட்டரை விட்டு வெளியே வந்த பிறகும், செவியைச் செல்லமாய் வருடுகிறது 'பல்லாங்குழி' பாடல். நேர்மையாய் நகரும் படத்தின், குரல் வளை நெரித்த மாதிரி செருகலாய் ஒரு சண்டைக் காட்சி. இருந்தபோதும் தமிழ் வெகுஜன சினிமாவில் இப்படியொரு கவித்துவமான நேர்த்தியைப் பார்த்து எத்தனை காலமாயிற்று...! லிங்குசாமிக்கு தமிழ் கூறும் நல்லுலகம், ஒரு முறை ஜோராகக் கைதட்டலாம்.

— விஷுவல்தாசன்

• அபெல் அவெரஜ்



“எப்போது பார்த்தாலும், பாக்கு மென்று கொண்டே இருக்கிறீர்களே! இந்தப் பழக்கம் உங்களுக்கு எப்படி வந்தது?”

“நீங்கள் பேசுவது ஒன்றுமே புரிய வில்லையே.”

- இப்படி போக்ரான் குண்டு கேள்விகளை மூப்பனாரிடமே வீசினார்கள். அவரும் கோபப் படாமல் பதில் சொன்னார்.

“பெரியாருக்கு, சினிமா என்றாலே பிடிக் காது. அவரது சீடர் என்று சொல்லிக் கொள்ளு கிற நீங்கள், சினிமா எடுப்பதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறீர்களே!” இந்தக் கேள்வி ஆர்.எம். வீரப்பனுக்கு.

“‘பதினாறு வயதினிலே’ போன்ற படங் களின் மூலமாக, தமிழ்த் திரையுலகமே ஒரு புதுப்பாதையில் சென்று கொண்டிருந்தபோது, ‘சகலகலா வல்லவன்’, ‘பாயும் புலி’ போன்ற மசாலாப் படங்கள் எடுத்து, புதுப்பாதையைச் சீர்குலைத்தது நீங்கள்தானே?”

இந்தக் கேள்விக் கணையை எதிர் கொண்ட வர் ஏவி.எம்.சரவணன்.

இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டது வீரபாண்டியனோ, ரபி பெர்னார்டோ இல்லை. பள்ளிக் கூட மாணவர்கள். எங்கே, கேள்வி கேட்டார்கள்? சன் நியூஸ் சேனலில் ஞாயிறு தோறும் இரவு ஏழு மணிக்கு ஒளிபரப்பாகும். ‘சின்னச் சின்ன ஞாபகங்கள்’ நிகழ்ச்சியில்தான்.

இந்த நிகழ்ச்சி அண்மையில் அரை செஞ் சுரி போட்டது. இதைக் குறிக்கும் விதமாக, வி.ஜி.பி.யில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டது. ஆர்.எம்.வீரப்பன், கங்கை அமரன், நக்கீரன் கோபால் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஏற்கனவே ‘சின்ன சின்ன ஞாபகங்கள்’ நிகழ்ச்சியில் பங்கேற்ற வர்கள்தான் இம்மூவரும்).

இதுவரை ஒளிபரப்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்று வி.ஐ.பி.களைக் கேள்விகள் கேட்ட சுமார் முந்நூறு மாணவ, மாணவிகள் பிரத் யேகமாய் அழைக்கப்பட்டிருந்தனர். அவர் களிலிருந்து, குலுக்கல் முறையில் மூவரைத் தேர்ந்தெடுக்க, அம்மூவரும், மூன்று வி.ஐ.பி. களை மாலையிட்டு கௌரவித்தனர். ஸ்பெஷ லாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றொரு மாணவர், கேக் வெட்டினார்.

‘சின்ன சின்ன ஞாபகங்கள்’ நிகழ்ச்சி யின் பொறுப்பாளர் செந்தில் குமரன் 89ல் விகடன் மாணவர் பத்திரிகையாளர் திட்டத் தில் தேர்வு செய்யப்பட்ட ‘அவுட் ஸ்டாண்

சின்ன சின்ன ஞாபகங்கள்

டிங்' பத்திரிகையாளர். ஜீ.டி.வியில் பணிபுரிந்திருக்கிறார். அப்புறம் சிறிது காலம் இயக்குனர் ஆர்.வி. உதயகுமாரிடம் அசிஸ்டெண்ட். அதன் பிறகு சன் டி.வியில் சேர்ந்துவிட்டார். 33 வயது செந்தில் குமரனின், சின்ன சின்ன ஞாபகங்கள் இதோ.


"எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. தலைவர் திருநாவுக்கரசைப் பேட்டி காண மாணவ, மாணவிகள் சகிதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை அவர் வீட்டுக்குப் போனோம். படப்பிடிப்பு தொடங்கும் சமயத்தில் பவர் கட். 'கரண்ட் இதோ வந்துவிடும்' என்றார்கள். ஆனால் வந்த பாடில்லை. அனைவருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தார் திருநாவுக்கரசு. பிற்பகல் மணி நாலாகியும் கரண்ட் வரவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு ஜெனரேட்டருக்கு ஏற்பாடு செய்தோம். அதற்குள் கரண்ட் வந்துவிட்டது. உடனே ஜெனரேட்டர் காரருக்குப் போன் செய்து, 'ஜெனரேட்டர் வேண்டாம்' என்று சொல்லிவிட்டோம். ஆனால் எங்கள் துரதிருஷ்டம், மறுபடியும் பத்தே நிமிடத்தில் கரெண்ட் கட்! பிள்ளைகள் எல்லாம் சோர்ந்து போய் விட்டார்கள். குழந்தைகள் வீடு திரும்பவில்லையே என்று பெற்றோர்களிடமிருந்து டெலிபோன் வேறு. அன்று, கரண்ட் வந்து, நிகழ்ச்சியை முடித்து, பிள்ளைகளைப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு போய் விட்ட போது இரவு மணி பதினொன்று.

"திண்டிவனத்துக்கு அருகில் உள்ள தைலாபுரம் பண்ணைக்கே மாணவ மாணவிகளை அழைத்துக் கொண்டு போய், ராமதாஸ் பேட்டியை ஒளிப்பதிவு செய்தோம். "எங்கள் வீட்டு சிறப்பு விருந்தினர்கள் இந்தக் குழந்தைகள்" என்று சொல்லி, தாமே உணவு பரிமாறிய டாக்டர் ராமதாசின் பரிவு மறக்க முடியாத ஒன்று.

"ரங்கராஜன் குமாரமங்கலம், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க சம்மதம் சொன்னார் என்றாலும், அவருக்குத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் இருந்ததால் படப்பிடிப்பை ரத்து செய்ய நேர்ந்தது. விடை பெறும்போது, "அடுத்த முறை சென்னை வரும்போது, பா.ஜ.க. ஆபீஸுக்குப் போகாமல் இருந்தாலும் இருப்பேனே தவிர, உங்கள் நிகழ்ச்சிக்கு வரத் தவற மாட்டேன்" என்றார். ஆனால் அடுத்த முறை அவர்



• செந்தில் குமரன்
படம் : ஸ்ரீஹரி



அஸ்திக் கலசமாகச் சென்னை வந்தார் என்பது மறக்க முடியாத சோகம்.

"நான் இதுவரை எத்தனையோ பேட்டிகளில் கலந்து கொண்டிருந்தாலும் இதுதான் பெஸ்ட்" என்று சந்தோஷமாய்ச் சான்றிதழ் அளித்தவர் எஸ்.பி.பாலசுப்ரமணியன்.

"பெரியவர் சி. சுப்ரமணியத்தை மாணவ, மாணவிகள் பேட்டி கண்டு முடித்தவுடன், "நான் சொன்னதில் உபயோகமாக ஏதாவது இருந்ததா?" என்று கேட்டபோது, அவரது எளிமை கண்டு ஆச்சரியப்பட்டுப் போனேன். நிகழ்ச்சி ஒளிபரப்பான ஒரு வாரத்தில் சி.எஸ். மறைந்துவிட்டார்."

- எஸ். சந்திரமௌலி







காலியாகும்





• துரைசாமி



• பாக்கியம்



• திருமயம்



• இராதாமணாளன்



• சுந்தரம்

ஆயிரக்கணக்கில் திரண்டு நிற்கும் கிராம மக்கள் முன்பு, சுற்றுச் சூழல் போராளி மேதா பட்கர் பேசத் தொடங்குகிறார். அங்கே அசாதாரண அமைதி. "வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நதிக் கரையில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இன்னொரு பக்கம், கனத்த இதயத்தோடும் பெருகும் கண்ணீரோடும் உங்களைப் பார்க்கிறேன். நிலம், நீர், காற்றை நம்பி, பரம்பரையாக வாழும் மக்கள் நீங்கள். இவை உங்களுக்குச் சொந்தமானவை. அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ, ஆலை முதலாளிகளுக்கோ சொந்தமானவை அல்ல. அப்படி அவர்கள் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. நீர், நிலம், காட்டுவளம், இயற்கையே, நம் சொத்து. பணமின்றி நம்மால் வாழமுடியும். ஆனால் இந்த வளங்களின்றி வாழ முடியுமா?... சொல்லுங்கள்?"



• நிரம்பி வழியும் கிணறு

"முடியாது... முடியவே முடியாது.." அங்கே கூடியிருக்கும் மக்களின் மறுப்பொலி, அருகில் நின்று கொண்டிருக்கும் மலைக் குன்றுகளில் பட்டு எதிரொலிக்கிறது.

மேதா தொடர்கிறார்...

"இந்த நீர் வளத்தை மாசுபடுத்தும் உரிமையை இவர்களுக்கு யார் கொடுத்தது? உங்களுக்குத் தெரியும், உங்கள் நிலத்தைப் பற்றி, உங்கள் தண்ணீரைப்பற்றி... இதோ வைத்திருக்கிறீர்களே மஞ்சள் நிறத்தில், இதுதான் குடிக்கும் நீரா? இதைப் பருகி இங்கே, எத்தனை




• கழிவு நீர்...

• ...குடிநீர்...
என்ன வித்தியாசம்?

விஷம் கக்கும் விஸ்கோஸ் விவசாயம்

கோவை கிராமங்கள்!



• இடிந்துபோன இரியப்ப கவுடர்

காலம் உயிர்வாழ முடியும்? குளோரின் கழிவு நீர் பாசனத்திற்கு நிலத்தைக் கொடுத்தவர்கள் இப்போது வருந்தி என்ன பயன்? தொடர்ந்து மக்களைத் திரட்டிப் போராடுங்கள்... நீதிமன்றங் களை நம்ப முடியவில்லை. மக்கள் சக்தியை நம்புங்கள், போராடுங்கள். போராடுவீர்களா?"

"போராடுவோம்...! இறுதிவரை போராடுவோம்..." மக்கள் வெறியோடு ஆர்ப்பரிக் கிறார்கள்.





• மேதாபட்கர் • குலை தள்ளாத வாழை



இது எங்கோ நர்மதை நதி தீரத்தில் நடந்த சம்பவ மல்ல. கடந்த மார்ச் இருபத்து ஏழாம் தேதி... தமிழ கத்தின் தனிப்பெரும் ஆறுகளில் ஒன்றான பவானி ஆற்றங்கரையில் நடந்த கண்டனப் பொதுக்கூட்டம். குஜராத்தில், சர்தார் சரோவர் அணைத்திட் டத்தால் பலநூறு கிராமங் களைத் துறந்து, திக்குத் தெரியாமல் வெளியேறிக்

ஒரு பகீர் ரிப்போர்ட்

கொண்டிருக்கும் மண்ணின் மைந்தர்களுக்காகப் போராடி வரும் மேதா பட்கர், மூவாயிரம் கிலோமீட்டர் தாண்டி, தமிழகத்திற்கு வந்து, கோவை மாவட்டம் மேட்டுப் பாளையம் அருகேயுள்ள பெத்திக்குட்டை கிராமத்தில் நடந்த போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் அளவிற்கு அங்கே அப்படியென்ன தலைபோகும் பிரச்னை...?

இன்று நேற்றல்ல, ஏறக்குறைய பத்தாண்டு காலமாகத் தொடருகிறது. தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலையின் விஷக் கழிவு நீர்ப் பிரச்னை. பிரசாரப் பாடல்கள், தெரு நாடகம் என்ற அளவிற்குப் பிரபலமாகிவிட்ட இந்த பயங்கரம், இப்போது கழிவு நீர் விவசாயம் என்ற பெயரில் புதிய முகத்தோடு பூதாகர வடிவமெடுத்திருக்கிறது. நிலத்தடி நீரும், குடிநீரும் முழுவதுமாய்க் கெட்டு, ஆறு கிராமங்களில் வாழவே முடியாத அவல நிலைக்கு உள்ளாகி தவிக்கிறார்கள் மக்கள். எந்த நேரத்திலும் கிராமங்களை காலி செய்து விட்டு வெளியேற வேண்டிய நிலை.

இந்த கிராமங்களுக்கு நாம் மேற்கொண்ட ஆபத்தான பயணம் பற்றிக் கூறும் முன், ஆலகால விஷம் என்று வர்ணிக்கப்படும் ஆர்கனோ குளோரின் நெடியடிக்கும் ஒரு ஃப்ளாஷ்பேக்!

கோவை மாவட்டம், மேட்டுப் பாளையம் அருகேயுள்ள சிறுமுகையில், பவானி ஆற்றங்கரையின் மீது அமைந்துள்ளது தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் தொழிற்சாலை. 1962–ல் காமராஜர் ஆட்சியின் போது தொடங்கப்பட்ட இந்த ஆலையில், முதலில் ரேயான் நூலிழைகள்தான் தயாரிக்கப்பட்டன. ஆனால் அடுத்த சில ஆண்டுகளில், அதிக லாபம் தரக்கூடிய விஸ்கோஸ் செயற்கை நூலிழைகளைக் காகித மரக்கூழ் மூலம் தயாரிக்கும் பிரிவையும் நிர்வாகம் துவக்கியது. அதுதான் பிரச்னையின் ரிஷிமூலம். மரக்கூழ் கொண்டு தயாரிக்கப்படும் செயற்கை இழைப்பிரிவில், குளோரின் பிளீச்சிங் முறையைத்தான் பயன்படுத்தியாக வேண்டும். இதனால் இந்தப் பிரிவிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் 'டை' மற்றும் 'டிரை' குளோரினேட்டட் பீனால் போன்ற கொடிய விஷங்களும் சேர்ந்து வெளியேறும். (குளோரின் வகை விஷங்களின் படுபயங்கர விளைவுகளை அறிய, பெட்டிச் செய்தி பாருங்கள்.)



• அபாய அறிவிப்பு

மரக் கூழ் பிரிவு செயல்படத் தொடங்கிய போது, நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் தண்ணீரை பவானி ஆற்றிலிருந்து எடுத்துப் பயன்படுத்திவிட்டு, 38 ஆயிரம் கனமீட்டர் நீரைக் கழிவு நீராக அதே பவானி ஆற்றில் விட்டது. கழிவு நீரைத் திரும்ப உபயோகிக்கும் மறுசுழற்சி முறையை ஆலை நிர்வாகம் மேற்கொள்ளவில்லை.

தவிர இந்த ரசாயனக் கழிவு நீரைச் சுத்திகரிக்கவும் அதிகம் செலவாகும் என்பதால், பவ்யமாக பவானி நீரின் வழியே கழிவு நீரை வெளியேற்றுவது சுலபமாய் இருந்தது. விளைவு.. ஆற்று மீன்கள் ஆயிரமாயிரமாய் செத்து மிதந்தன. இதன் பிறகே விழித்துக் கொண்ட பொது மக்களும், விவசாயிகளும், விஸ்கோஸ் ஆலைக்கு எதிராகக் கொதித்தெழுந்தனர். ஒரு நதிக்கரை நாகரிகத்தையே கேள்விக்குரியதாக்கும் இந்தக் கொடூரத்தை எதிர்த்து அடுக்கடுக்கான பேரணிகளும், உண்ணாவிரதங்களும் போராட்டங்களும் வெடித்தன. சட்டசபை கூட இந்த விவகாரத்தால் பலமுறை கிடுகிடுத்தது. எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை ஆலை நிர்வாகம். (அரசுகளும்தான்)

பொறுக்க முடியாத மக்கள், உயர்நீதி மன்றப் படிக்கட்டுகள் ஏறி நீதி கேட்டனர். மரக் கூழ் பிரிவை இழுத்து மூடும்படி உத்தரவிட்

நெதர்லாந்தைச் சேர்ந்த GREEN PEACE என்ற சர்வதேச சுற்றுச் சூழல் அமைப்பு, 1996ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலையின் கழிவு நீரை மாதிரி எடுத்து, தனது பிரத்யேகச் சோதனைக் கூடத்தில் ஆய்வு செய்து, அறிக்கை கொடுத்தது. அதில் விஸ்கோஸ் கழிவு நீரில் Phenolic உட்பட பல கொடிய இரசாயனங்களின் கூட்டுக்கலவை இருந்ததை உறுதி செய்தது. இதில் 2,3,5-Trichloro phenol மற்றும் Nony phenol ஆகிய விஷங்கள் அதிகமாக இருந்ததை குறிப்பாகச் சுட்டிக் காட்டியது. இந்த Phenol மனிதன், மீன் மற்றும் கால்நடைகளின் ஹார்

மோன்களை நேரடியாக பாதிக்கும் தன்மை கொண்டது என்று பல்வேறு வரலாற்று படிப்பினைகளையும் சுட்டிக் காட்டியது.

கல்லீரல், செரிமானப்பாதை, கணையம், நுரையீரல், தோல், நிணநீர்ச் சுரப்பிகள் போன்ற உறுப்புகளை மெள்ள மெள்ள தாக்கக் கூடிய இந்த நஞ்சு, மண்ணிலிருக்கும் மண்புழு, நுண் உயிர்களையும் பூண்டோடு அழித்துவிடும் தன்மை கொண்டது. உடனடி விளைவுகளாக மனிதர், கால்நடைகளுக்கு மலட்டுத் தன்மை ஏற்படுவதையும் தடுக்க இயலாது என்கிறது க்ரீன்பீசின் அறிக்கை.

டது நீதிமன்றம். வேறு வழியின்றி, மரக்கூழ் பிரிவின் இயக்கத்தை நிறுத்திய விஸ்கோஸ் நிறுவனம், உச்சநீதிமன்றத்தில், உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்தது.

1999ம் ஆண்டு வெளியான தீர்ப்பைக் கேட்டு திடுக்கிட்டனர் மக்கள். 'சுத்திகரிக்கப்பட்டது என்றாலும் கூட ஆலைக் கழிவு நீரை பவானி ஆற்றில் விடக் கூடாது; ஆனால் அதைக் கொண்டு ஆலை நிர்வாகம் விவசாயம் செய்து கொள்ளலாம். அதுவும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விவசாயம் செய்ய வேண்டும்' என்பதுதான் அந்த திடுக்கிட வைத்த தீர்ப்பு.

விஸ்கோஸ் நிறுவனம் மீண்டும் களத்தில் இறங்கியது. மோதூர், சிட்டேபாளையம் கிராமங்களில், பப்பாளி பயிரிடுவதாகக் கூறி எழுநூறு ஏக்கர் நிலத்தை வாங்கி, பெரும் பகுதி நிலங்களைக் கம்பெனி வசமாக்கிக் கொண்டது. பிறகு சிறுமுகை தொழிற்சாலையிலிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தூரம் கனரகக் குழாய்களைப் பூமியில் புதைத்தது. கிராமங்களுக்குள் கழிவு நீரைப் பாய விட்டது.

குழாய் பதிக்கும் இயந்திரம் வந்தபோது அதன் முன்பாகப் படுத்து மறியல் செய்தனர் மக்கள். ஆனால், காவல்துறை உதவியுடன் அவர்களைக் கைது செய்து, கல்யாண மண்டபங்களில் அடைத்து வைத்துவிட்டு, குழாய்கள் அசுர வேகத்தில் பதிக்கப்பட்டன. கழிவு நீர்ப் பாசனத்தைக் கடந்த ஜூலை 99முதல் வெற்றிகரமாக அரங்கேற்றி விட்டது. அதன் பிறகுதான் இரும்பொறை பஞ்சாயத்திற்கு உட்பட்ட மோதூர், மூலையூர், சிட்டேபாளையம், அம்மன்புதூர், பெத்திக்குட்டை கிராமங்களின் நிலத்தடி நீரையும், மண்ணையும், காற்றையும் கபளீகரம் செய்து கொண்டது விஸ்கோஸ் கழிவு நீர்.

இதை நேரில் கண்டு, உறுதி செய்து கொள்ள சிட்டேபாளையம் பொதுமக்கள் பலருடன், மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்தபடி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் புறப்பட்டோம்..

சிட்டே பாளையம் கிராமத்தில் இருநூறு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் துரைசாமி வழிமறித்துக் கதறினார். "அய்யா.... தயவு செஞ்சு என் கிணத்தைப் பாருங்க.."

கோடையில் தண்ணீரே இல்லாமல் வற்றிவிடும் இவரது கிணறு நிரம்பி வழிகிறது! உபயம் விஸ்கோஸ் கழிவு நீரின் கசிவு. "என் கிணறு மட்டுமில்லீங்க, இங்கே இருக்கிற முக்கால்வாசிக் கிணறுகளோட நிலைமை இதுதானுங்க. நல்ல தண்ணியெல்லாம் சாக்கடையா மாறிப் போனதனால.. என் வாழை கருகிப் போச்சு.... கரும்பு இரங்கிப் போச்சு... இளநீரைக் குடிக்க முடியலே... இனிமே ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நிலத்தை அப்படியே போட்டுட்டேனுங்க. விஸ்கோசுக்கு என் நிலத்தையும் விக்கிறதைத் தவிர வேற வழியில்லீங்க.."

கிணறு நிரம்பினால் மகிழ்ச்சி வழிந்தோட வேண்டிய இந்த விவசாயியின் முகத்தில் வேதனை!

அங்கிருந்து அடுத்த கிராமத்திற்கு நகர்ந்தோம். தலையில் கைவைத்தபடி கிரியப்ப கவுடர். "போர் தண்ணி இப்படி மாறும்ன்னு கனவுல கூட நெனைக்கலீங்க.. இந்தத் தண்ணியக் குடிச்சுத்தான் எம்மாடு செத்துப் போச்சு.. பூமிய நம்பிப் பொழைச்ச நாங்க இனி யாரை நம்பிப் பொழைக்கறது?" தலையில் கை வைத்துச் சோர்ந்து போகிறார் இந்த முதியவர்.

வழியெல்லாம் விஸ்கோஸின் விவசாய நிலங்களில் நுங்கும் நுரையுமாகக் கழிவுநீர் பாய்ந்து கொண்டிருந்தது. உணவுக் குடல், வாய் வழியே வந்து விடுகிறமாதிரி மரண வாடை!

விஸ்கோஸ் விவசாய எல்லைக்குள் நுழைந்த நம்மை விரைந்து வந்து தடுக்கிறது ஜீப்பில் வந்த ஒரு பாதுகாப்புப் படை. கேமராவைப் பிடுங்க சிலர் முயற்சி செய்ய, அவர்களோடு முரண்டு பிடிக்கிறார்கள் கிராம மக்கள்... இறுதியில் மக்கள் சக்திக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டாலும் ஒரு பாதுகாப்பு ஊழியர் வழிநெடுகிலும் நம்மைப் பின்தொடர்ந்து வந்தார். நம்மைப் படமெடுக்கவிடாமல் தடுக்கவும் முயற்சி செய்து தோற்



• வழிமறிக்கும் விஸ்கோஸ் பாதுகாப்பு ஊழியர்கள்...

றுப் போனார்.

சிட்டேபாளையம் குடியிருப்பு பகுதிக்குள் நாம் வந்தபோது நம் கண்களை நம்மாலேயே நம்ப முடியவில்லை. ஆங்காங்கு போடப்பட்டிருக்கும் அடிபம்புகளுக்குப் பக்கத்திலேயே.. 'இந்தத் தண்ணீரைக் குடிக்கப் பயன்படுத்த வேண்டாம்' என்றொரு அறிவிப்புப் பலகையை, கிராம பஞ்சாயத்து நிர்வாகம் வைத்திருக்கிறது. குடிநீரைப் பரிசோதனை செய்து, சுகாதாரத் துறையே நிராகரித்துள்ள அடி குழாய்களை மக்கள் இப்போது பயன்படுத்துவதில்லை. ஒரு பொதுக் குடிநீர் அடி குழாயில், தண்ணீர் அடித்துப் பார்த்தபோது அதிர்ச்சியில் தொண்டை வரண்டு போனது. பம்ப் செய்யப்பட்டு கரும்புக்குப் பாய்ந்து கொண்டிருந்த விஸ்கோஸ் கழிவு நீரும், குடிநீர் அடி குழாயிலிருந்து வெளியேறிய நீரும் நிறம், திடம் எல்லாவற்றிலும் ஒன்றுபோல் இருப்பதைக் கண்முன் கண்டபோது உடல், ஒரு கணம் நடுங்கித்தான் போனது.. கடவுளே! குடிநீருக்கு இந்தக் கிராம மக்கள் என்ன செய்கிறார்கள்?

"இப்போ விஸ்கோஸ்தான் லாரியில் எங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து தர்றாங்க.. அதுவும் நாங்க போராடின பிறகுதான். அதுக்கு முன்னால் அவங்க தண்ணீர் கொடுக்கலே" என்கிறார் இரும்பொறை பஞ்சாயத்தின் முன்னாள் தலைவர் திருமயம். விஸ்கோஸிடம் ஏமாந்து நிலத்தை விற்றவர்களில் இவரும் ஒருவர்.

"தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் விதித்த முப்பத்துமூன்று நிபந்தனைகளை உதாசீனப்படுத்திவிட்டு, பவானி ஆற்றுக்கு அருகே வடசரிவு பூமியில் கழிவு நீர்ப் பாசனம் நடைபெறுவதால், தாழ்ந்த பகுதிகள் முழுவதுமாகக் கழிவுநீர் கசிவு ஏற்பட்டு, நிலத்தடிநீர் முழுவதும் விஷத்தன்மையாகி விட்டது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், மாசு கட்டுப்பாட்டு வாரியமும் சரி, அரசும் சரி விஸ்கோஸ் நிறுவனத்திற்கு விசுவாசம் காட்டி வருகின்றன.

"ஆண்டுக்கு அறுபத்தைந்து கோடிக்கு மேல் இந்த நிறுவனத்தால் வரி வருமானம் என்று வக்காலத்து வாங்கும் அரசாங்கம்... அதைப் போன்று பலமடங்கு நஷ்டமடைந்து வரும், விவசாயிகளைப் பற்றியோ... எதிர்கால சந்ததிக்கு நேரவிருக்கும் இழப்பு பற்றியோ கவலைப்படத் தயாராக இல்லை" என்று கொதிக்கிறார் தமிழக விவசாயம், நிலத்தடிநீர் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இராதாமணாளன்.

"இதே காகிதக் கூழ் கழிவு நீரால்தான் இந்திய வரலாற்றில் முதல் முறையாக கர்நாடக மாநிலம், நீலவாகலு கிராம மக்கள் அந்த கிராமத்தையே காலி செய்துவிட்டு கிளம்பினார்கள். அதே நிலை, எங்களுக்கும் வர நீண்டகாலம் பிடிக்காது. இங்கேயே மடிந்தாலும் சரி, இறுதிவரை போராடுவோமே தவிர ஒருபோதும் எங்களை வெளியேற்ற முடியாது" என்கிறார் பசுமை இயக்கத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியம்.

ஒரு பகுதிக்குக் கழிவு நீரைக் கொண்டு வரும் முன், அந்தப்பகுதி மக்களிடம் கருத்து கேட்க வேண்டிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தங்களிடம் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை என்று அடித்துச் சொல்கிறார்கள் பாதிக்கப்பட்ட கிராம மக்கள்.

"தென்னிந்திய விஸ்கோஸின் மரக்கூழ் பிரிவை முழுவதுமாக இழுத்து மூடினாலன்றி, இரும்பொறை பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமங்களைக் காப்பாற்ற முடியாது. இல்லையெனில், அடுத்த ஐந்தாண்டுகளில் இந்த மாவட்டமே, மரண வாசலாக மாறிவிடும். இதை இந்த ஊர்வாசியாக உணர்ந்து சொல்கிறேன்" என்கிறார் விஸ்கோசில் பணியாற்றி ஓய்வு பெற்ற சுந்தரம்.

பாதிக்கப்பட்ட கிராம மக்களின் இப்போதைய நம்பிக்கை அமைச்சர் ஏ.கே. செல்வராஜ்தான். மேட்டுப்பாளையம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வென்று, வீட்டுவசதிவாரிய அமைச்சராகியிருக்கும் இவர், காகிதக்கூழ் கழிவு நீரை எதிர்த்து, எதிர்க்கட்சியாக இருந்தபோது, களத்தில் இறங்கி போராடினாராம். இந்த நம்பிக்கையை அமைச்சர் காப்பாற்றுவாரா...?

தாமதிக்கிற ஒவ்வொரு நாளும், பாதிப்பின் எல்லை விரிந்து கொண்டேயிருக்கிறது!

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள்: **ராஜன்**

✉ ஆட்சி மாறிவிட்டது என்ற நிலையில் தங்களுடைய நிலையையே மாற்றிக் கொள்ளும் பல பத்திரிகைகள் நடுவில் தடுமாறாது நிற்கும் கல்கியின் உறுதியைப் போற்றுகிறோம்.

உடுமலைப்பேட்டை, **இ.குமாரராஜா**

✉ யாரங்கே! ரோஜா மாலை ஒன்று வாங்கி வாருங்கள்! ஹைகூ கவிதைகளுக்கான இரண்டு பக்கங்களை அழகாக லே-அவுட் செய்தவருக்கு அணிவித்து, வாழ்த்து தெரிவிக்க வேண்டும்! ...ம்...சீக்கிரம்!

சென்னை, **தெய்வசிகாமணி**

✉ அற்புதமான அட்டைப் படங்களை அடிக்கடி 'கல்கி'யில் கண்டு மனம் லயித்திருக்கிறேன். அதேபோல் தெய்வீகமான அட்டைப் படங்களைக் கண்டு மெய்சிலிர்த்துமிருக்கிறேன். இவ் வார காஞ்சி ஜெயேந்திர சரஸ் வதி சுவாமிகளின் அட்டைப்படம் இருவித அனுபவங்களையும் என்னுள்ளே ஏற்படுத்தியது.

மதுரை, **வி.பரமசிவம்**

✉ சிதா ரவியின் 'மூன்றாவது பாட்டு' ஒரு ஆதர்ஸ இசைக் குடும்பத்தின் அந்தரங்கங்களை அப்படியே முன்னுக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டதே அதுவும் ஓவியப் பிதாமகர் கோபுலு, சாரதாவின் ஆதங்கத்தையும், மிருதங்கம் கேசவன் மோனத்தையும் என்னமாய் காட்டிவிட்டார். அடடா!

சென்னை, **பவானி கோபாலன்**

✉ 'இதயத்தால் இணைந்த குடும்பங்கள்' படித்த பின்பு, கல்கி வாசகர்கள் அந்தக் குடும்பங்களுக்கு இன்னொரு முறை இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிப்பார்கள்.

சென்னை, **சி.தெ. இளமுருகன்**

✉ ஆர்.கே. நாராயண் பற்றி ரா.கி.ரங்கராஜன் எழுதிய கட்டுரையில், 'சுவாமியும் சினேகிதர்களும்', 'இருட்டு அறை'யும் 'ஆனந்தவிகடனி'ல் தமிழில் மொழி பெயர்த்தவர் யாரென்று ஞாபகம் இல்லை என்று எழுதியிருந்தார். நாராயணின் எழுத்துக்களை அழகாக மொழி பெயர்த்தவர், எனது மாமா வி. கிருஷ்ண ஸ்வாமி. 'மதுரம்' என்ற புனை பெயரில் எழுதியிருந்தார்.

சென்னை-20, **பத்மா சுப்ரமணியம்**

✉ 'சித்திரமும் மௌஸ் பழக்கம்' என்ற கட்டுரையில் பயிற்சிக் கட்டணம் பாடத்திற்கேற்ப ரூ.24 ஆயிரத்திலிருந்து ஹாஸ்டல் உணவு உட்பட ரூ.75 ஆயிரம் என்று வந்திருக்க வேண்டும்.

சென்னை, **நவீன்**

✉ ஜெயலலிதா ஆட்சியில் அமர்ந்து கிட்டதட்ட மூன்று வாரங்களாகியும் 'இன்னும் அவர் நல்லது செய்வார்; நல்லாட்சி தருவார்' என்று பல பத்திரிகைகள் கானல்(நீர்) கனவுடன் எதிர்பார்த்து ஏமாந்து இருக்க... கல்கி மட்டும் துணிந்து ஜெயலலிதாவின் ஒரு வார ஆட்சியிலேயே, என்னென்ன குறைகள் என்பது பற்றி தலையங்கத்தில் பட்டியலிட்டது 'சபாஷ்' சொல்ல வைக்கிறது.

பூனாம்பாளையம், **ஆர்.பி.ஜெயச்சந்திரன்**

யாரங்கே? ...ம்... சீக்கிரம்!



வட்டமேஜை

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2001

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!



முதல் பரிசு – ரூ. 5000
இரண்டாம் பரிசு – ரூ. 3000
மூன்றாம் பரிசு – ரூ. 2000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

விதிமுறைகள் :

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2001'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15.**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 5 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

— ஆசிரியர்

ஸ்ரீரங்கத்தில் அன்னை சாரதாம்பாள் ஆலயம்!



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 33வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபினவ நருசிம்ம பாரதி ஸ்வாமிகளின் சிஷ்யராய் வாழ்ந்து மறைந்தவர் வழக்கறிஞர் டி.கே. பாலசுப்ரமணிய அய்யர். அவர்தம் சொத்துக்கள் அனைத்தையும் இறைப் பணிக்காகவே அர்ப்பணித்தவர். ஸ்ரீரங்கம், அம்மா மண்டபம் ரோட்டில் இருந்த அவரது வீடு மற்றும் அதனை ஒட்டியுள்ள தோட்டம் ஆகியன சற்றே திருத்தியமைக்கப்பட்டு 1933லிருந்து ஸ்ரீ சங்கர குருகுலமாக விளங்கி வருகின்றன.

ஸ்ரீ ஆதிசங்கரருக்கும், தமது குருவான ஸ்ரீ நருசிம்ம பாரதி ஸ்வாமிகளுக்கும் சன்னதி அமைத்திருந்தார் அய்யர். அதன் பின்னர் 1938ல் அன்னை ஸ்ரீ சாரதாம்பாள் சன்னதியை உள்ளடக்கிய ஸ்ரீ அதிசங்கரர் ஆலயமும் அமைக்கப்பட்டது. தற்போது இவ்வாலயம் புதிய வடிவத்தில் அழகிய மாற்றம் பெற்றுள்ளது.

அன்னை சாரதாம்பாள் ஆலயத்தின் முகப்பு வளைவு 'ராஜராஜேஸ்வரி த்வாரம்' என அழைக்கப்படுகின்றது. வளைவின் மேல் மத்தியில் இருபுறத்திலும் லக்ஷ்மி சரஸ்வதியுடன் கூடிய ஸ்ரீராஜராஜேஸ்வரி கம்பீரமாகக் காட்சி தருகின்றாள். வளைவின் கீழ் தளத்தில், முகப்பில் வடபுறம் ஸ்ரீ வித்யா கணபதி சன்னதியும், தென் புறம் ஸ்ரீ பாலசுப்ரமணியர் சன்னதியும் அமைந்துள்ளன.

சிற்ப சாஸ்திரத்தில் 'அணி வெட்டி' என தனித்துக் குறிக்கப் பெற்றுள்ள அழகிய தூண்கள் மஹா மண்டபத்துக்கு எழிலூட்டுகின்றன. மஹா மண்டபத்தில் ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் பதினான்கு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மேற்கூரையில் பஞ்ச பூதத்தலங்கள் மற்றும் காசி, இராமேஸ்வரம், காலடி ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களும் சித்திரங்களாய்த் தீட்டப்பட்டுள்ளன.

அன்னை சாரதாம்பாளுக்கு, வடபுறம் ஸ்ரீ ஆதிசங்கரரும், தென்புறம் ஸ்ரீ நருசிம்ம பாரதி ஸ்வாமிகளும் அமிருத சிலையென்னும் பளிங்குக் கல்லில் அச்சு அசலாய் நேரில் பார்ப்பது போலவே காட்சி தருவது ஆலயத்தின் சிறப்பம்சம்.



* சாரதாம்பாள்

ஆலயத்தின் கீழ் வடபுறம் அமைந்துள்ள நவக்கிரகங்களின் சன்னதி, ஆகம விதிகளில் கூறப்பட்டுள்ள மிகச் சிறந்த இயல்புகளுடன் அமைந்துள்ளது.

எண் கோண வடிவில் விமானம் மற்றும் கலசத்துடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள நவக்கிரக சன்னதியின் மேல் தளத்தில் அஷ்டதிக்பாலர்கள் இடம் பெற்றுள்ளது புதுமையான அமைப்பு.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



மணம், மணமறிய

திரைப்படத்தின் ஒலி நாடா வெளியீட்டு விழாவில் மெல்லிய சோகம் விரவியிருந்தாலும், மற்றபடி திட்டமிட்டபடி சிறப்பாகவே நடைபெற்றது.

சோகத்துக்குக் காரணம் பாதிப் படப்பிடிப்பில் இறந்த இயக்குனர் மணி சங்கரின் நினைவுகள்.

நாளிதழ் மற்றும் பத்திரிகைகளின் புகைப்படக்காரர்களின் இலக்கு, பெரும்பாலும் மேடையில், ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த சிவப்ரியா தான்.

''என்ன சார் எப்படியிருக்கா எங்க ஹீரோயின்?'' என்று படத்தின் உதவி இயக்குனராக அறிமுகமாகி இயக்குனராக உயர்வு பெற்ற வேணு, நிருபர் துரைராஜைக் கேட்டவுடன் அந்தப் பகுதியில் இருந்த திரையுலகப் பிரமுகர்கள் பலரது கவனமும் துரைராஜின் மீது பதிந்தது.

காரணம், சினிமாப் பத்திரிகையொன்றின் ஆசிரியரான துரைராஜின் கணிக்கும் திறமை அசாத்தியமானது. ஒரு படத்தைப் பார்த்தவுடனேயே ஏ, பி, ஸி சென்டர்களில் அவை எவ்வளவு நாட்கள் ஓடும் என்று சொல்வார். அது பெரும்பாலும் அப்படியே பலித்துவிடும். இந்தத் திறமை கேள்விப்பட்டு சில தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் அவரை மொய்த்ததுண்டு. ''இந்தக் கதையைப் படமா எடுத்தா ஓடுமாண்ணே?'' என்ற கேள்வியோடு.

''அடப்போங்க சார். கதையை வச்சுக்கிட்டு நான் என்ன சொல்ல? எப்படி எடுக்கிறதுன்ற வித்தை தெரிஞ்சாத்தானே மனசிலே கருத்து தோணும். படத்தை முடிச்சிட்டு வாங்க. பாத்துட்டுச் சொல்றேன்'' என்பார் துரைராஜ்.

''நியாயம்தானே?'' என்றவாறு நகர்ந்தவர்களும் உண்டு.

''எல்லா பிலிம் ரோலையும் தீர்த்து முடிச்சப்புறம் உங்க கருத்து எவனுக்கு வேணும்?'' என்று கோப வார்த்தைகளைக் கொட்டியபடி நகர்ந்தவர்களும் உண்டு. என்றாலும் அவரது கணிப்புத் திறமை பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று.

துரைராஜ் சிவப்ரியாவைச் சில கணங்கள் உற்றுப் பார்த்தார். ''பவுடர் கூடப் பூசிக்காமல் துடைச்சுவிட்ட மாதிரி வந்திருந்தாலும் ஒரு தனி அழகு இருக்குது இந்தப் பொண்ணுகிட்டே. அந்த அழகு, முக்கியமா இவ கண்களிலே தெரியுது. அழகு ஒரு புறமிருக்க, இவகிட்டே ஒரு கம்பீரம் இருக்குது. அதுவே இவளுக்கு ஒரு மைனஸாகவும் போகலாம். நம்ம ஜனங்களுக்கு கதாநாயகின்னா இன்டர்வெல் வரை ஜீன்ஸ் போட்டுக்கிட்டு சவடாலாகப் பேசினாலும் அதுக்கப்புறம், அவ புடைவை கட்டிக்கிட்டு, பெண்மை ததும்ப வெட்கப்படணும். ஒரு சீனிலேயாவது கண்ணிலே குளம் வெட்டிக்கணும். இந்தப் பொண்ணைப் பார்த்தா 'என்ன வருத்தம் வந்தாலும் அதை எனக்குள்ளே ஏத்துக்கிட்டு முழுங்க முடியும்'னு சொல்ற மாதிரி தெரியுது. அதனாலே நிறைய வருஷம் இந்தப் பொண்ணு, தமிழ் சினிமா ஃபீல்டிலே நிலைச்சு நிக்க முடியும்னு தோணல்லே'', சிவப்ரியா இதைக் கேட்கும் தூரத்தில் இல்லை. அப்படி இருந்திருந்தால், ஏதாவது குழந்தைகளைச் சந்தித்தால் கொடுப்பதற்காக தன் கைப்பையில் வைத்திருக்கும் சாக்லெட்களிலிருந்து ஒன்றையெடுத்து அவர் வாயில் போட்டிருப்பாள். ''ரொம்ப வருஷம் இல்லை சார். இன்னும் நாலே நாளிலே ஃபீல்டைவிட்டே ஒதுங்கிடுவேன்'' என்று



10

ஆவல்...

அருண் சரண்யா

உற்சாகப் படபடப்புடன் நாக்கு நுனியில் நர்த்தன மாடும் வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள பெரிதும் சிரமப்பட்டிருப் பாள்.

ஆனால் அவள் எதைத் தவிர்க்க நினைத்தாளோ அது அந்த நிகழ்ச்சியில் நடந்தது. தெளிவாகவே அவள் விழா நிர்வாகிகளிடம் கூறியிருந்தாள் தான் அந்த நிகழ்ச்சியில் பேசப் போவ தில்லையென்று. எனினும் திடீரென்று கூட்டத்தில் ஒரு பகுதியினர் சிவப்ரியா பேசியே ஆக வேண்டுமென்று குரல் கொடுக்க, வேணுவும் "ப்ளீஸ்" என்றபடி நிர்ப்பந் திக்க, வேறுவழி யின்றி மைக்கைப் பிடிக்கும்படியானது.

"ஒரு திரைப்படத்தில் கிட்டத்தட்ட நடித்து முடித்து விட்டேன். என்னைப் பொருத்தவரை இது ஒரு கனவு மாதிரியே தோன்றுகிறது. திரையுலகை அற்புத

கெலடாஸ்கோப், பலரது லட்சிய இலக்கு, மாயாஜாலக் கனவு என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் என்னைப் பொருத்தவரை இங்கே என்னைப் பெரிதும் கவர்ந்தது, இந்தத் திரையுலகம் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது என்பதுதான். எத்தனை குடும்பங்கள் அதை நம்பியிருக்கின்றன என்பதை அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டபோது பிரமிப்பாக இருந்தது. இதற்குமேல் திரைப்பட உலகத்தைப்பற்றி ஆழ்ந்து விமர்சிக்கும் அளவு எனக்கு அனுபவம் போதாது".

ஒரு சிறு இடைவெளியை சிவப்ரியா அளித்தபோது கூட்டத்தினரின் ஒட்டு மொத்த கவனமும் தன்மீது படர்ந்திருந்ததை உணர்ந்தாள்.

தொடர்ந்து, அமரராகிவிட்ட மணிசங்கரின் திறமையை, அவரது கண்ணியமான அணுகுமுறையை, ஒவ்வொரு ஃப்ரேமையும் கலைநயத்தோடு உள்வாங்கிக் கொண்டு ரசனையோடு அவர் எடுத்த காட்சிகளையும், யூனிட்காரர்களை சக குடும்பத்தினரைப் போல அவர் நடத்தியதையும் ஒவ்வொரு நிகழ்ச்சியோடு அவள் விளக்கி முடித்து விட்டு 'வாய்ப்புக்கு நன்றி' என்று கூறிமுடித்த போது கரவொலி குறையின்றி எழுந்தது.

ஒரு ஜோடிக் கண்களில் மட்டும் மாற்ற முடியாத ரணம். வேணு குமுறிக் கொண்டிருந்தான். 'இவள் கூறியதன் உள்ளர்த்தம் என்ன? நான் கண்ணியமற்றவன், எனக்கு இயக்கும் திறமை போதாது, யூனிட்காரர்களை வேறு ஆளாக நினைக்கிறேன் என்பதுதானே?'

சிவப்ரியாவின் யதார்த்தமான அஞ்சலி, வேணுவைப்பற்றி ஒருவாக்கியம்கூட ஒப்புக்குப் பேசப்படாத ஒரே காரணத்தினால், திசைமாறிப் புரிந்து கொள்ளப் பட்டது அவனால்.

நிம்மதியாகத்தான் இருந்தது. அதே சமயம் புதிராகவும் இருந்தது சிவப்ரியாவுக்கு. தான், வரவில்லையென்று கூறியபோது "அதெப்படி நீங்க வராம இருக்கலாம்?" என்று உரிமையுடன் ஒலிநாடா வெளியீட்டு விழாவுக்கு வரவற்புறுத்திய வேணுவிடம் ஏன் இந்த திடீர் மாற்றம்?'

"உங்களுக்கு எக்கச்சக்கமான ஆர்வம் இருந்தா நீங்களும் ப்ரிவியூவுக்கு வரலாம்" என்றான் மொட்டையாக.

அந்த தொனி சிவப்ரியாவுக்கு வியப்பை உண்டாக்கியது. எடுத்த சில காட்சிகளை, மணி சங்கர் அவ்வப்போது திரையிட்டுக் காட்டியிருந்தார் என்றாலும் முழுத் திரைப் படமும் எப்படி வந்திருக்கிறது என்பதை அறிய ஒரு துடிப்பு இருக்கவே செய்தது. எனினும் கூடவே ஒரு நினைப்பும் ஓடியது. முன் திரையிடல் காட்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்த அதே ஞாயிற்றுக்கிழமை யன்றுதான் டாக்டர் ராம்ஷேகரின் பிறந்த நாள் வருகிறது.

கடந்த சில வருடங்களாகவே அவளும் மாமியுமாக அந்த நாளில் மாலை வேளையில் முருகன் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவிட்டு வருவது வழக்கம். ராம்ஷேகர் உடன் ஒருபோதும் வந்ததில்லை.

'இங்கே மனசிலேயே வேண்டிக்கிட்டாலும் அந்த முருகன் எனக்கு அருள் செய்வான். கோவிலுக்கு வர நேரத்திலே யாராவது நோயாளியைக் குணப்படுத்த முடிஞ்சா, அதுவே கடவுள் சேவைதான்" என்பார் நறுக்கென்று.

"இதிலே என்ன இருக்கு சிவப்ரியா. கார்த்தாலே கோவிலுக்குப் போகலாம். சாயங்காலம் விழாவுக்குப் போகலாம்" என்று சுலபமாகத் தீர்வு கூறினாள் மாமி.

டாக்டர் ராம்ஷேகர் எப்படியும் விழாவுக்கு வரப் போவதில்லை. மாமியைக் கூப்பிடத் தயக்கம் உண்டானது. ஏற்றுக் கொள்வாளா, முகம் சுளிப்பாளா என்று தெரியவில்லை. தன்னை ஏற்றுக் கொண்டிருந்தாலும் இன்னும் மாமி தனது சினிமா நடிப்பு முடிவை, முற்றுமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகவே தெரிந்திருந்தது. "சாயந்திரம் என் மாமா பெண் வீட்டில் விசேஷம்மா. அதுக்குப் போகணும்" என்று மாமியே கூறி அவளது சிக்கலைத் தீர்த்து வைத்தாள்.

"என்னமோ பணப்புழக்கம் அதிகமாகப் போவுதுன்னாங்க... ஒண்ணையும் காணுமே..."

"எப்படிச் சொல்றே?"

"நேற்று மூணு பர்ஸ் பிக்பாக்கெட் செய்தேன். ஒண்ணில் எட்டணாவும், ஒண்ணில் ஒண்ணரை ரூபாயும், மூணாவது பர்ஸில் ரெண்டு ரூபாயும்தான் இருந்தது."

- உ. ராஜாஜி



கோவிலில் அதிகக் கூட்டம் இல்லை. காலை ஏழு மணி என்பதும் ஒரு முக்கியக் காரணம். முருகன் சன்னதியில் சிவப்ரியா மெய்மறந்து நிற்கையில் மாமி பிராகாரம் சுற்றக் கிளம்பி விட்டிருந்தாள்.

கண்களைத் திறந்து பார்த்தபோது அருகே நின்று கொண்டிருந்த ஒரு பெண், சிவப்ரியாவின் கவனத்தைக் கவர்ந்தாள்.

சிவப்ரியாவின் வயதுதான் இருக்கும். சாதாரணமான தோற்றம்தான். உடை உடுத்துவதில் நல்ல ரசனை உள்ளவள் என்பது நன்கு தெரிந்தது என்றாலும் சிவப்ரியாவின் கவனத்தை அவள் ஈர்த்ததற்குக் காரணம் அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து வழிந்து கொண்டிருந்த கண்ணீர். சற்றே உற்று நோக்க அவள் உடல் நடுங்குவதையும், தள்ளாடுவதையும் கண்டு திடுக்கிட்டாள். சிவப்ரியா பயந்தது போலவே அவள் மயக்கமடைந்து விழவிருக்க, சிவப்ரியா அவளை கைத்தாங்கலாகப் பற்றி ஓரமாக அமர வைத்தாள். நாடி பிடித்துப் பார்த்தாள். கண்விழித்த அந்தப் பெண்ணிடம் "உங்களுக்கு ஷுகர் உண்டா?" என்று கேட்டாள் சிவப்ரியா. உண்டு என்பது போல் அவள் தலையாட்ட, மாமிக்குக் குரல் கொடுத்து வரவழைத்தாள். மாமி சட்டென்று வாழைப்பழம் மற்றும் தண்ணீருடன் வந்தாள். சிவப்ரியா அவளை சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள்.

சில கணங்களில் அவள் உடல்நிலை சீராக ஆனது. "ரொம்ப தாங்ஸ்" என்று சிவப்ரியாவிடம் சொன்ன அந்தப் பெண்ணின் பார்வை, மாமியின் பக்கம் சென்றதும் சற்றே பரபரப்படைந்தது. "நீங்களா?" என்றாள்.

உடனே எழுந்திருக்க முயன்றாள்.

"கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடும்மா. அப்புறம் நானே, உன்னை உன் வீட்டில் கொண்டு விடறேன்'' என்றாள் மாமி, அன்பான கண்டிப்புடன்.

சிவப்ரியா திகைப்பதைப் பார்த்து "உனக்குத் தெரியாதா? இவதான் ஆனந்தின் பெண்டாட்டி. பேரு உஷா" என்றாள். மாமியின் பார்வை தன்னையும் உஷாவையும் மாறி மாறிப் பார்த்ததில் ஓர் ஒப்பிடும் நோக்கு இருப்பதை சிவப்ரியாவால் உணர முடிந்தது.

(தொடரும்)



எனக்குள் மட்டும்...

புல்லின் மேல்
பூ விழும் சப்தம்
என் மனத்தில் மட்டுமே
அதிரும்.

கரையின் கால்களில்
நுரைப்பூக்கள் நூதன
வழிபாடு—
அலைகடலின் உள்நோக்கம்
எனக்கே படமாய் விரியும்.

மலையின் தலைதுவட்டும்
மேகம்
மசக்கையான ரகசியம்
எனக்கு மட்டுமே புரியும்

பூமியில் விழும் மழை
மண்ணின் மார்பில்
மயங்கிப் பேசும் மழலை
என் கவிதை மட்டுமே
அறியும்.

— பொன்னியின்
செல்வன்

தேன்கூடு



இப்போதைக்கு நாலு!

மானாமதுரை ரயில்வே கேட்டைக் கடந்ததும் ராமேஸ்வரம் சாலையிலுள்ள ஒரு பெட்ரோல் பங்க் அருகில் இந்தப் பனைமரம் நிற்கிறது. காங்கிரசின் ஐவிரல் சின்னம் போல நின்ற ஐந்து கிளைப் பனை மரத்தின் கட்டை விரல் பகுதி போலிருந்த ஒரு கிளை- பாரம் தாங்காமல் பிய்த்துக் கொண்டு விழுந்து விட்டதாம்!


– இரா. கல்யாணசுந்தரம்,
மதுரை.

'ஐ'யோ பூச்சாண்டி!

ஈராக் நாட்டைச் சேர்ந்த அப்துல்லா அல் பாங்கி தமது விழிகளை உருட்டி திரட்டி, பார்ப்பவரைப் பயப்படும்படி செய்கிறார். அவரது விழிகள் உருண்டு திரண்டு கண்ணுக்கு வெளியே பிதுங்கி வருகின்றன. பிறகு சாதாரண நிலைக்குச் சென்று விடுகின்றன. தமது கண்களின் தசைகளை அவர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலேயே இதைச் செய்ய முடிகிறது என்கிறார் அல் பாங்கி.

ஆதாரம்: பிசினஸ் லைன் 9.5.2001
தகவல்: ஆர். லக்ஷ்மி





மாங்கல்யம் தந்துனானேனா!

திருமணத் தடை உள்ளவர்கள் தங்களது பெயர் மற்றும் நட்சத்திரத்தை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி கேரளாவில் உள்ள ஸ்ரீ உமா மகேஸ்வரசுவாமி கோவிலுக்கு அனுப்பி வைத்தால் அக்கோவில் நிர்வாகத்தினர் சிறப்பு பூஜை செய்து தங்கள் செலவிலேயே பிரசாதமும் அனுப்பி வைக்கின்றனர்.

ஸ்ரீ உமா மகேஸ்வர சுவாமி திருக்கோவில்,
தபால் பெட்டி எண்: 333
கொல்லம் – 691001.

– பா. கிருஷ்ணகுமார்



தேன்கூடு

மும்பையில் 1999-ல் பதினாறு போலீஸ்காரர்கள் வேலைக் கடுமையினால் உயிர் இழந்ததை அடுத்து, உயர் அதிகாரிகளுக்குப் பீதி ஏற்பட்டது.

அப்போது டி.ஜி.பி.ஆக இருந்த அரவிந்த் இனாம்தார், ஆரோக்கிய கணக்கெடுப்பு ஒன்றை ஏற்பாடு செய்து, சுமார் 450 போலீஸ்காரர்களைப் பரிசோதனை செய்து பார்த்தார். பலருக்கு ஹைப்பர்-டென்ஷன், அதிக ரத்தக் கொதிப்பு போன்ற கோளாறுகள் இருந்தன. பலரும் வேலைக்கு அருகதையில்லாதோர் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

40 வயது தாண்டிய போலீஸ்காரர்களுக்கு ஆரோக்கிய அட்டை கொடுக்கப்பட்டு, அவர்களுடைய உடல்திறனைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.


ஆனால் இப்போதும் போலீஸ்காரர்கள் வேலைப் பளுவால் திடீர் மரணம் அடைவது தொடர் கதையாகி வருகிறது. சமீப காலத்தில் இறந்த போலீஸ்காரர்களின் சராசரி வயது 32தான்!


ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா
கே. ஸ்ரீநிவாசன்

கலந்'தார்'... அமைத்'தார்'!

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜான்லூடன் மெக்டம் என்பவர் முதன் முதலில் கருங்கல் ஜல்லிகளோடு தாரைக் கலந்து சாலைகளை அமைத்தார். இந்த முறை இவர் பெயராலேயே இன்றும் 'தார் மெக்' என்று அழைக்கப்படுகிறது.

– பாளை பசும்பொன்





ரோமபுரி புராணம்

திருப்பதி போய் ஏழுமலையானுக்கு முடிகாணிக்கை செலுத்திவிட்டு மனத்திருப்தியோடு திரும்பி வந்து விடுகிறோம். அப்புறம் அந்த முடிக்கு என்ன முடிவு தெரியுமா?

வருஷத்துக்கு சுமார் 200டன் முடி சேருகிறது. அதை ஏலத்தில் விட்டால் ரூ. 20 கோடி வருமானம் கிடைக்கிறது. அந்த முடி மூன்று வகையாக தரம் பிரிக்கப்படுகிறது.

முதல் தரம்: 18 அங்குலத்துக்கு மேல் கிலோ விலை ரூ. 6000

அடுத்தது: 12 முதல் 18 அங்குலம் வரை கிலோ விலை ரூ. 1600

மூன்றாம் தரம் : 12 அங்குலத்துக்கு கீழ் கிலோ விலை ரூ. 45

ஒரு வேடிக்கை தெரியுமா? வெண்மையாக, நரைத்த கேசத்துக்கு மவுசு ஜாஸ்தி. ஒரு கிலோ விலை ரூ. 7500.


இந்த முடியை மூட்டை கட்டி, கொரியா, வியட்நாம், ஹாங்காங், ஜப்பான் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த முடியிலிருந்து 'அமினோ ஆசிட்' என்ற அமிலம் எடுத்து உணவுப் பொருட்களைப் பாதுகாக்க உபயோகிக்கிறார்கள்.

நன்றி: தி ஹிந்து
தகவல்: க. மாரியப்பன், கோவை.

இரவல் பதிகம்!

தனக்கெனப் பதிகம் தனியே பெறாமல் வேறொரு தலப்பதிகத்தில் இஃது குறித்துப் பாடப்பட்டிருக்குமாயின், அத்தலமே வைப்புத்தலம் எனப்படும். கச்சி மயானம், மூவலூர் முதலியன வைப்புத் தலங்கள்.

– இரா. பார்த்திபன்



வெள்ளி விழா ஆண்டு

கவிதா பப்ளிகேஷன் வழங்கும்

ஜெயகாந்தன் சிறுகதைகள்

முழுத்தொகுப்பு – இரண்டு தொகுதிகள்



முன் வெளியீட்டுத் திட்டம்

ஜெயகாந்தன்– இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் படைப்புலகின் பிரதான சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவர். தமிழ்ச் சிறுகதைகள் என்றவுடன் நினைவுக்கு வரும் இரு இலக்கிய பிரம்மாக்களில் ஒருவர். சுயமானதும், மரபார்ந்ததும், மரபில் இருந்து கிளைத்ததுமான நவீன சிந்தனைகளின் சொந்தக்காரர். வியக்கத்தக்க வீச்சுள்ள அவர்தம் அனுபவக் குவியலிலிருந்து முகிழ்த்தெழும் பாத்திரப் பிரிகை. ரத்தமும் சதையுமாக, மனிதக் கவிச்சியோடு, எழிலார்ந்த கலை அழகுடன் களனை அலங்கரிக்கும் பாத்திர நர்த்தனம். இவற்றினூடே பொற்சரடு போல் வியாபித்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கை, விழுமிய மனிதநேயம். 'எழுத்து எனது ஜீவன்; ஜீவனமல்ல' எனப் பிரகடனம் செய்யவல்ல ஆளுமை. அறிவு ஜீவிதம், ஆன்மத் தூய்மை.

ஜே.கே.யின் சிறுகதை உலகம் – நாற்பதாண்டுப் பரப்பில் 135 முத்தான கதைகள். இவை மானுட குலத்தின், தமிழ்ச் சமூகத்தின், வளர்ச்சியின் பரிணாமங்களின் சாசனங்கள். இவர் சிறுகதை உலகின் சிறப்பியல்புகள் கருள் கருளாய் விரியும்.

● பிரம்மாண்டமான வீச்சும் ஆழமும் ● பல்வகைப் பிரச்சினைகளின் படப்பிடிப்பு ● பல்வேறு சமூக மட்டங்களின் பாத்திரப் பிரதிநிதித்துவம் ● தமிழிலக்கியம் தொடக் கூசிய புலங்களின் பிரவேசம் ● பன்முகப்பட்ட கதைமாந்தர் பண்புகள் ● பாத்திரங்களின் இயல்புக்கேற்ற சொல்லாட்சி ● பிராம்மணத் தமிழும் சரி, சேரித் தமிழும் சரி, அவரிடம் கைகட்டிச் சேவகம் புரியும் அற்புதம் ● ஆழ்மனதின் மெல்லதிர்வுகளை ஊடுருவும் லேசர் பார்வை ● பல கூறுகளாய்ச் சிதிலப் பட்டுப் போகும் நவீன மாந்தர்பால் புரிதல் கமழும் பரிவு ● அவரது வீரியமுள்ள கருத்துலகின் அக்கினிக் குஞ்சுகள் பரிணமிக்கும் புதுமையான கட்டமைப்பு உத்திகள்.

முழுத் தொகுப்பு

ஜெயகாந்தனின் இப் பன்முக ஆளுமையின் அனைத்துச் சிறுகதைப் படைப்புகளையும் கவினுறத் தொகுத்து, நவபாரதியின் விரிவான முன்னுரையுடன் உயர்ந்த தரமுள்ள பதிப்பாக இருபெரும் தொகுதிகளாக **கவிதா பப்ளிகேஷன்** வெளியிடுகிறது. இத்தொகுப்பு ஓர் அரிய இலக்கியப் பொக்கிஷம்.


- 1954 முதல் 1990 வரை ஜெயகாந்தன் எழுதிய அனைத்து சிறுகதைகள் அடங்கிய முழுத் தொகுப்பு. ஓவியர் ஆதிமூலத்தின் முகப்பு ஓவியம்.
- 1744 பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுதிகள் டெம்மி– உயர்ரக மேப்லித்தோ பேப்பரில் அச்சாகிறது. செய் நேர்த்தியான கட்டமைப்பு.
- இரண்டு தொகுதிகளும் சேர்த்து விலை ரூ.800/–முன் வெளியீட்டு விலை ரூ 600/– மட்டும்.
- M.O. அல்லது D.D. **KAVITHA PUBLICATION** என்ற பெயருக்கு அனுப்பவும்.
- புத்தகங்களை அனுப்ப (இரண்டு தொகுதிகள்) முன்பதிவு செய்வோருக்கு மட்டும் பதிவுத் தபால் செலவை பதிப்பகமே ஏற்றுக் கொள்கிறது. தாங்கள் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 600/– மட்டுமே.
- பதிவு செய்வதற்கான கடைசி நாள் : 30.6.2001
- 30.7.2001 தேதி முதல் M.O., D.D. அனுப்பியவர்களுக்குப் பணம் பெற்ற வரிசைப்படி நூல்கள் அனுப்பப்படும். தங்கள் தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்க:

கவிதா பப்ளிகேஷன்

8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
த. பெ. எண் : 6123, பிரில்லியண்ட் டுடோரியல் அருகில்
தியாகராய நகர், சென்னை – 600017
தொலைபேசி : 4322177, 4364243 டெலிபேக்ஸ்: 044–4364243
ஈ–மெயில் : kavitha_publication@yahoo.com



• டிபிசி. திட்டம்



• தபோல் ஸ்விச்யார்டு

'மின்சாரக் கண்ணா' என்ற டூயட்டில் ஆரம்பித்து, 'ஒன்னுமே புரியலை உலகத்துல' என்ற சோலோவில் முடித்த கதையாகி விட்டதே, மஹாராஷ்டிரா ஸ்டேட் எலக்ட்ரிஸிடி போர்டு எம்.எஸ்.ஈ.பி- என்ரான் உறவு! 'மாதம் பிறந்தால், நடுங்க வைக்கும் ஒரு பில், மாதக் கடைசியில் இடு இடுக்க வைக்கும் ஒரு நோட்டீஸ்! ஒரே தலைவலி...' என்று விலாஸ்ராவ் தேஷ்முக்ஜி தலையில் கை வைத்த காரணம் என்ன?

இந்தியா, தனது 'பவர் செக்டாரில்' முதலீடு செய்ய, வெளிநாட்டவர்களை அழைத்தபோது, முதலில் ஆர்வித்தவர்களெல்லாம், நம் மாநில மின்வாரியங்களின் சீரழிந்த நிலையைக் கண்டு கதறி ஓடிய தருணத்தில், அமெரிக்கக் கம்பெனியான என்ரான், மஹாராஷ்ட்ரத்தைத் தேர்வு செய்து, தபோலில் மின் உற்பத்தி மையத்தை உருவாக்கும் பொறுப்பையும், அதற்குத் தேவையான நாஃப்தா முதலியவற்றைத் தருவிக்கும் வேலையையும் ஏற்று, திறமைக்கான உத்தரவாதத்தையும் கொடுத்து, தவறினால் 'அபராதம்' கட்டுவதாக உறுதிகூறி, இந்திய அரசாங்கத்தின் 'கௌண்டர் க்யாரண்டி'யையும் பெற்றபோது, சற்று சந்தோஷமாகத் தானிருந்தது.

திட்டமிட்டபடி நடந்திருந்தால் இந்தியாவின் முதல் எல்.என்.ஜி. (லிக்விஃபைட் நேச்சுரல் கியாஸ்) டெர்மினல் உருவாகி, அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் உலகின் மிகப் பெரிய தனியார் மின் திட்டமாக உருமாறி இருக்கும்.


ஆனால் மகுடமாக இருக்க வேண்டியது, முள்ளாகிப் போன கதை என்ன?


என்ரானின் உப தலைவர் (டெக்னிகல்) ராமசுப்பிரமணியத்தை அணுகினோம். அவர் முதலில் என்ரானைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை விளக்கினார்.

"தபோல் பவர் கம்பெனி (டிபிசி) நான்கு தொழில் ஜாம்பவான்களின் சங்கமத்தால் உருவானது. இதில் என்ரான் 65% பெக்டெல் 10%, ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி 10%, எம்.எஸ்.ஈ.பி. 15% பங்குதாரர்கள். இந்த 2184 எம்.டபிள்யூ உற்பத்தி திட்டத்தின் முதல் கட்டத்தில் (740 எம்.டபிள்யூ) நாஃப்தாவை எரிபொருளாகவும், இரண்டாவது கட்டத்தில் (1444எம்.டபிள்யூ) எல்.என்.ஜி.யை உபயோகப்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மொத்த செலவு 3 பில்லியன்; 93ல் காங்கிரஸ் அரசால் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, மே 99ல் முதல் நிலை உற்பத்தி துவங்கியது. இரண்டாவது கட்டம் 8.5% முடிவடைந்துள்ளது."

"முதல் கட்ட நடவடிக்கைகளின்போதே, 15,000 தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, பள்ளிப் படிப்பு, தொழிற் கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு மரங்கள், காய்கனிகள் வளர்த்தல், சாலைகள் அமைத்தல், உள்ளூர் கலைநிகழ்ச்சிகளுக்கு ஸ்பான்சர்ஷிப் என்பதாக டி.பி.ஸி. சுற்றியுள்ள கிராமங்களின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது" என்று நிறுத்தினார்.

ஆனால்... 'சோழியன் குடுமி சும்மா ஆடாது; இவர்கள் நம்மை விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள்; இவர்களுடன் போடும் பி.பி.ஏ(பவர் பர்சேஸ் அக்ரிமெண்ட்) நமக்குச் சமாதி கட்டிவிடும்'என்றெல்லாம் எதிர்ப்புகள் அப்போதே கிளம்பின. இவர்கள் மீது சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் புகார்களை எல்லாம், தொடர்ந்து வந்த சிவசேனை-பி.ஜே.பி.







• கிராம மக்களுக்கு மருத்துவமனை

• எல்.என்.ஜி. கட்டுமானப்பணிகள்

அரசாலேயே நிரூபிக்க முடியவில்லை என்றாலும், முதல் கட்ட சப்ளை துவங்கிய உடனேயே யூனிட் 4.02 ரூபாயாக இருக்க வேண்டிய விலை ரூ. 4.94 ஆகி, படிப்படியாக ஏறி, 7.80வைத் தொட்டது. (2000) நவம்பரில் வந்த 80

உயர, மஹாராஷ்ட்ர அரசும் கைவிரிக்க, வேறு வழியின்றி, க்யாரண்டி வழங்கியிருந்த இந்திய அரசின் தலையில் கைவைத்தது டி.பி.சி.

அவ்வளவுதான். 'அப்போதே அடித்துக் கொண்டோமே, கேட்டீர்களா? ஓட்டாண்டி ஆகிவிடுவோம்...' என்று எதிர்ப்புக் குரல் வலுத்து 'திட்டத்தையே கைவிட்டு விட வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது.

மராத்திய அரசு, 'மஹாராஷ்ட்ர பவர் ரெகுலேட்டர் அதாரிட்டி'யின் உதவியை நாடியது; 'எங்கே பவர், மலிவாகக் கிடைக்கிறதோ எங்கே வாங்கு' என்று பதில் வந்தது. அதனால் டி.பி.சி.யிடம் வாங்குவது இன்னும் குறைந்தது.

அதன்பிறகு, "ஒப்பந்ததின்படி, முழு உற்பத்தியையும் உங்களால் வாங்க முடியவில்லை" என்று டி.பி.சி.யும், "ஒப்பந்தப்படி குறிப்பிட்ட காலவரையறைக்குள் உங்களால் உற்பத்தி செய்ய முடியவில்லை" என்று ஜனவரி (2001)ல் ஏற்பட்ட கால தாமதத்தைச் சுட்டிக்காட்டி எம்.எஸ்.ஈ.பி.காரர்களும் மாற்றி மாற்றி லீகல் நோட்டீஸ் அனுப்புவதும் வழக்கமாகிவிட்டது.

நடுவே, ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவென்று அமைக்கப்பட்ட மூவர் குழுவில், கோட்போலே என்பவரை,



• மலர் வளர்ப்புத் திட்டம்

கோடிக்கான பூதாகார பில்லை கட்ட முடியாமல் எம்.எஸ்.ஈ.பி.க்கு விழி பிதுங்கியது; டிசம்பரில் அது 152 கோடிகளாக

என்ரானில் என்ன ராங்?

'நெகடிவ் அப்ரோச்' உள்ளவர் என்று ஷரத் பவார் விமர்சிக்க, அவர் ராஜினாமா செய்துவிட்டார். 'போகாதே போகாதே' என்று சி.எம்மும், மந்திரிமார்களும் கோரஸ் இசைக்க, ராஜினாமா நாடகம் முற்றுப் பெற் றது.

இடையே, மத்திய அரசின் உதவியுடன் எம்.எஸ்.ஈ.பி. கொடுத்த 138 கோடிக்கான (ஏப்ரல்) செக்கை, டி.பி.சி. திருப்பிவிட்டது- முதலில் பி.பி.ஏ. ஒப்பந்தத்தைப் பற்றி விவாதித்து நேராக்கி விட்டுதான் மற்றவை என்ற ரீதியில்!

இதற்கெல்லாம் காரணமான மின் கட்டணத்தின் அநியாயநிலை பற்றி நமக்கு எழுந்த சந்தேகங்களை நிவர்த்திக்க, ராமசுப்பிரமணியம், இயக்குநர் ஜிம்மி மொகலுக்கு நம்மை அறிமுகப்படுத்தினார்.



''முதலிலேயே ஒப்பந்தப்படி எம்.எஸ்.ஈ.பி. 90% மின்சாரத்தை வாங்கியிருந்தால், கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 4.02 ஆகத்தானிருந்திருக்கும். 60% மட்டுமே வாங்கியதால் 4.96 ஆகியது; அது இந்தியாவில், திரவ எரிபொருள் உபயோகிக்கும் எல்லா ப்ளாண்டுகளிலும் உள்ள கட்டணம்தான். காயன்குளம் என்.டி.பி.ஸி. கட்டணம் அதுதானே?'' என்றார். (என்.டி.பி.ஸி. என்பது நேஷனல் தெர்மல் பவர் கார்ப்ரேஷன் அஃப் இந்தியா என்ற உள்நாட்டு அமைப்பு)

''கட்டணத்தை நிர்ணயம் செய்வது நாலு வெவ்வேறு விஷயங்கள்; முதலில் குறிப்பிட்டது போல் எம்.எஸ்.ஈ.பி.யின் கொள்முதல் அளவு. அவர்கள் அதிகமாக வாங்க வாங்க, விலையும் குறையும். அடுத்து, எரி பொருள் விலை; அது சர்வதேச மார்க்கெட் விலைதான். அப்புறம், அதன் இம்ப்போர்ட் ட்யூட்டியை நிர்ணயிப் பது இந்திய அரசு. கடைசியாக, எக்ஸ்சேஞ்ச் ரேட், டாலர்-ரூபாய் விவகாரம், எங்கள் கையிலா இருக்கிறது சொல்லுங்கள்?''

அத்துடன், ''கட்டணம் ஏறுமுகமாகவே இருக்கப் போவதில்லை; இரண்டாம் கட்டத்தில் எல்.என்.ஜி.யை உபயோகிக்கும்போது, 20-25% குறைந்துவிடும்'' என அறுதியிட்டுச் சொல்கிறார் ஜிம்மி மொகல். கடைசியாக டி.பி.சி. உற்பத்தி செய்யும் 'பவர்' மஹாராஷ்ட்ராவுக்குத் தேவையில்லை' என்பதும் கட்டுக்கதைதான் என்றார். 'தபோல் பவர் இருக்கும் போதே, தினம் 1000-2000W லோட் ஷெட்டிங் கும், இருட்டடிப்பும் நிகழ்வது சகஜமாகி விட்டதே!' என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இந்தப் பிரச்னைக்கு என்னதான் முடிவு? மத்திய அரசு, தபோல் மின்சாரத்தை மற்ற மாநிலங்களும் வாங்கிக் கொள்ளலாம் என்ற ரீதியில் முடிவு காணப் பார்க்கிறது.

ஆனால், நம் நாட்டில் எல்லா மாநில மின் வாரியங்களும் (தனியார் மயமாகி இருக்கும் ஒரிஸ்ஸா உள்பட) சந்திக்கும் முக்கிய பிரச்னை பகிர்வு, டிஸ்ட்ரிப்யூஷன் அளவில் ஏற்படும் பெரு நஷ்டங்கள்; விவசாயிகளுக்கும், பணக்கார கரும்பாலை அதிபர்களுக்கும் கூட வோட்டு நிமித்தமாக வழங்கப்படும் இலவச மின்சாரம்; ஒரு சிலருக்கு 38 பைசாவென்றும், வேறு சிலருக்கு ரூ. 5.42 என்றும் கட்டணம் கிடைத்தால், மின்சாரத் திருட்டு நடக்காமலிருக்குமா?

என்ரான்காரர்கள் தேவ தூதர்களோ, நமக்கு பாபவிமோசனம் அளிக்க வந்த அவதார புருஷர்களோ அல்ல! எல்லோரும் இரண்டு காசு சம்பாதிக்கலாம் என்று வருபவர்கள்தானே?

மராத்திய அரசு நினைத்திருப்பதுபோல், அவர்களிடம் விலை குறைப்பை எதிர்பார்ப்பதைவிட, நம் கையிருப்பைப் பெருக்கிக் கொள்வதுதானே நல்லது?

அரசியல்வாதிகள் கையிலிருந்து அறிஞர்கள் கைக்கு மாறினால்தான் இந்த 'பவர்-பாலிடிக்ஸ்' உருப்பட முடியும்!

— ஜெயஸ்ரீ ராஜ்









எண்பத்து ஐந்தாம் அத்தியாயம்

சிற்பத்தின் உட்பொருள்

செந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர், தம்மைத் திருவயிறு சுமந்து பெற்ற அன்னை செம்பியன் மாதேவியைப் பார்த்து, "அம்மா! இந்த உலகில் யுத்தப் பைத்தியம் பிடித்து அலைகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். போர் செய்யாத நாள் எல்லாம் வீண் போன வெறும் நாளாகவே அவர்களுக்குத் தோன்றுகிறது. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் என் நண்பர் வந்தியத்தேவரும் என் சகோதரர் பொன்னியின் செல்வரும். தாங்களோ, இறைவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள் என்று கருதுகிறவர் ஆயிற்றே? தாங்களும் போர்த் தொழிலை ஆதரித்துப் பேசுவது மிக மிக ஆச்சரியமாயிருக்கிறது. அதன் காரணத்தை எங்களுக்கு விளக்கமாய்ச் சொல்ல வேண்டும்!" என்றார்.

அப்போது செம்பியன்மாதேவி "என் அருமை மகனே! வேறு யார் போர்த் தொழிலை இகழ்ந்து பேசினாலும் நீ பேசக் கூடாது; பூங்குழலியும் பேசலாகாது. வல்லத்து அரசர் போர்த் தொழிலிலும் வல்லவராயிருப்பதினாலேயல்லவா நீ இன்று உயிரோடிருந்து இறைவனைத் துதிக்கும் பாடல்களை என் உள்ளமும் உடலும் உருகப் பாடுகிறாய்?" என்றார்.

"தாயே! நான் தங்கள் அருமைப் புதல்வரின் உயிரைக் காப்பாற்றியது இருக்கட்டும். அவரும் அவரைக் கரம் பிடித்த

அமரர் கல்கி

தங்கள் மருமகளும் என் உயிரைக் காப்பாற்றியதை நான் மறக்க முடியாது. பூங்குழலி அம்மையாரின் போர்க் குணம் அல்லவோ நான் இன்று உயிரோடிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது?" என்றான் வந்தியத்தேவன்.

"பரமேசுவரனும் துர்க்கா பரமேசுவரியும் நம் எல்லாரையும் காப்பாற்றுகிறார்கள்! அவர்களுடைய கருணை இல்லாவிட்டால், நாம் ஒருவரையொருவர் காப்பாற்றுவது ஏது?'' என்றார் மதுராந்தகத் தேவர்.

"குழந்தாய்! கருணையே வடிவமான சிவ பெருமானும் பலமுறை போர் செய்ய நேர்ந்தது. அன்பும் அருளும் சாந்தமும் உருக்கொண்ட ஜகன் மாதாவான துர்க்கா பரமேசுவரியும் யுத்தம் செய்வது அவசியமாயிற்று. இந்தப் புண்ணிய ஸ்தலத்திலுள்ள ஆலயத்தில் அம்பிகை அறம் வளர்த்த நாயகியாக வீற்றிருக்கிறாள். ஆயினும், ஆலயத்தின் திருச்சுற்று வீதியில் மகிஷாசுர மர்த்தனியாகவும் தரிசனம் தருகிறாள். நீ கவனித்தாயல்லவா?" என்றார்.

"ஆம், அன்னையே! கவனித்து வியந்தேன். அண்ட சராசரங்களை ஈன்றெடுத்துக் காக்கும் அன்னை ஓர் எருமை மாட்டின் தலை மீது எதற்காக நின்று காட்சி அளிக்கிறாள் என்று எண்ணி அதிசயித்தேன்!" என்றார் மதுராந்தகர்.

"ஆம், ஆம்! இந்த ஆலயத்தில் உள்ள தேவி, மகிஷாசுரனை வதம் செய்து முடித்துவிட்டாள். அதனால் எருமையின் தலையில் நிற்கும் தேவியின் திருமுகத்தில் அன்பும் அருளும் குடிகொண்டிருக்கக் காண்கிறோம். மாமல்லபுரத்துக் குகைச் சிற்பங்களிலே தேவி மகிஷாசுரனுடன் போரிடுவது போல் அமைந்த சிற்பம் ஒன்று இருக்கிறது. அங்கே துர்க்கா பரமேசுவரி வீர பயங்கர ரணபத்திர காளியாகத் தரிசனம் தருகிறாள். சகலலோக மாதாவாகிய துர்க்கா பரமேசுவரி கேவலம் ஓர் எருமை மாட்டுடன் ஏன் சண்டை போட வேண்டும், அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் வேண்டுமா என்று வெளிப்படையாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றக் கூடும். என் அருமைக் குமாரா! நம் பெரியோர்களின் உள்ளத்தில் உதயமான இத்தகைய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உட்பொருள்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதற்குத் தக்க பரி பக்குவம் வேண்டும்; அறிந்து கொள்ள வேண்டும் என்னும் சிரத்தையும் வேண்டும்!"

"தேவி! எங்களுக்கெல்லாம் பரிபக்குவம் இருக்கிறதோ, என்னமோ, தெரியாது! ஆனால் சிரத்தை இருக்கிறது. தாங்கள் திருவாய் மலர்ந்தருளும் வார்த்தை ஒவ்வொன்றையும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! ஏன்? நமது வல்லத்து அரசருடைய ஓயாமற் சலிக்கும் கண்கள்கூடவல்லவா தங்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றன?" என்றார் அருள்மொழி.

இந்த வார்த்தைகள் அங்கே சிறிது கலகலப்பை உண்டாக்கின. வந்தியத்தேவன் அடிக்கடி இளையபிராட்டியின் திருமுகத்தை நோக்குவதையே அருள்மொழி வர்மர் குறிப்பிடுகிறார் என்று அறிந்து கொண்ட பெண்மணிகள் இலேசாக நகைத்தார்கள்.

செம்பியன்மா தேவி கூறினார்: "சிரத்தையுடன் கேட்பதானால் சொல்கிறேன். கேளுங்கள். நமது புராண இதிகாசங்களில் தேவாசுர யுத்தங்களைப் பற்றி நிரம்பக் கூறியிருக்கிறார்கள். இவ்வுலகில் திருமால் அவதாரம் எடுத்து ராட்சதர்களோடு சண்டையிட்டது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இறைவன் உலகத்தைப் படைத்த காலத்திலிருந்து தேவ சக்திகளும் அசுர சக்திகளும் போரிட்டு வருகின்றன. அசுர சக்திகளை இறைவன் ஏன் படைத்தார் என்று





கேட்டால், அதற்குச் சிற்றறிவு படைத்த நம்மால் விடை சொல்ல முடியாது. இறைவனுடைய திருவிளையாடல் அது என்றுதான் கூற முடியும். தெய்வ சக்திகளும் அசுர சக்திகளும் ஓயாமல் போராடி வருகின்றன என்பது மட்டும் நிச்சயம். சில சமயம் அசுர சக்திகளின் கை மேலோங்குவது போல் காணப்படுகின்றன. அவையே உலகை என்றென்றைக்கும் ஆளும் என்றும் தோன்றுகின்றது. சூரபத்மனும், இரணியனும், இராவணனும் எத்தனை பல்லாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள்! ஆனாலும் அவர்களுக்கெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் முடிவு வந்துவிட்டது!''

''ஆம், ஆம்! தேவர்களையெல்லாம் அடிபணிந்து குற்றேவல் புரிய வைத்த தசகண்ட இராவணனுக்கு முடிவு வந்த போது, இரண்டு மனிதர்களும் ஒரு சில வானரங்களும் சேர்ந்து அவனைக் குலத்தோடு நாசமாக்கி விடவில்லையா?'' என்றார் மதுராந்தகத் தேவர்.


''ஆகையால் அசுர சக்திகள் மேலோங்குவதைக் கண்டு மாந்தர்கள் மனச்சோர்வு அடைந்து விடக் கூடாது. தெய்வ சக்திகள் முடிவில் வெற்றி கொள்ளும் என்று நம்பித் தர்மத்திலும் சத்தியத்திலும்



நின்று போராட வேண்டும்.' அப்படிப் போராடுகிறவர்களுக்குத் தெய்வமும் நிச்சயம் துணை செய்யும்!"

"அன்னையே! மகிஷாசுரனைப் பற்றிச் சொல்ல வந்தீர்கள்!" என்று பூங்குழலி ஞாபகப்படுத்தினாள்.

"ஆம்; நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினாய், மகளே! அசுர சக்திகள் இரண்டு வகையானவை. ஒன்று, மௌடீக அசுர சக்திகள், இன்னொன்று, மதி நுட்பம் வாய்ந்த அசுர சக்திகள். மௌடீக அசுர சக்தியையே மகிஷாசுரனாக நமது முன்னோர்கள் உருவகப்படுத்தினார்கள். காட்டெருமைக்கு வெறி வந்து தெறி கெட்டு ஓடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்போது அந்த எருமை யானையைவிட அதிக பலம் பெற்று விடுகிறது. தன் எதிர்ப்பட்ட பிராணிகள் எல்லாவற்றையும் சின்னாபின்னப் படுத்தி விடுகிறது. மௌடீகமும் வெறி கொண்ட காட்டு எருமையைப் போல் வலிமைகொண்டது. மௌடீகம் சில சமயம் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி நடத்தத் தொடங்கி விடுகிறது. இதைத்தான் மகிஷாசுரனுடைய ஆட்சி என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள். மகிஷாசுரன் தேவலோகச் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தத் தொடங்கியபோது, மூன்று உலகங்களிலும் அல்லோலகல்லோலமுண்டாயிற்று. அறிவு வேண்டாம், அறிவு நூல்கள் வேண்டாம், அறிவுக் கலைகள் வேண்டாம். இசை வேண்டாம், சிற்பம், சித்திரம், கோயில் கோபுரம் ஒன்றும் வேண்டாம் – எல்லாவற்றையும் அழித்துப் போடுங்கள் என்று மகிஷாசுரன் கட்டளையிட்டான். தேவர்கள்



முனிவர்கள் மனிதர்கள் எல்லாரும் நடு நடுங்கினார்கள். அவர்களில் பலர் மகிஷாசுரனுக்கு அடி பணிந்து அவனுடைய ஆட்சியை ஒப்புக்கொண்டார்கள். இதனால் மகிஷாசுரனுடைய அகந்தையும் மூர்க்கத்தனமும் அதிகமாயின. மௌட்டிகத்தோடு அகந்தையும் மூர்க்கத்தனமும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா? மகிஷாசுரனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் மூன்று உலகங்களிலும் மக்கள் ஓலமிட்டார்கள். அசுரர்களுங் கூடச் சேர்ந்து அலறினார்கள். துர்க்கா பரமேசுவரி அப்போது கண் திறந்தாள். மாகாளி வடிவங் கொண்டு வந்து மகிஷாசுரனை வதஞ் செய்தாள். மௌட்டிக சக்தியைத் தெய்வீக சக்தி வென்றது. மூன்று உலகங்களும் மௌட்டிக அடிமைத்தனையிலிருந்து விடுதலை பெற்றன. தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் அசுரர்களுங் கூடப் பெரு மூச்சு விட்டுத் துர்க்கா பரமேசுவரியை வாழ்த்தி வணங்கினார்கள். குழந்தைகளே! இப்போதுங் கூட இவ்வுலகில் மௌட்டிக அசுர சக்திகள் இல்லாமற் போகவில்லை. இந்தப் புண்ணிய பரத கண்டத்தின் வடமேற்கு திசைக்கு அப்பால் மௌட்டிக அசுர சக்திகள் சில தோன்றியிருப்பதாக அறிகிறேன். அவர்கள் மூர்க்காவேசத்துடன் போர் புரிந்து நகரங்களைச் சூறையாடிக் குற்றமற்ற மக்களைக் கொன்று கோயில்களையும் விக்கிரகங்களையும் உடைத்துத் தகர்த்து நாசமாக்குகிறார்களாம். அவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய பெரிய சக்கரவர்த்திகள் இப்போது வட நாட்டில் யாரும் இல்லையாம்! இந்தத் தெய்வத் தமிழ் நாட்டுக்கு அத்தகைய கதி நேராதிருக்கட்டும். அப்படி நேர்வதாயிருந்தால், வீர மறக்குலத்தில் பிறந்த நீங்கள் அந்த அசுர சக்திகளுடன் போராடச் சித்தமாயிருக்க வேண்டுமல்லவா?"

"கட்டாயம் சித்தமாயிருப்போம். தாயே! மற்றொரு வகை அசுர சக்திகளைப் பற்றியும் சொல்லுங்கள்!" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"மற்றொரு வகை அசுரர்கள் அறிவுக் கூர்மையுள்ளவர்கள். அந்த அறிவைக் கெட்ட காரியங்களில் பயன்படுத்துகிறவர்கள். அவர்கள் தவம் செய்து வரம் பெறுவார்கள். அதையும் துஷ்ட காரியங்களுக்கே பயன்படுத்துவார்கள். திரிபுரர்கள் என்ன செய்தார்கள்? ஒவ்வொருவரும் ஒரு உலகத்தையே உண்டாக்கிக் கொண்டார்கள். வானத்தில் பறந்து சென்று நாடு நகரங்களின் மீது இறங்கி நிர்மூலமாக்கினார்கள். சூரபத்மன் எத்தனை தடவை அவனுடைய தலையைக் கொய்தாலும் புதிய தலை அடையும் ஆற்றலைப் பெற்றிருந்தான். இராவணன், இந்திரஜித்து முதலிய ராட்சதர்கள் வானத்தில் மேகங்களில் மறைந்து கொண்டு கீழே உள்ளவர்கள் மீது அஸ்திரங்களைப் பொழியும் சக்தி பெற்றிருந்தார்கள். இத்தகைய சூழ்ச்சித் திறமை வாய்ந்த அசுர சக்திகளையே 'முயலகன்' என்னும் அசுரனாக நம் முன்னோர்கள் உருவகப்படுத்தியிருக்கிறார்கள். இறைவன் ஆனந்த நடனம் புரியும்போதெல்லாம் தம்முடைய காலடியில் அடக்கி வைத்திருக்கும் முயலகன் மீதும் சிறிது ஞாபகம் வைத்துக் கொள்கிறார். கொஞ்ச கவனக் குறைவாயிருந்தால் முயலகன் கிளம்பி விடுவான். சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் இருந்து அசுர சக்திகளுடன் தெய்வீக சக்திகள் போராடி வருகின்றன என்பதையே முயலகன் நமக்குத் தெரியப்படுத்துகிறான்! ஆகையால் என் அருமை மக்களே! யுத்தமே கூடாது என்று நாம் எப்படிச் சொல்லி விட முடியும்!"

"தேவி! இதுவரையில் எங்களுக்கு விளங்காமலிருந்த பல விஷயங்களை இன்று தெரிந்துகொண்டோம். எங்களுக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்?" என்று பொன்னியின் செல்வர் கேட்டார்.

"குழந்தைகளே! நீங்கள் எப்போதும் தெய்வீக சக்திகளின் பக்கம் நின்று போராடுங்கள் என்று மட்டுமே நான் சொல்ல முடியும். உங்களுக்குக் கட்டளையிட முடியாது. உங்களுடைய அந்தராத்மாதான் உங்களுக்குக் கட்டளையிட முடியும். அந்தக் கட்டளையைக் கேட்டு நடவுங்கள். சற்று முன்னால், இந்தச் செந்தமிழ் நாட்டைச் சுற்றியுள்ள கடல்களில் கப்பல்

கொள்ளைக்காரர்கள் மிகுந்து விட்டதாகச் சொன்னீர்கள். அதனால் தமிழ்நாட்டு வர்த்தகர்கள் பெரிதும் கஷ்ட நஷ்டங்களை அடைவதாகவும் கூறினீர்கள். அந்தக் கொள்ளைக்காரர்களை ஒழித்து நம் நாட்டு வர்த்தகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது இராஜ குலத்தில் பிறந்த உங்கள் தர்மம். இன்று கடல் கொள்ளைக்காரர்களுக்கு இடங்கொடுத்து விட்டால், நாளைக்கு அவர்கள் இந்தத் தெய்வத் தமிழ் நாட்டிற்குள்ளேயும் பிரவேசித்து விட மாட்டார்களா? இன்று கைலாசவாசியாகிச் சிவபெருமானுடைய சந்நிதியில் சிவ கணங்களுடன் வீற்றிருக்கும் என் கணவர் ஜீவிய வந்தராயிருந்தால், அவரும் உங்களுக்கு இதைத்தான் சொல்லியிருப்பார்!"

"தேவி! தங்கள் திரு உள்ளத்தை அறிந்துகொண்டோம். அதன்படியே நடந்து கொள்வோம்!" என்றார் இளவரசர் அருள்மொழி வர்மர்.

"பொன்னியின் செல்வ! நீ என்னுடைய விருப்பத்தை மதித்து நடப்பதாயிருந்தால், இன்னும் ஒன்றும் இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன்!" என்றார் அந்தப் பெரு மூதாட்டியார்.

"தேவி! தங்கள் விருப்பத்துக்கு மாறாக இதுவரை நான் நடந்ததாக நினைவில்லையே? அப்படி ஏதேனும் செய்திருந்தால் மன்னியுங்கள்!"

"குழந்தாய்! இதற்கு முன்னால் நீ நடந்து கொண்டதெல்லாம் வேறு; இனிமேல் நடக்கப் போவது வேறு. இதுவரையில் நீ அரண்மனையின் செல்வக் குழந்தையாக இருந்தாய். உன் விருப்பம் போல் நாங்கள் நடந்தோம்; எங்கள் விருப்பத்தை நீயும் நிறைவேற்றி வைத்தாய். இனி, நீ இந்த மாநிலத்தை ஆளும் மன்னர் மன்னன் ஆகப் போகிறாய். முடிசூட்டு விழா நடந்தபிறகு, உன் விருப்பத்தின்படிதான் நாங்கள் எல்லாரும் நடந்து கொள்ள வேண்டும்."

"தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். இனியும் நான் உங்கள் செல்லக் குழந்தையாகவே இருந்து வருவேன். உங்கள் விருப்பப்படியே நடப்பேன்."

"அப்படியானால், இதைக் கேள்! இந்தப் புராதனமான சோழர் குலம் வாழையடி வாழையாகத் தளிர்த்து வளர வேண்டும். இராஜ குலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் வீர சொர்க்கம் அடையத் தயாராயிருக்க வேண்டியதுதான். ஆனால் குலம் வளர்வதற்கும் முன் ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்ய வேண்டும். உன் தமையன் ஆதித்த கரிகாலன் கலியாணம் செய்து கொள்ளாமலே காலமாகி விட்டான். சோழ குலம் தழைப்பதற்கு நீ ஒருவன்தான் இருக்கிறாய்! ஆகையால் நீ மறுபடியும் கப்பலேறிக் கடல் கடந்து வெற்றித் திருமகளைத் தேடிப் போவதற்கு முன்னால் குலந் தழைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். உன் மகுடாபிஷேகத்தோடு சேர்த்துத் திருமணத்தையும் வைத்துக் கொள். வானதியைப் போன்ற பெண்ணை மனைவியாகப் பெற நீ எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். இந்தப் பெண்ணரசியின் மாங்கலிய பலம் நீ போகுமிடமெல்லாம் மந்திரக் கவசம் போலிருந்து உன்னைப் பாதுகாக்கும்!"

"தேவி! அந்தக் கவசத்தை அணிய நான் சித்தமாகத்தானிருக்கிறேன். வானதிதான் மறுதலிக்கிறாள். 'சிங்காதனம் ஏற மாட்டேன்; சபதம் செய்திருக்கிறேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறாள்!" என்றார் இளவரசர்.

யாரும் எதிர்பாராத விதமாகப் பூங்குழலி அப்போது தலையிட்டு, "கொடும்பாளூர் இளவரசியின் பேச்சை அப்படியே நம்பி விட வேண்டாம். நாமெல்லாம் சேர்ந்து மேலும் உபசாரம் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார். பொன்னியின் செல்வர் இன்னும் கொஞ்சம் கெஞ்சிக் கேட்க வேண்டும்!" என்று சொல்லி நகைத்தாள். அது வேடிக்கைப் பேச்சு என்று எண்ணி மற்றவர்களும் சிரித்தார்கள். ஆனால் வானதி மட்டும் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அசட்டுப் பெண்ணே! இது என்ன? எதற்காக நீ இப்படி விம்மி அழுகிறாய்?" என்று குந்தவை கேட்டுவிட்டு, வானதியின் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு கீழே போனாள்.

எண்பத்து ஆறாம் அத்தியாயம்

"கனவா? நனவா?"

மறுநாள் காலையில் செம்பியன் மாதேவியும் மதுராந்தகரும் பூங்குழலியும் தஞ்சைக்குப் புறப்பட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் வந்தியத்தேவரும் உறையூருக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் போய்வர எண்ணியிருந்தார்கள். போகும்போது கரிகாலச் சோழர் காலத்தில் காவேரி நதியின் நீரைத் தேக்குவதற்காகக் கட்டப்பட்ட பேரணையை வந்தியத் தேவனுக்குக் காட்டுவதாக அருள்மொழிவர்மர் கூறியிருந்தார்.

அவர்கள் புறப்படுவதற்கு முன்னால் பொன்னியின் செல்வர் குந்தவை தேவியிடம் விடைபெற்றுக் கொள்ளுவதற்காகச் சென்றார்.

"அக்கா! தாங்கள் பழையாறைக்கு அவசியம் போக வேண்டுமா?" என்றார்.

"தம்பி! நீங்கள் உறையூருக்கு அவசியம் போக வேண்டுமா? எங்களுடன் பழையாறைக்கு வரக் கூடாதா?'' என்று கேட்டாள்.

"இல்லை, அக்கா! உறையூரில் ஆழ்வார்க்கடியானை முக்கியமான காரியத்துக்காகச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறோம்...'' என்று சொன்னார்.

"ஆகா! நீ முன்மாதிரி இல்லை, தம்பி! உன் மனசு மிகவும் கெட்டுப் போய்விட்டது. என்னை நீ இலட்சியம் செய்வதே இல்லை. இந்த மாறுதலுக்குக் காரணம் அந்த வல்லத்து அரசரின் சிநேகந்தான் என்று கருதுகிறேன்...''

"வீணாக அவர் பேரில் பழியைப் போடாதீர்கள்! எனக்குப் பிராயம் வந்துவிடவில்லையா, அக்கா! ஒரு பெரிய இராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்ளப் போகிறேன். இனி மேலாவது என் இஷ்டப்படி நான் நடந்து கொள்ள வேண்டாமா?"

"நன்றாக உன் இஷ்டப்படி நடந்து கொள்! உன்னுடைய அதிகாரத்தை என் பேரில் காட்டாமலிருந்தால் சரி. உன் இஷ்டப்படி நான் நடக்க வேண்டுமென்று சொல்லாமலிருந்தால் சரி."

"மகுடாபிஷேகத்துக்கு மட்டும் வந்து விடுங்கள். அப்புறம் உங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளுங்கள்."

"மகுடாபிஷேகத்துக்குப் பிறகு வேண்டுமானால் நீ என் பேரில் அதிகாரம் செலுத்தலாம். அதுவரை என்னைக் கட்டாயப்படுத்த உனக்கு என்ன உரிமை?''

"அப்படியானால், நீங்கள் மகுடாபிஷேகத்துக்கு வரப் போவதில்லையா?''

"அது வானதியின் விருப்பம். அவள் போக வேண்டுமென்றால் நானும் வருவேன். இல்லாவிட்டால் வர மாட்டேன்.''


"அந்தப் பெண் எங்கே அக்கா!"


"உன் அன்னை பொன்னி நதிக்குப் பூஜை செய்யப் போயிருக்கிறாள். உனக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அருள வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப் போகிறாள்."


இளவரசர் சிரித்துவிட்டு, ''அவளுடைய பிரார்த்தனை நிறைவேறட்டும்; நான் புறப்படுகிறேன்'' என்றார்.

"தம்பி! உன்னைப் போல் குரூரமானவனை நான் பார்த்ததே இல்லை. வானதி இரவெல்லாம் தூங்கவே இல்லை; நினைத்து நினைத்து விம்மிக் கொண்டிருந்தாள். காவேரிப் படித் துறைக்குச் சென்று அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போ!'' என்றாள் குந்தவை.

''அவள் தூங்காதது மட்டும் என்ன? என் தூக்கத்தையும் அவள்தான் பறித்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது. ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து நடந்து கொள்ளத் தெரியாவிட்டால் விம்மி அழுது கொண்டிருக்க வேண்டியதுதான். இப்படிப்பட்ட பெண்ணைக் கட்டிக் கொண்டு வாழ் நாளெல்லாம் நான் கஷ்டப்பட வேண்டுமென்கிறீர்கள்!'' என்று பொன்னியின் செல்வர் சொல்லிவிட்டு, அந்த அரண்மனையின் பின்புறம் விரைந்து சென்றார். தோட்டத்தைத்







தாண்டியதும் பொன்னியின் நதியின் படித்துறையில் வானதி அமர்ந்திருப்பதையும், பக்கத்தி லிருந்த தட்டிலிருந்து மலர்களை எடுத்துப் பொன்னி நதியின் வெள் ளத்தில் ஒவ்வொன்றாகப் போட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்தார்.

வானதி அவ்விதம் அர்ச்சனை செய்து கொண்டிராவிட்டால், அவன் அந்தக் காவேரித் துறையில் அமைக்கப்பட்ட ஒரு பெண்ணின் பொற்

சிலையாகவே தோன்றியிருப்பாள்.

பொன்னியின் செல்வர் சத்தமிடாமல் சென்று வானதிக்குப் பின்னால் மேற்படி ஒன்றில் உட்கார்ந்துகொண்டார்.

வானதிக்கு யாரோ வருகிறார்கள் என்பது தெரிந்துதானிருக்க வேண்டும். உள்ளுணர்வினால் அவர் பொன்னியின் செல்வர்தான் என்று தெரிந்துகொண்டாள் போலும். ஆகையால் திரும்பிப் பாராமல் அர்ச்சனை செய்வதையும் நிறுத்திவிட்டுச் சும்மா இருந்தாள்.

தட்டிலிருந்த மலர்களின் இதழ்களில் பனித்துளிகள் இரண்டொன்று காணப்பட்டன. வானதியின் கண் மலரின் இதழ்களிலும் முத்துப் போன்ற இரண்டு கண்ணீர்த் துளிகள் பிரகாசித்தன.

உதய சூரியனின் பசும் பொற் கிரணங்கள் பொன்னி நதியின் மெல்லிய அலைகளோடு கூடிக் குலாவிய போது, சோழ சாம்ராஜ்ய மங்கை தங்க ரேகைகள் ஊடுருவிப் படர்ந்த நீலப் பட்டுச் சேலையை உத்தரீயமாக அணிந்து விளங்குவது போலத் தோன்றியது. அந்த நீலப் பட்டுச் சேலையின் இருபுறங்களிலும் அமைந்த பச்சை வர்ணப் பட்டுக் கரையைப் போல, நதியின் இரு புறங்களிலும் செழித்து வளர்ந்திருந்த பசும் சோலைகள் காட்சி தந்தன.

காவேரியின் பிரவாகம் இசைத்த இனிய சுருதிக்கு இணங்க இருபுறத்துச் சோலைகளிலும் பலவகைப் புள்ளினங்கள் மங்கள கீதங்கள் பாடி வாழ்த்தின.

கற்பனை உலகிலே சஞ்சரித்துப் பகற்கனவு காண்பதற்கு இடமும் நேரமும் சூழ்நிலையும் மிக வாய்ப்பாக இருந்தன.

இளவரசர் சிறிது மௌனமாயிருந்து பார்த்துவிட்டு, "வானதி! பகற் கனவு காண்கிறாயா? நான் உன் கனவைக் கலைத்து விட்டேனா?" என்றார்.

"நான் பகற் கனவுதான் காண்கிறேன். ஐயா! ஆனால் என் கனவைத் தாங்கள் எப்படிக் கலைக்க முடியும்? இரவிலே நான் கனவு கண்டாலும் பகலிலே நான் கனவு கண்டாலும், அக்கனவிலே நடு நாயகமாக விளங்குகிறவர் தாங்கள்தானே? ஆகையாலேயே, தங்களைப் பக்கத்திலே பார்க்கும்போது, 'இது கனவா? நனவா?' என்று எனக்குச் சந்தேகம் தோன்றிவிடுகிறது. 'வாருங்கள்!' என்று அழைக்கவும் இயலாமற் போகிறது. ஆம், சுவாமி! எத்தனையோ நாள் எத்தனையோ விதமான பகற்கனவு கண்டிருக்கிறேன். தங்களை முதன்முதலில் திருநல்லம் அரண்மனைத் தோட்டத்தில் நான் சந்தித்தபோது, தங்களை யானைப் பாகன் என்று நினைத்தேன். தாங்கள் சாதாரண யானைப் பாகனாகவே இருக்கக் கூடாதா என்று பின்னர் பலதடவை நான் எண்ணியதுண்டு. தாங்கள் வெறும் யானைப் பாகனாயிருந்து என்னைத் தங்கள் பின்னால் யானையின் மீது ஏற்றிச் சென்றதாகப் பலமுறை கற்பனையில் கண்டு களித்தேன். அப்போதெல்லாம் இந்த உலகத்தைச் சேர்ந்த சாதாரண கரிய யானையின் மேல் ஏறிப் போவதாக எனக்குத் தோன்றுவதில்லை. தேவலோகத்தில் உள்ள ஐராவதம் என்னும் வெள்ளை யானையின் பேரில் நான் ஏறிச் செல்வதாகத் தோன்றும். தாங்களே தேவேந்திரன் என்றும் நான் இந்திராணி என்றும் எண்ணிக் கொள்வேன்..."

"அப்படியானால் இப்போது..." என்று பொன்னியின் செல்வர் குறுக்கிட்டுப் பேச முயன்றதை வானதி தடுத்துத் தொடர்ந்து கூறினாள்:-

"கொஞ்சம் பொறுங்கள். அரசே! தேவேந்திரன் இந்திராணி என்ற கற்பனையை உடனே மாற்றிக் கொள்வேன். தேவேந்திரனுக்கும், இந்திராணிக்கும் நிம்மதி ஏது? அவர்கள் இருவரும் தனியாக ஐராவதத்தில் ஏறி ஆனந்தப் பிரயாணம் செய்வதற்கு அவகாசம் ஏது? தேவர்களும் தேவிகளும் புடை சூழவல்லவா எப்பொழுதும் கொலுவிருக்க வேண்டும்? ஆகையால் அந்த எண்ணத்தை உடனே மாற்றிக் கொள்வேன். அரசர் குலத்தில் பிறந்த வளாயில்லாமல் கடற்கரையில் வாழும் படகுக்காரர் குடும்பத்தில் நான் பிறந்திருக்கக் கூடாதா என்று எண்ணிக் கொள்வேன்."

"தெரிகிறது, வானதி! எனக்குத் தெரிகிறது! பூங்குழலியைப் பார்த்து நீ பொறாமைப் படுகிறாய்!"

"ஆம், அது உண்மைதான்! இந்த உலகத்திலேயே பூங்குழலி தேவியைப் பார்த்

துத்தான் நான் பொறாமைப்படுகிறேன். அவருடைய மனோரதம் நிறைவேறி விட்டது. அவரும் அவருடைய காதலரும் கோடிக்கரைக்குப் போய் அலை கடலில் படகு செலுத்தியும் குழகர் கோவிலில் சேவை செய்தும் ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறார்கள். அவர் ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்? சிரிக்கத்தான் சிரிப்பார்! ஐயா! வேறு எந்தவிதமாக வேணும் என்னைத் தண்டியுங்கள். பூங்குழலி தேவி என்னைப் பார்த்துச் சிரிக்கும்படி மட்டும் செய்யாதீர்கள்...!"

முதல் நாள் இரவு நடந்ததைப் பொன்னியின் செல்வர் நினைவு கூர்ந்து, '"வானதி! கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு! நேற்று பூங்குழலி உன்னைப் பார்த்துச் சிரித்தாள் அல்லவா? அவளைப் பார்த்து நீ சிரிக்கும் காலம் வரும்!"

"சுவாமி! நான் பூங்குழலி தேவியைப் பார்த்துச் சிரிக்க விரும்பவில்லை. வேறு யாரைப் பார்த்துச் சிரிக்கவும் விரும்பவில்லை. யார் வேண்டுமானாலும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு போகட்டும். தங்களுடைய பொன் முகத்தில் சில சமயம் புன்னகையைக் காண்பதற்குத்தான் ஆசைப்படுகிறேன். மற்றவர்களைப் பார்க்கும் போதும் பேசும் போதும் தங்கள் முகம் மலர்ந்திருக்கிறது. என்னைப் பார்க்கும்போது மட்டும் தங்கள் புருவங்கள் நெரிகின்றன. இப்போது கூடத் தங்களைப் பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது..."

"வானதி! இதைக் கேள்! உன்னைப் பார்த்ததும் என் முகம் சுருங்குவதற்குக் காரணம் இருக்கிறது. மற்றவர்களால் எனக்கு எவ்வித இடையூறும் இல்லை; அவர்களால் என் மன நிம்மதி குலைவதில்லை. உன்னால் என் உள்ளம் அமைதியை இழக்கிறது. நேற்றிரவு நீ தூங்கவில்லையென்று என் தமக்கையார் கூறினார். நானும் தூங்கவில்லை, வானதி! பல தினங்களாகவே தூங்குவதில்லை. அரண்மனை மேன்மாடத்தில் படுத்து ஆகாசத்து நட்சத்திரங்களைப் பார்த்தேனானால், உன் கண்களின் ஒளியைத் தான் அந்த விண்மீன்கள் எனக்கு ஞாபகப்படுத்துகின்றன. சோலை மரங்கள் காற்றில் அசைந்தாடி இலைகள் சலசலவென்று சப்திக்கும் போது, நீ உன் இனிய குரலில் கல கலவென்று சிரிக்கும் ஒலியைத்தான் கேட்கிறேன். மிருதுவான தென்றல் காற்று என் தேகத்தில் படும்போது நீ உன் காந்தள் மலர்களையொத்த விரல்களால் என்னைத் தொடுவதாக எண்ணிப் பரவசமடைகிறேன். வானதி! இப்படியெல்லாம் உன் நினைவு என்னை ஆட்கொண்டிருப்பதால், உன்னை நேருக்கு நேர் பார்க்கும் போது என் முகம் சுருங்குகிறது; புருவங்கள் நெரிகின்றன. என் வாழ்க்கையில் நான் சாதனை செய்ய விரும்பும் காரியங்களுக்கெல்லாம் நீ தடங்கலாகி விடுவாயோ என்று அஞ்சுகிறேன்..."

"சுவாமி! அந்த பயம் தங்களுக்கு வேண்டாம்! தங்கள் காரியங்களுக்கு நான் தடையாக இருக்க மாட்டேன்..."

"நீ தடையாக இருக்க மாட்டாய்; யாருமே தடையாக இருக்க முடியாது! மாரி காலத்தில் கீழ்த்திசையிலிருந்து புயல் கொண்டு வரும் கருமேகத் திரளை நீ பார்த்திருக்கிறாயா, வானதி! அந்த மேகத் திரளில் மழை நீர் நிறைந்திருக்கிறது. மின்னல்களும் இடிகளும் அம் மேகத்தில் மறைந்திருக்கின்றன. சண்டமாருதம் அந்த மழை நிறைந்த கொண்டலைத் தள்ளிக் கொண்டு வருகிறது. அதை யாராவது தடுத்து நிறுத்த முடியுமா? அந்த மேகங்களின் நிலையில் நான் இருக்கிறேன். வானதி! என் உடம்பில் எப்போதும் ஒரு பரபரப்பு இருந்து கொண்டிருக்கிறது. என் உள்ளத்தில் ஏதோ ஒரு வேகம் இருந்து கொண்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத மின்னல்கள் மின்னுகின்றன. காதில் கேட்காத இடி முழக்கங்கள் ஒலிக்கின்றன. புயல்களும் சூறைக்காற்றுகளும் சண்டமாருதங்களும் என்னை அழைக்கின்றன. ஏழு கடல்களிலும் மலைமலையாக அலைகள் கிளம்பி என்னை வரவேற்கின்றன. ஆயிரமாயிரம் சங்கங்களின் நாதமும், முரசுகளின் முழக்கமும், போர் யானைகளின் பிளிறல்களும் என்னைக் கவர்ந்து இழுக்கின்றன. என்னை யாரும் தடுக்க முடியாது. வானதி! ஆனால் தடுக்க

முயன்று எனக்கு மன அமைதி இல்லாமல் செய்ய முடியும்..."

"சுவாமி! அவ்வாறு நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன்; தடை செய்ய முயலவும் மாட்டேன். மூன்று உலகையும் ஆளப் பிறந்த தங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் இடையூறாக இருக்க மாட்டேன். ஆகையினாலேதான் தங்கள் அருகில் சோழ சிங்காதனத்தில் உட்காரவும் மறுதலிக்கிறேன்."

"வானதி! சோழர் குலச் சிங்காதனம் மகிமையில் பெரியதானாலும், அளவிலே சிறியது. அதில் ஒருவர்தான் அமர முடியும். சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் வேறொரு சிங்காதனம் அமைத்து அதில் தான் சக்கரவர்த்தினி அமர வேண்டும்!"

"சுவாமி! எனக்குத் தாங்கள் அமரும் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்கள் அருகில் தனிச் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்களுடைய பட்ட மகிஷியாகச் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கப் புண்ணியம் செய்தவளுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும். தங்களுடைய நெஞ்சமாகிய சிங்காதனத்திலே எனக்குச் சிறிது இடங் கொடுத்தீர்களானால், அதுவே ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தின் பயன் என்று கருதிப் பூரிப்பு அடைவேன்!"

"வானதி! என்னால் சுலபமாகக் கொடுக்க முடிந்ததை நீ கேட்டாய். என்னுடைய நெஞ்சமாகிய சிங்காதனத்தில் நீ ஏற்கெனவே இடம் தயார் செய்து கொண்டு விட்டாய்! அதை நான் உனக்குத் தருவதில் எவ்விதத் தடையுமில்லை! இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக உண்மையிலேயே நீ விரும்பவில்லையா, வானதி! கண்டோர் கண்கள் கூசும்படி ஜொலிக்கும் நவரத்தினங்கள் பதித்த பொற்கிரீடத்தை உன் சிரசில் சூட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உனக்கு இல்லையா?"

"அந்த ஆசை எனக்குச் சிறிதும் இல்லை! சோழ குலத்துப் புராதன மணி மகுடங்களை நான் பார்த்திருக்கிறேன். கையில் எடுத்தும் பார்த்திருக்கிறேன். அவற்றில் ஒன்றை என் தலையில் வைத்துக் கொண்டால், அதன் கனம் என் தலையை அமுக்கிக் கழுத்தை நெறித்து மூச்சுவிடத் திணறும்படி செய்து விடும் என்று அஞ்சுகிறேன். அவ்வளவு வலிமை என் உடலில் இல்லை. அவ்வளவு தைரியம் என் மனத்திலும் இல்லை. சுவாமி! நவரத்தினங்கள் இழைத்த மணி மகுடத்தைச் சுமக்க வலிமையும் தைரியமும் உள்ளவர்கள் அதைச் சுமக்கட்டும். தாங்கள் கடல் கடந்த நாடுகளுக்குப் பிரயாணம் புறப்படுவதற்கு முன்னால், எனக்கு வேறொரு பரிசு கொடுத்து விட்டுப் போங்கள். அரண்மனை நந்தவனத்திலிருந்து அழகான மலர்களைப் பறித்துத் தொடுத்து மாலை கட்டித் தருகிறேன். என்னால் எளிதில் சுமக்கக் கூடிய அந்த மாலையை என் கழுத்தில் சூட்டி என்னைத் தங்கள் அடிமையாக்கிக் கொண்டு விட்டுப் புறப்படுங்கள்...!"

"சீன வர்த்தகர்களிடமிருந்து நவரத்தின மாலையை உனக்குப் பட்டாபிஷேகப் பரிசாகக் கொண்டு வந்தேன்."

"தங்கள் பட்டாபிஷேகத்துக்கு எனக்குப் பரிசு எதற்கு?"

"சரி; வேண்டாம்! இதை வேறு யாருக்காவது கொடுத்து விடுகிறேன். வானதி! நீயும் நானும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம். நான் புறப்படுவதற்கு முன்னர் உன் விருப்பத்தின்படி உனக்கு ஒரு மாலை சூட்டிவிட்டுப் போகிறேன். நான் சூட்டும் அந்த மணமாலைக்குப் பதிலாக நான் ஒவ்வொரு தடவை அயல் நாடுகளிலிருந்து திரும்பி வரும் போதும் நீ ஒவ்வொரு பூமாலையுடன் காத்திருக்க வேண்டும். கடல் கடந்து தூர தூர தேசங்களுக்கெல்லாம் சென்று புலிக் கொடியை நாட்டி விட்டு வெற்றி முழக்கத்துடன் நான் திரும்பி வரும்போதெல்லாம் நீ ஒரு வெற்றி மாலையுடன் எனக்காகக் காத்திருக்க வேண்டும்..."

"ஒரு மாலை என்ன? நூறு நூறு மாலைகள் தொடுத்து வைத்துக் கொண்டு காத்திருப்பேன். இந்தத் தேச மக்கள் எல்லாரும் காத்திருப்பார்கள்!" என்றாள் இளவரசி வானதி.

(தொடரும்)





எண்ணி இரண்டே இரண்டு டீனேஜ் பெண்கள் சந்தித்தாலே போதும். அந்த இடமே நீர்த்தூளிப்படும். ஸ்ரீதேவி. பிருந்தா. பிரசாந்தி. பியூலா. ரம்யா... (தோழிகள் ஐவரும் அக்மார்க் ஜாலிப் பிசாசுகள்!) அனைவரும் ஓரிடத்தில் சேர்ந்தால்?...

ரகளை ராட்டினமாடியது.

ஒன்றாக உட்கார வைத்து. ஒரே ஒரு கேள்வி கேட்டோம்.

"அம்மாக்கிட்டே பிடிச்சது எது? பிடிக்காதது எது?"

"அம்மா ரோஜாப்பூ நிறத்துல அழகா இருப்பாங்க."

"நல்லா நடிப்பாங்க!"

"பாட்டு கூட பாடுவாங்க."

உற்சாகத்துடன் அடுக்கிக் கொண்டே போனார்கள்.

"வெயிட்... வெயிட்... நாங்க கேட்டது சினம். அம்மாவைப் பற்றி அல்ல. உங்க வீட்டு அசல் அம்மாவை" என்றதும் சினிமாஸ்கோப்பில் ரீல் பெட்டியே இறங்கியது.

"ரொம்ப பிரிய மானவங்க."

"அம்மா என்

அம்மாக்கி



• ரம்யா

• பிருந்தா



• ப்பூலா



• ஸ்ரீதேவி



• பிரசாந்தி

டே பிடிச்சது!

நால் அலவபு

"நேரில் நின்று பேசும் தெய்வம்."

"சரி... சரி... நீங்க இப்ப சொல்றதையெல்லாம் சத்தியமா பத்திரிகையில போட மாட்டோம். தைரியமாச் சொல்லுங்க... அம்மாக்கிட்டே பிடிக்காதது என்ன?" என்று கையிலடித்ததும், ஆளாளுக்கு கொட்டித் தீர்த்தார்கள். குடும்ப அமைதி காக்கும் பொருட்டு, சில மட்டும் சென்லார்!

பிரசாந்தி:– அம்மாக்கு 'சட்டு'னு கோபம் வந்துடும். அவங்க பேரு 'தொட்டாச் சுருங்கி'னு வெச்சிருக்கேன். எங்க அண்ணா ராஜாமணி, எம்.சி.ஏ படிக்கிறாரு. நல்லா படிப்பாருன்றதாலே ஒரே செல்லம். என்னை அவரோட (லிஃப்ட் வெச்சாலும் எட்டாது) ஒப்பிட்டுப் பேசுவாங்க. அது தான் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

ஸ்ரீதேவி: வாரா வாரம் என்



"தட 'புடல்' விருந்துன்னு சொல்றியே, என்ன மெனு...?"

"புடலங்காய் பொரியல், புடலங்காய் கூட்டு, புடலங்காய் பச்சடி..."

— பர்வதவர்த்தினி

ணெய் தேய்ச்சுக் குளிக்கச் சொல்லிப் படுத்திடுவாங்க. தலைமுடியை ஃப்ரீயா விட்டா, 'பரட்டையா அலையாதே'னு திட்டுவாங்க. எனக்குத் தோள் வரைக்கும் முடியைக் குட்டையா வெட்டிக்க ஆசை. ஆனா விட மாட்டாங்க.

பியூலா: 'ஃபிரெண்ட்ஷிப் டே' அன்னிக்குத் தோழிகள் கட்டிவிட்ட பேண்ட் எல்லாம் கொஞ்சம் நிறைய சேர்ந்து போச்சு தான்... ஒத்துக்கறேன். மணிக்கட்டிலிருந்து, முழங்கை வரைக்கும் பேண்டேஜ் போட்ட மாதிரி இருக்குன்னு அம்மா ரொம்ப அமர்க்களப் படுத்திட்டாங்க... இதெல்லாம் ஃபன்தானேங்க!

ஸ்ரீதேவி: லீவு நாள்லகூட ஜாலியா தூங்க விட மாட்டேங்கறாங்க. 'பொம்பளைப் பிள்ளை இப்படிப் படுத்தா உருப்படுமா?'னு ஒரே அட்வைஸ் கம் லட்சார்ச்சனை!

பியூலா: டூ வீலரை வேகமா ஓட்டப் பிடிக்கும். ஆனா அம்மா திட்டுவாங்க. நான் ஸ்கூல்ல நடக்கற எல்லா நிகழ்ச்சிலேயும் கலந்துப்பேன். பரத நாட்டியம் கத்துக்கிட்டா இன்னும் நல்லா டான்ஸ் பண்ணலாம்னு தோணும். ஆனா அம்மா 'நோ' சொல்லிட்டாங்க.

பிரசாந்தி:- ஜிமிக்கி, செயின்னு புது டிசைன்ல தங்க நகையைப் போட்டு விடுவாங்க. நான் உடனே அதையெல்லாம் கழட்டிட்டு, அஞ்சு ரூபா, பத்து ரூபா ஃபேன்ஸி சமாசாரமா எடுத்துப் போட்டுக்குவேன். 'பித்தளையைப் போட்டுக்கிட்டியாடீ'னு கத்துவாங்க.

ரம்யா: எனக்குப் பால் பிடிக்கும். அதுல மோரை ஊத்தி, தயிரா பண்ணி, சாதத்தோட கலந்து ஒரு ஐட்டம் பண்ணுவாங்க பாருங்க... அது பிடிக்கவே பிடிக்காது. ஆனா தினமும் 'ஒரு வாயாவது தயிர் சாதம் சாப்பிடு'ன்னு ஒரே போர்!

பிரசாந்தி: கல்யாணம், சினிமான்னு வெளியே போகும்போது, எங்கம்மா லிப்ஸ்டிக் போட்டுக்கிட்டா, எனக்குப் பிடிக்காது.

பிருந்தா: டி.வியில சானல் மாத்திக்கிட்டே இருந்தா திட்டு. சத்தமா பாடி, ஆடினால் திட்டோ திட்டு.

ரம்யா: நெற்றியை மறைப்பது போல முடியை வெட்டி விட்டா அம்மாவுக்குப் பிடிக்காது. அம்மா பார்க்கும்போது, வழிச்சு வாரிக்குவேன். ஆனா ஸ்கூலுக்கு வந்ததும் முடிக்கற்றை தானா முன்னுக்கு வந்துடும்.

"ஓகே... குற்றச்சாட்டுகள் போதும்... பிடிச்சதெல்லாம் சொல்லுங்க..."

ஸ்ரீதேவி: என்னோட படிப்புல ரொம்ப அக்கறை எடுத்துப்பாங்க. வீட்டுப் பாடங்கள்ல உதவி செய்வாங்க. தாத்தா, பாட்டி, அப்பா எல்லாரும் தம்பி சதீஷ்க்கு (அநியாயத்துக்கு ரிமோட் உடைப்பான்) சப்போர்ட் பண்ணும்போது, எனக்குப் பரிவாகப் பேசற ஒரே ஆத்மா அம்மா தான்.

பியூலா: ரொம்ப அமைதியா இருப்பாங்க. எல்லாருக்காகவும் ப்ரே பண்ணுவாங்க. குழந்தைக்குப் பிசையற மாதிரி குழைவா பிசைந்து, ஆசையா ஊட்டி விடுவாங்க. அம்மா கையாலே சாப்பிட்டா தனி டேஸ்ட்தான்!

பிருந்தா: என்ன கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுத்துடுவாங்க. 'தங்கப் பொண்ணே'னு கொஞ்சுவாங்க. மாடர்னா இருப்பாங்க.

ரம்யா: எங்கம்மா சம்பூர்ணா, அம்மா மாதிரியே நடந்துக்க மாட்டாங்க. ஃப்ரெண்ட்லியா இருப்பாங்க. அவங்களை டூவிலர்ல டபுள்ஸ் ஏத்திக்கிட்டு ஜாலியா ரைடு போவேன்.

பிரசாந்தி: ரொம்ப நல்லா சமைப்பாங்க. வீட்டைச் சுத்தமா வெச்சிருப்பாங்க. என்னோட நோட்டுக்கெல்லாம் அட்டை போட்டு, அடுக்கி வைப்பாங்க. பேனாவுக்கு இங்க் போட்டு, ஷூ பாலிஷ் போட்டு ரொம்ப உதவி பண்ணுவாங்க...

"முடிவா என்னதான் சொல்றீங்க?" என்று கேட்டதும்...

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே!" என்று கோரஸாய்ப் பாட்டு கிளம்பியது.

ஸ்கூல் டீச்சர்களை நினைத்துப் பரிதாபமாக இருந்தது.

— அனு

படங்கள்: **யோகா**

"மழை பெய்தால் சப்தம் வருமா?..."

எட்டு மாதக் குழந்தை பிரவீன். அவனுடைய தாத்தா, அவனுக்கு அருகில் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, 'ப்ளங்' என்ற சத்தத்துடன் தவறுதலாக தட்டு கீழே விழுகிறது. இந்த சப்தத்தால் எந்தவித சலனமுமின்றி காலை உதறிச் சிரித்துக் கொண்டிருந்தான் ப்ரவீன்.

'என்னடா இது, இந்தச் சப்தம் குழந்தையை ஒண்ணுமே செய்யலையே...' என்று திரும்பவும் தட்டைக் கீழே போடுகிறார் தாத்தா. இப்போதும் அப்படியே.



* மோகன் காமேஸ்வரன்



* பிரவீன்

தன் மகன் சத்யநாதனை அழைக்கிறார், "குழந்தைக்குக் காது கேட்கலையோன்னு சந்தேகமா இருக்கு. எதற்கும் அடுத்த முறை மெட்ராஸ் போனால் காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் குழந்தையைக் காட்டு" என்கிறார். குடும்பமே கவலையில் ஆழ்கிறது.

சென்னை. குழந்தை பிரவீனை ஒரு டாக்டர் பரிசோதிக்கிறார். "உண்மைதான்" "இப்போது ஒன்றும் செய்ய முடியாது. இரண்டு மூன்று வருடங்கள் கழித்து, காது கேளாதோர் பள்ளியில் சேர்த்து விடுங்கள்" என்று ஆலோசனையும் சொல்கிறார் டாக்டர். இன்னொரு ஸ்பெஷலிஸ்ட்டிடம் போனபோதும் இதே பதில்தான்.

சென்னையில் காது கேளாதோருக்கான பள்ளியிலும், அதன்பின் நார்மல் மாணவர்களுக்கான பள்ளியிலும் படித்தான் பிரவீன்.

இப்போது சென்னையில் உள்ள ஏவி.எம். மெட்ராஸ் ஈ.என்.டி. ஆராய்ச்சிக் கழக மருத்துவமனையில், பிரவீனுக்குக் காக்ளியர் இம்ப்ளாண்ட் என்ற அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்து காது கேட்க வைத்திருக்கிறார் பிரபல ஈ.என்.டி. நிபுணரான மோகன் காமேஸ்வரன்.

அறுவை சிகிச்சை காயம் ஆறியபின், இருபத்தியோராம் நாளுக்குப் பிறகு, காதுக்குள் பொருத்தப்பட்ட கருவி சுவிட்ச் இயங்கி, செயல்பட ஆரம்பித்தது.

"வீட்டுக்குப் போனவுடன், நான் அவனுக்குப் பால் எடுத்துக் கொண்டு வந்து ஆற்றினேன். அவன் முகத்தில் ஆச்சரியம். "பாலை ஆற்றினால் இப்படி சப்தம் வருமா?' என்று கேட்டான்.

அடுத்து டாய்லெட்டுக்குள் சென்றவன் திரும்பி வந்தவுடன், "அம்மா, நான் ப்ளஷ் டாங்க் குமிழைத் திருகியதும் அப்படி ஒரு சத்தத்துடன் தண்ணீர் பாய்கிறதே! இத்தனை வருடமாக நான் கேட்டதே இல்லையே!" என்று வியப்புடன் கேட்டான்.

'மழை பெய்யும் போது இப்படிச் சப்தம் ஏற்படுமா? மரத்திலிருந்து இத்தனை விதமான பறவைகளின் ஒலி கேட்குமா?' என்றெல்லாம் அடுக்கடுக்காய்க் கேட்டபோது எங்கள் கண்கள் கலங்கிவிட்டன" என்று சொல்லும் ப்ரவீனின் பெற்றோர்கள் "'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்று வள்ளுவர் சொன்னாரே, அதன் முழு அர்த்தத்தை நாங்கள் பிரவீன் மூலமாகத்தான் புரிந்து கொண்டோம்!" என்கிறார்கள்.

- எஸ். சந்திரமௌலி

நாளை போவேன்

முயற்சி செய்ததாகத் தெரியவில்லை. ஒரு வாலிழந்த பறவை 'விர்' என்று இறங்கி பின்னர் மேற்கே சென்று மேகத்தில் புதையுண்டது.

இங்கே அனைத்துமே முன்னதாக திட்டமிடப்பட்டு, அட்டவணைப் படுத்தப்பட்டு செயல்படுவதாக இவனுக்குள் தீர்மானம். இயற்கை கூட தனது காரியங்களை அட்டவணைப்படுத்தி சாதிக்கிறதோ? முன்னதாகக் கணிக்கப்பட்டு, காரியங்கள் ஆற்றப்படுவதில், எதிர்பார்த்தபடி நடைபெறுவதில் சுவாரஸ்யமில்லை என்பது அவன் எண்ணம்.

வாழ்க்கை என்பது 'எதிர்பார்ப்பு' அத்தியாயங்களால் எழுதப்பட வேண்டும். சந்தோஷமோ,



வானம் எதையோ சுமந்து கொண்டு வேர்த்துப் போயிருந்தது. இயந்திர கதியில் சீராகத் தூறல்கள். இலை உதிர்ந்த மரங்கள் தூறல்களை அதிகமாக வாங்கிக் கொண்டு ஜீரணிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தன. காலை பிரார்த்தனைக்குச் சர்ச்சுக்குச் செல்லும் வயதான வெள்ளையர்கள், கண்களில், நீர் முட்டிய குளிரைத் தான் கைக்குட்டைகளால் ஒற்றிக் கொண்டு, நடக்கின்றபோது அடிக்கடி ஆமையைப்போல தலையைத் திருப்பி இழுத்துக் கொண்டனர். அவர்களை எந்த முயல்களும் முந்த

துக்கமோ சொல்லிக்கொண்டு வரக்கூடாது. பிறப்பைப் போல, இறப்பைப் போல 'இன்றோ, நாளையோ' எனும் நிகழ்வுகளால் அமைய வேண்டும்.

திரைச்சீலையை விலக்கி, ஜன்னலின் இரட்டைக் கண்ணாடியின் ஊடே வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான். இது ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கின்ற நிகழ்ச்சி. உண்மைதான். இந்த நிகழ்வில் இவனுக்குள் முரண்பாடு. எந்தத் திட்டமிடுதலை எதிர்க்கின்றானோ, அதனிடமே சமரசம் செய்து கொண்டு அடங்கிப் போகின்றான். எப்போதாவது மனசு மட்டும் புற வாழ்க்கையை உடைத்துக் கொள்ள அவசரப்படுவதும், அப்போதெல்லாம் அதனை அமைதிப்படுத்துகின்ற வகையில் 'போதும், இந்த வாழ்க்கை போதும். இந்த பொம்மலாட்ட



வாழ்வு வேண்டாம். எப்படியாவது இந்தக் கயிற்றிலிருந்து விடுபட வேண்டும்' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

வானிலிருந்து இரைச்சலாகச் சப்தம். அவன் உள்ளத்தைப் போல இரைச்சலிட்டுக் கொண்டு செல்லும் விமானம். அதனுடைய காரியங்கள் கூட திட்டமிடப்பட்டவை. புறப்படும் இடம், சேர இருக்கின்ற இடம், எடுத்துக் கொள்ளும் நேரம், பயணிகளின் எண்ணிக்கை என எல்லாமே. இதோ இரைச்சலிடும் இந்த விமானம் போகும் ஊர் எந்த ஊராக இருக்கும்? அவனது பூகோள அறிவு விடை தராமலே, அவனுடைய அந்தத் தேடுதலின் சுவாரஸ்யத்தைக் கலைக்காமல் ஒளிந்து கொண்டது.


நாகரத்தினம் கிருஷ்ணா

காலை ஆறுமணி. அதிகாலை விழிப்பினை ஐரோப்பா அறியாதது. இவன் மட்டும் விழித்திருந்தான். காலை ஐந்து மணியிலிருந்து ஜன்னலை ஒட்டி நிற்கிறான். இப்படி அதிகாலை எழுந்திருக்கின்ற பழக்கம் அவனுக்கு இந்தியாவில்தான் வந்தது. மார்கழி

மாதங்களில், சின்ன வயதில் காலையில் எழுந்து, கிணற்று நீரை வாளி வாளியாக உடம்பில் கொட்டிக்கொண்டு, பஜனை பாட ஓடியதும், பஜனையின் முடிவில் தரப் பட்ட சுண்டலைத் தின்றுவிட்டு சட்டையில் துடைத்துக்கொண்டு அம்மாவிடம் திட்டு வாங்கியதும் நினைவில் வந்துபோனது. அன்றைக்குப் பஜனையில் கலந்து கொள் வதற்காக எழுந்த உற்சாகம், இன்றைக்கு அவனுக்கு இல்லையென்றாலும் இந்த ஐரோப்பிய மண்ணிற்கு வந்த பின்னரும், காலையில் விழிப்பு வந்து விடுகிறது. தன் வீட்டின் பிற உறுப்பினர்கள் காலை பத்து மணிவரை தூக்கத்தை அனுபவிப்பதைக் கண்டு இவனுக்கு எரிச்சல். இந்த எரிச்சல் அவனுக்கு மட்டுமல்ல, எதிர்த்தரப்பில் அவர்களுக்கும் உண்டு. பின்னே இருக்காதா? காலையில் எழுந்து, கொட்ட கொட்ட 'எதையோ' ஞாபகப்படுத்திக் கொண்டு விழித்திருந்தால் அவர்களுக்கு எரிச்சல் இருக்காதா?

பிரேமா - அவன் மனைவி - எழுந் தவுடன் அவளிடம் பேச வேண்டும் என்று தீர்மானித்தான்.

இதோ ஜன்னலில் பார்க்கின்ற காட் சிகள் மாற வேண்டும். காகம் கரைதலைக் கேட்க வேண்டும். கூரை வேய்ந்த வீடு களைக் கடந்து செல்லும் புகை மூட்டத் தைக் காண வேண்டும். காலைப் பேருந்து களில், மார்க்கெட்டிற்குப் போவதற்காக இறக்கப்படும் காய்கறி கூடை களின்



''புறம்போக்கை வளைக்கிறதுல தலைவருக்கு நிகர் அவரேதான்.''

''எப்படிச் சொல்றே?''

''இவ்வளவு காலமா எம்.எல்.ஏ.வா இருந்தவர் எம்.பி தொகுதி பெரிசுன்னு எம்.பி ஆயிட்டாரே!''

— சீர்காழி ரேவதி

'தொபீர்'களைக் கேட்க வேண்டும். போர் வையை விலக்காமல், கலைந்த தலையும் கண்களில் தூக்கமுமாய் டீக்கடைக்குள் நுழையும் 'என் முகங்களை'க் காண வேண்டும். மழையில் நனைந்த சோர்வை வெளிக்காட்டாமல், சாராயத்திற்கு வழி பிறந்தது என்ற தெம்பில் ரிக்ஷாவின் பெடல் களை மிதிக்கும் 'என் கால்களை'க் காண வேண்டும். தண்ணீரில் நனைத்த விரல் களைச் சொடுக்கி, காம்புகள் வலிக்காமல் கால் இடுக்கில் குவளையைத் தொற்ற வைத்து பால் கறக்கின்ற 'என் கைகளை'க் காண வேண்டும். இப்படி அவனுக்கு நிறைய சொந்தங்கள் இந்தியாவில் உள்ளன. ஆனால் அதுதான் எப்போது? என்றைக்கு? நாளையா? நாளை மறுநாளா? அடுத்த மாதமா? அடுத்த வருடமா? இதில்தான் குழப்பமெல்லாம்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் இங்கே வந்து எல்லாவற்றிலும் பிரமித்தது நிஜம். அந்த பிரமிப்பு இப்படி தன்னை இவ்வளவு சீக்கிரம் குறுக்கி விடும் என்று அவன் நினைத்ததில்லை.

தீர்மானித்து விட்டான். இன்றைக்கு இதற்கொரு முடிவு கட்டியாக வேண்டும். ஸ்டீரியோவைத் திருப்பினான். சி.டி யில் நித்யஸ்ரீயின் குரலில் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா' என்ற பாடல். சிரித்துக்கொண்டான்.

பிரேமா எழுந்துவிட்டாள். கட்டிலை சரி செய்துவிட்டு, இன்னும் சிறிது நேரத்தில் கேட்பாள். 'என்னங்க? கப்பூச்சினோவா? ஹார்லிக்ஸா?' இந்தக் கேள்வியைக்கூட அவள் மாற்றினால் தேவலாம்.

பூசணிப் பூவும், கோலமும் இல்லாமல், இங்கே மார்கழி மாதம் வீட்டில் விழித்துக் கொள்வதில் அவனுக்குள் எரிச்சல். இன்னும் சிறிது நேரத்தில் இவனது வாரி சுகள் அறைகளில் மாயா சுரேவின் 'குளோஸ் ஆல் மை ஐஸ்'ஸோ அல்லது விட்னி ஹூஸ்டனின் 'மை லவ் ஈஸ் யுவர் லவ்'வோ ஒலிக்கத் தொடங்கி விடும். இவன் தேடுகின்ற தருமபுரம் சுவாமிநாதனுக்கோ, சின்ன மௌலானாவுக்கோ இங்கே இட மில்லை என்கின்றபோது மனத்துக்குள் புழுக்கம் கூடிவிடும்.

முகத்தைத் திருத்திக் கொண்டு பக்கத்தில் வந்து நின்றாள் அவன் மனைவி.

"பிரேமா! கொஞ்சம் சாக்லேட் அதிக

மாக விட்டு கப்புச்சினோ கொண்டு வா, உன்னோட பேசணும்.''

''ஆமாம், உங்களுக்கு ஞாயிற்றுக் கிழமையானா இந்தியா ஞாபகத்துக்கு வந்திடுமே. இன்றைக்கு இந்தியாவுக்குக் கிளம்ப வேண்டும்னு காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு குதிப்பதுதான் உங்களுக்கு வழக்கமாயிடுச்சே!''

''அப்படி இல்லை பிரேமா! இன்றைக்குத் தீர்மானமா இருக்கேன். இப்படி உட்கார்.''

''எனக்கு நிறைய வேலை இருக்குது. கொஞ்சம் இருங்கள்.''

சென்றவள், பாங்கிலிருந்து கடந்த மாத இறுதியில் வந்திருந்த நிலவரத் தாள்களை மேசையில் பரப்பினாள்.

அவசர அவசரமாக அவற்றைப் புரட்டினான். எத்தனை முறை புரட்டினாலும் அதில் இருப்பதுதான் இருக்கும் என்ற அடிப்படை உண்மையில் நம்பிக்கை அற்று புரட்டினான். எண்களும், பூஜ்ஜியங்களும் கண்ணாமுச்சி ஆடின.

இங்கே வந்த ஆரம்பத்தில் இந்தியப் பெரியவர்களைப் பார்த்து அவன் கேட்கின்ற கேள்வி இதுவாகத்தானிருக்கும்.

''ஏங்க, இப்படி இந்த ஊர்ல இருக்கறீங்க? ஆயிரம் பிரச்னைகள் இருந்தாலும் நம்ம ஊரு மாதிரி வருமா?''

''என்ன செய்வது தம்பி? நம்முடைய தலைவிதி அது. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காரணத்தைச் சொன்னாலும், ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கணும்னுதான் இங்கே வரோம். பிறகு கொஞ்ச கொஞ்சமா, பிள்ளைகள் இந்தச் சூழல்ல வளரும்போது, அவர்களோட நாமும் இங்க வாழ வேண்டிய நிர்ப்பந்தம்.''

''அப்படிச் சொல்லாதீங்க! எனக்கு மட்டும் தேவையான பணம் கெடைச்சுதுன்னா, நான் ஊருக்குத் திரும்பிடுவேன்.''

அந்தப் பெரியவர் சிரித்தார்.

அவனுக்கு அந்தத் தேவையான பணத்தை நிர்ணயிப்பதில்தான் சிக்கலே. வந்த புதிதில் ஒரு குறிப்பிட்டத் தொகையை மனத்தில் வரித்துக்கொண்டு 'தேடுதலைத்' தொடங்கியவன், இன்றைய தேதி வரை நிறுத்திய பாடில்லை. வருடங்கள் கூட கூட அவன் மனத்தில் வரித்தத் தொகை கூட தனது நீள அகலத்தை, பரிமாணத்தைக் கூட்டிக் கொண்டு 'உச்ச'க் கொட்டியது. கைக்கெட்டிய சுகங்கள் அவனுக்குத்

திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு - 8

'ஆ...ஜில்!' போட்டியில் 'எந்தப் படம் தமிழகப் பகுதியைச் சேர்ந்தது?' என்று கேட்டிருந்தோம். 6வது படம்தான் என்ற சரியான விடையை ஏராளமான வாசகர்கள் எழுதி எங்களைத் திக்குமுக்காட வைத்து விட்டனர். அவர்களில் குலுக்கல் முறையில் ரூ.100/- பரிசு வென்றவர்:-



கீதா ரத்தினசாமி,
36, தேவரம்மா இல்லம்,
ராஜீவ் நகர்,
சுத்தாணி ரோடு,
சத்தியமங்கலம் – 638 401

திகட்டவில்லை. மாறாக இன்னும் இன்னும்... என்ற ஏக்கத்தை வளர்த்தது.

பாங்குத் தாள்களிலிருந்து விடுபட முடியாமல் தலையைச் சொறிந்து கொண்டான்.

'பிரேமா!'


''கூப்பிட்டீங்களா?''

''ஆமாம். நம்ம பாங்குக்காரனிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கணும். இந்தியாவிலே இன்னுமொரு வீடோ அல்லது இங்கேயே இன்னும் ஒரு அப்பார்ட்மெண்டோ வாங்கணும்.''

''அப்போ... இந்தியாவுக்கு எப்போ திரும்பறதா உத்தேசம்?''

''இப்போதைக்கு இல்லை'' சலித்துக் கொண்டு இவனிடமிருந்து பதில் வந்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமையும் ஜன்னலின் திரையை விலக்கிக் கொண்டு, ஐரோப்பிய வாழ்க்கையைச் சாபமிடுவான். இந்தியாவுக்குப் போக நாள் குறிப்பான். ○



"நீங்க சர்வகட்சி அனுதாபியா இருக்கலாம். அதுக்காக இப்படி போஸ்டர் அச்சடிச்சு வீட்டு வாசல்ல ஒட்டிக்கணுமா?"

— கே.ஜி.எஸ். கோவிந்தன், கிருஷ்ணாபுரம்.

கேட்க நினைத்ததும்

கேட்கத் தயங்கியதும்

கேள்வி : **எச்ஐவி. பாதிப்புக்குள்ளானவர் (எச்ஐவி. பாஸிட்டிவ்) என்றால் என்ன ? அதனால் வரக்கூடிய பிரச்சினைகள் எவை ?**

பதில் : எச்ஐவி. கிருமிகள்தான் எய்ட்ஸ் நோயை உண்டாக்குகின்றன. ஆனால், இந்தக் கிருமி உடலில் நுழைந்த உடனே, எய்ட்ஸ் நோய் அறிகுறிகள் தோன்றி, பாதிக்கப்பட்டவர் அவதிப்படுவதில்லை.

எச்ஐவி. கிருமிகள் உடலில் நுழைந்த உடன் அவை தாக்குவது 'சிடி4' (CD4) என்ற இரத்த வெள்ளையணுக்களைத்தான். இந்த சிடி4 என்ற இரத்த வெள்ளையணு ஒரு ஆரோக்கியமான மனிதனின் ஒரு மில்லி இரத்தத்தில் 300-லிருந்து ஆயிரம் வரை இருக்கும்.

எச்.ஐ.வி. கிருமிகள், சிடி4 வெள்ளையணுக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்க ஆரம்பிக்கின்றன. தற்சமயம் எச்ஐவி. கிருமிகள் செய்யும் இந்த அழிவு வேலையை நிறுத்தவோ, அவைகளைக் கொல்லவோ அல்லது எச்ஐவி. கிருமிகள் நம் உடலுக்குள் நுழையாமல் தடுக்கவோ மருந்துகளும் இல்லை, தடுப்பூசிகளும் இல்லை. எனவே, எச்ஐவி. கிருமிகள் எந்தவிதமான தடையுமின்றி ஆனந்தமாக சிடி4 வெள்ளையணுக்களைக் கொல்கின்றன.

சிடி4 வெள்ளையணுக்கள் தொடர்ந்து கொல்லப்பட்டாலும், ஒரு மில்லி இரத்தத்தில் இருக்கும் ஆயிரம் சிடி4 வெள்ளையணுக்கள் நூறு என்ற அளவிற்கு குறைகிற வரையில், உடம்பில் எந்த நோயின் அறிகுறியும் வராமல் பாதுகாத்து விடுகின்றன. இந்த சமயத்தில், எச்ஐவி. கிருமியால் பாதிக்கப்பட்டிருந்தாலும், அந்த நபர் பார்வைக்கு ஆரோக்கியமாகவும் - உற்சாகமாகவும் - சுறுசுறுப்பாகவும் இருப்பார். தான் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டிருப்பதே அவருக்குத் தெரியாது. எதிர்பாராதவிதமாக அவருக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்படும் போதுதான், தனக்கு எச்ஐவி. / எய்ட்ஸ் இருப்பது தெரியவரும். இந்த நிலையைத்தான் எச்ஐவி. பாதிப்புக்குள்ளான நிலை (எச்ஐவி. பாஸிட்டிவ்) என்று கூறுகிறோம்.

எச்ஐவி. பாதிப்புக்குள்ளான இவர்கள், உடலுறவின் மூலமும், பாதிக்கப்பட்ட தன் இரத்தத்தை மற்றவர்க்கு தானம் செய்வதின் மூலமும், அறிந்தோ அறியாமலோ இந்த நோயை மற்றவர்களுக்கு பரப்பி விடுகிறார்கள்.

(தொடரும்)

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
தொலைபேசி எண் : 8255467 **ஹாட்லைன் : 8256882** மற்றும் **1097**



ஜூன் 13 முதல் 19 வரை

மேஷம்: கன்னிப் பேச்சிலேயே முதல்வரிடம் சபாஷ் வாங்குற எம்.எல்.ஏ மாதிரி உங்க பேச்சாற்றல், திறமையெல்லாம் வெளிப்படப் போகுது. சுக்ர பலன் உங்க பக்கம் பார்வையைத் திருப்பி இருக்கறதால புதுசா ட்ரெஸ், தங்க நகைகள் வாங்க வாய்ப்பு இருக்கு. (கணவன்மார்கள் பர்ஸ் பத்திரம்!). கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக்குப் பஞ்சமிருக்காது. சென்னை, குற்றாலம், எம்.ஜி.எம், மாயா ஜாலுக்கெல்லாம் கூட்டிட்டுப் போக மாட்டேன்னு அடம் பிடிச்சவங்களெல்லாம் இப்ப மனசு இறங்கி 'வாங்க போகலாம்'னு சொல்லப் போறாங்க. இதனால ஜாலிக்குப் போட்டிருந்த வேலி உடையும்.

ரிஷபம்: மாநிலத்துல முதலிடம் பிடித்த ப்ளஸ் டூ மாணவி மாதிரி மகிழ்ச்சியில துள்ளப் போறீங்க. இந்த வாரம், பார்ட்டி, டூருக்குப் பஞ்சமிருக்காது. இதுவரை குடும்பத்துல டிமிக்கிக் கொடுத்து வந்த 'டும்டும்' நிகழ்ச்சி இப்ப நடக்க வாய்ப்பிருக்கு. பணம் பலவழிகள்ல இருந்து வந்து பையை நிரப்பும். 'புலியை சைவமாக்கும் வித்தை புரட்சித் தலைவிக்குத்தான் தெரியும்'னு நம்ம சபாநாயகர் சொன்ன மாதிரி நீங்களும் ஏதாவது அசத்தலா பேசி மத்தவங்க பாராட்டைப் பெறுவீங்க.

மிதுனம்: நேபாளத்துல நடக்கற மாதிரி உங்க மனசு குழப்பத்துல சுழலும். ஒரு முறைக்கு பலமுறை யோசிச்சு செயல்படுங்க. செலவு பயங்கரமா எகிறும். பர்ஸ் பத்திரம். அதிக அலைச்சலைத் தவிர்க்க முடியாது. இதோட, உடல் நலத்துலயும் கவனம் வையுங்க. வியாபாரம் பண்றவங்க அகல கால் வைக்க வேண்டாம். பிரதமருக்கு வந்த மூட்டு வலி மாதிரி ஏதாவது வந்துடும். ஜாக்கிரதை. எந்த வேலை செய்தாலும் அதுல முழு ஈடுபாட்டோடு இறங்கினா, மேலதிகாரிங்க திட்டுகள்ல இருந்து தப்பிக்கலாம்.

கடகம்: உங்க திறமை, புத்திசாலித்தனமெல்லாம் பளிச்சிடப் போகுது. இருந்தாலும் கிரகங்கள் 'கில்லி'தாண்டு ஆடுவதால் நல்லதும் கெட்டதும் மாறி மாறி வரும். எந்த காரியத்திலயும் வெற்றி உங்களை 'லுக்' விட்டுட்டே இருக்குது. அதனால கவலை வேண்டாம். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதற்கான வாய்ப்பு வரப் போகுது. ஆனவங்களுக்கு 'பாப்பா' பிறக்க வாய்ப்பிருக்கு. பொருளாதாரம் சுமார் நிலையில் இருப்பதால செலவைக் கட்டுப்படுத்துங்க...

சிம்மம்: இதுவரை வேலை தேடிட்டிருந்தவங்களுக்கு இப்ப அதுக்கான வாய்ப்பு வரப் போகுது. 'ஊர் சுத்தறான்'ங்கற பட்டம் இனி அவ்வளவுதான். கவலையை விடுங்க. மேலதிகாரிங்களோட பாராட்டும் புகழும் கிடைக்கும். விஞ்ஞானம், பத்திரிகை, எழுத்து துறைகளைச் சேர்ந்தவங்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். அடுத்தாப்ல யாரைக் கைது செய்வாங்களோனு அரசியல்வாதிங்க பயந்துட்டு இருக்கிற மாதிரி மனசுல திடீர் பயம், குழப்பம், வந்து வந்து இம்சிக்கும். நீங்க எதிர்பார்த்த நல்ல செய்தி ஒண்ணு இப்ப வர சான்ஸ் இருக்கு.

கன்னி: உங்க திட்டங்கள் வெற்றி பெற போகுது. பொருளாதாரம் பிரச்னை இல்லாம இருக்கும். கொடுக்கல், வாங்கல்ல சுமாரான லாபம்தான். விஞ்ஞானம், எலக்ட்ரானிக்ஸ், இரசாயனம் போன்ற துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்குப் புகழ் பாராட்டு கிடைக்கும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு இப்ப வரப் போகுது. கணவன் மனைவிக்குள்ள இருந்த 'ட்ஷூம், ட்ஷூம்' இப்ப முடிவுக்கு வந்துடும்.

துலாம்: தடைகளைத் தாண்டி வந்த

நடக்குமென்பார்



தடகள வீரர் மாதிரி எல்லா எதிர்ப்புகளையும் மீறி வாழ்க்கையில் முன்னேற்றம் காணப் போறீங்க. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி ஒண்ணு வரும். கணவன் மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு வரும். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. எந்த ஒரு காரியத்தையும் நம்ம த.மா.கா தலைவர் மூப்பனார் மாதிரி நிதானமா ஒரு முறைக்குப் பலமுறை சிந்திச்சு செயல்படறது நல்லது. குறுக்கு வழியில போறதைத் தவிர்த்துடுங்க.


விருச்சிகம்: தி.மு.கவும் அ.தி.மு.கவும் மாறி மாறி ஆட்சிக்கு வர்ற மாதிரி நல்லதும் கெட்டதும் மாறி மாறி உங்களுக்கு நடக்கும். எந்த தொழில் செய்தாலும் அதுல பாடு பட்டால் நிச்சயம் நன்மை உண்டு. வீட்டுல சுப செலவுகள் ஏற்படப் போகுது. நண்பர்கள் சொந்தக்காரங்கயெல்லாம் நீங்க கேட்காமலேயே உங்களுக்கு உதவ முன் வருவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக் குவியும். பேச்சுல சூட்டைத் தணித்தால் பிரச்னைகள்ல இருந்து தப்பலாம்.

தனுசு: எப்படியாவது நினைச்சதை முடிச்சுடற முதல்வர் ஜெயலலிதா மாதிரி எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது முடிச்சுடுவீங்க. நிர்வாகத் திறமை கூடப் போகுது. பெண்கள் புதுசா நகை, துணி மணிகள் வாங்க வாய்ப்பிருக்கு. இரும்பு, தோல், எண்ணெய் பிஸினஸ் பண்றவங்களுக்கு லாபம் அதிகரிக்கும். சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். மருத்துவச் செலவும் அதிகரிக்கும்.

மகரம்: உங்க திறமை புத்திசாலித்தனம் வெளிப் படப் போகுது. பொருளாதார விஷயத்துல கவனமா இருங்க. முக்கியமான நிகழ்ச்சிகள் கூட தடைபட வாய்ப்பிருக்கு. சிலருக்கு வெளிநாடு போக வாய்ப்பு வரும். இடமாற்றம் வரலாம். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. புதுசா ஏதாவது திட்டம் வச்சிருந்தா இப்ப செயல்படுத்தலாம். எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி 'ஜெட்' மாதிரி ஏறும்.

கும்பம்: எல்லா கிரகங்களும் உங்களை நோக்கி நல்ல பார்வை பார்ப்பதால துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் அட்டகாசமா செய்து வெற்றி பெறுவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்க, பாராட்டு மழைல நனைவாங்க. பார்ட்டி, பங்ஷன், டூர்னு ஜாலியா என்ஜாய் பண்ண

தனுசு ராசிக்காரரான பார்த்திபனுக்கு இந்த வாரம் ச்சும்மா... லாபம் அதிகரிக்கும்!



வாய்ப்பிருக்கு. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் போன்ற துறைகள்ல வேலை பார்க்கிறவங்களுக்கு முன்னேற்றம் பிரகாசமா இருக்கும்.

மீனம்: உங்க அறிவாற்றலைப் பார்த்து மத்தவங்க பொறாமைப்பட போறாங்க. எடுத்தக் காரியங்களை எப்பாடு பட்டாவது முடிச்சுடுவீங்க. இதுவரை இருந்து வந்த தடைகள், குறுக்கீடுகள் எல்லாம் இனி ஜூட்! சிலருக்கு வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. போட்டி, பந்தயங்கள்ல வெற்றி கிடைக்கும். கலைத்துறை, சட்டம், இராணுவம், காவல் துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்குப் பாராட்டு, புகழ் கிடைக்கும்.

நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

அக்கறை

சுப்ரமண்யன் ரவிச்சந்திரன்

நான் போனபோது ராஜன் வீட்டில் இல்லை. அவனுடைய மனைவிதான் கதவைத் திறந்தாள். திறந்த அவளது தலைக்குப் பின்னாலிருந்த சுவரில் அவர்கள் திருமண புகைப்படம்.

என் வீட்டில் கூட இப்படித்தான். நுழைந்ததும் தென்படும்.

"நீங்க?"

"நான் விஸ்கோஸ்ல இருக்கேன்..."

"ஓ... நீங்களாண்ணா... நடுவுல ஒங்கள வழியில பாத்தேன்னு சொன்னார்."

அவள் நான் நுழைய தாராளமாய் வழிவிட்டு உள்ளே போனாள். போகிற போக்கில் மின்விசிறியைத் தட்டி விட்டதால் அதற்கு நேரே உள்ள நாற்காலியில் அமர சிரமமில்லாமல் போனது

கொஞ்ச நேரம் உள்ளே போன அவள், வராதது பற்றி நான் பொருட்படுத்தாமலிருந்தேன். அவள் எனக்குச் சிற்றுண்டி செய்யவே அந்த இடைவெளி எனத் தெரிந்ததும் அங்கிருந்தவாறே இரைந்தேன்.

"நான் சாப்டுட்டுத்தான் வந்தேன்... ஒண்ணும் பண்ண வேணாம்..."

அவளிடமிருந்து பதில் இல்லை...

'சொய்ங்' என்ற வாணலியின் இரைச்சலில் நாசிக்கும் செய்தி கிடைத்தது. உறுத்தாத மிளகாயின் கமறல்.

'என்னடா இது... வந்தாள்... சென்றாள்... செய்கிறாள்...'

"அவன் எப்ப வருவான்... நாழியாகுமா...?"

எனக்கு இவ்வாறு இரைந்து கேட்க சங்கடமாகவே இருந்தது. அவள் என்னை வாசலோடு அப்போதே அனுப்பியிருந்தால் உபகாரமாக இருந்திருக்கும்.



ஒவ்வொன்றாக நான் குரல் உயர்த்திக் கேட்பதும், அவள் பதிலே சொல்லாததும், நான் இவ்வளவு சீக்கிரம் அவளி டம் இயல்பாகப் பேச ஆரம் பித்தது குறித்து ஒரு வினாடி வியப்பு கூட எழுந்தது....

'அடேய் ராஜன்... வந்து தொலையேன்...'

டீப்பாயின் மேலிருந்த பத்திரிகைகளைத் தொகுத்து வேறிடத்தில் வைத்து விட்டு தண்ணீரை வைத்தாள். நான் ஏதோ பேச வாயெடுத்து அடங்கினேன்.

சேமியா உப்புமாவுக்கு இப்படி ஓர் அழகா... வட்ட வட்டமாய்ப் பதிக்கப்பட்ட காரட்டும், மிளகாயும், வெங் காயமும்...பட்டுக் கருநீலப் புடைவை, பதித்த நல்வயிரம். சேமியா குழையாமல் சீப்பெடுத்து வாரிய தலையைப் போல் கலைக்க மனமில்லாமல் படிந்திருந்தது.

அவள் எதிரே அமர்ந்து கொண்டாள்...

"ஸ்பூன் தரட்டுமா?" என்றபடி எழுந்தவளை அவசர மாக அமர்த்தினேன்.... சில விஷயங்களில் எனக்கு பாண்டித்யம் இல்லை.. ஸ்பூனால் சேமியா, வாழை இலையில் ஓட ஓட ரசம் விட்டு சாப்பிடுவது போன்றவை அதில் அடங்கும்...

"ஒங்க கல்யாணத்தும் போது ஒரு ப்ராஜெக்டுக்காக



பலோஞ்சா வரைக்கும் போக வேண்டியதாப் போச்சு... அப்பப்ப நெனச்சுக்கறது தான். வந்து பாக்கணும்னு"

இவள் கொஞ்சம் உள்ளே போனால் ஒரு வாய் போட்டுக் கொள்ளலாம்.

"அதே மாதிரி, ஒங்க கல்யாணத்தப்ப ஏங்க அப்பாவுக்கு ஸ்ட்ரோக்... அவர் தூங்கவே இல்ல. மனசு பூராவும் ஒங்க கல்யாணத்துக்கு வர முடியலியேன்னுதான் இருந்தது. உப்புமா ஆறிப் போகுது... நானும் கொஞ்சம் எடுத்துட்டு வர்றேன்... இன்னிக் காச்சும் தனியா இல்லாம.. ஒருத்தரோட சாப்பிடறேன்."


அவள் குரலில் ஏதேனும் செய்தியா, பிரமையா...சாதாரணமாகச் சொன்ன மாதிரிதான் இருந்தது.

''தலைவரே! உங்களுக்கு வேண்டாத ஓர் ஆள் உங்களுக்கு பேனர் வெச்சிருக்காரு.''

''வேண்டாத ஆள்'னு எப்படிச் சொல்றே?''

''பேட்டை ரவுடியாக இருந்து கோட்டை ரவுடியாக மாறிய தலைவரே'னு எழுதியிருக்காரே!''

– சென்னிமலை சி.பி. செந்தில்குமார்



எதிரே அமர்ந்து வாயில் போட்டுக் கொண்டாள்... சற்று நேரம் வாய்ச் சொற்கள் பயனின்றிப் போயின... சுவையான உப்புமா...

"தினம் இவ்ளோ நாழி ஆகுமா...?" மணிக்கட்டைத் திருப்பினேன்...

அவள் என்னை உற்றுப் பார்த்தாள்... அவளது மேலுதடு ஏதோ சொல்வதற்காகத் துடித்தது. என் கேள்வி பிசகோ... என்ன எழவுடா இது? யாரைத் தேடி வந்தேனோ அவனுமில்லாமல் அவனுக்குப் பதில் இருப்பவரும் பதில் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்?

''ஒங்களப் பத்தித்தான் அவருக்கு எப்பவுமே பேச்சுண்ணா. நீங்க ரூம்ல இருந்தப்போ அடிச்ச லூட்டி, ஒருத்தொருக்கொருத்தர் சமயத்துல செஞ்ச உதவின்னு அதே பேச்சுதான்." அவள் குரலில் என்ன உணர்ச்சியென்றே தெரியவில்லை. இவள் குரலே இப்படித்தானா...

உள்ளுக்குள் தூக்கி வாரிப் போட்டது. லூட்டியா... ராஜன் என்னென்ன சொன்னானோ, அதை இவள் எவ்வாறு புரிந்து கொண்டாளோ...

நான் கூட என் மனைவியிடம் ராஜனைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். சொன்னதில் தணிக்கை செய்தது ஏராளம்.

"அண்ணா, எம் மனசுக்குப் பிடிக்காமதான் நான் சொல்றேன். இது, புருஷன் பெண்டாட்டிக்குள்ள தீர்த்துக்கற பிரச்னையானாலும் உங்க உதவி தேவைப்படுது...."

அவள் நிறுத்தாமல் தொடர்ந்திருந்தால் என்னை எதுவும் தாக்கியிருக்காது...

"ஏம்மா... ராஜன் ஏதாச்சும்...?"

''அய்யய்யோ... கொடுமையெல்லாம் படுத்தல... வீட்டுக்கு எல்லாம் வாங்கிப் போடறார்... குறைச்சலே இல்ல...''

சிறிது நேர தயக்கத்துக்குப் பின் கேட்டாள்.

"நீங்க குடிப்பீங்களாண்ணா...?''

சுளீரென்று சவுக்கு தீய்த்தது... ரூமில் நானும் ராஜனும் சாப்பிட்டுக் குவித்த பாட்டில்களை வைத்து இந்த ஊரில் உள்ள அத்தனை வீட்டு காம்பவுண்டுச் சுவர்களிலும் சில்லு பதிக்கலாம். ராஜன் ஜென்டில்மேன்.... ரூம் லூட்டிகளில் இதைச் சொல்லவில்லை.

இருந்தாலும் பொய் வரவில்லை. இவள் முகத்தைப் பார்த்து... கணவனின் நண்பன் என்றதுமே அண்ணனைப் போல் கௌரவித்திருக்கிறாள்... அதே நேரம் உண்மையை ஒப்புக் கொள்ள மிகவும் சிரமமாக இருந்தது...

"ரொம்ப ரேரா. எங்கியாச்சும் டூர் போனா... எல்லோரும் சாப்பிடறச்சே மாட்டேன்னு சொல்ல முடியாது. சும்மா கம்பெனிக்காக..." எத்தகைய நாகரிகமான கயவன் நான்!

''அது பரவால்லேண்ணா... இவர் கிட்டத்தட்ட தினம் குடிச்சுட்டு வர்றார். மோட்டார் பைக்ல வேகம் வேற... ஒவ்வொரு நாளும் திக் திக்குங்குது. வர்றார். போட்டதைச் சாப்பிடறார். சாப்பாடு எப்படி, என்னன்னு அபிப்ராயம் கூடக்

கிடையாது. தொப்புன்னு படுக்கை. காலம் பற தலையைப் புடிச்சுக்கறார். இவர் உடம் புக்குத்தானே கெடுதல். பாதி ராத்திரில பாட்டு பாடறார். ஊரே நிசப்தமா இருக்கும் போது..."

அவளுடைய மூக்கு சிவந்திருந்தது... இவளுக்குள் இப்படி ஓர் அவஸ்தையா... இவளைச் சமாதானப்படுத்த வேண்டும். ஏனோ இவளது கவலையான முகத்தைக் காணச் சகிக்கவில்லை

"நீ கேக்கலாம்மா. ராஜன் கெட்டவன் இல்ல. சொன்னாக் கேட்டுப்பான்."

"மொத மொதலாக் கேட்டப்பவே, இல் லேன்னு ஓங்கிச் சாதிச்சு பெரிய சண்டை யாகி, சாப்பிடாமப் போயிட்டார். நம்ம விதி அவ்ளோதான்னு நெனச்சேன்... தெய்வந் தான் உங்களைக் கொண்டு வந்து சேத் திருக்கு..." அவள் கும்பிட்டபோது வயிற்றுக் குள் புரண்டது..

"அய்யோ... என்னம்மா இது? ஆல்ரைட். அவன ஒரு நாள் வீட்டுக்கு அழைச்சிட்டு வா. பக்குவமா பேசிடலாம்..."

புறப்பட்ட போது அவள் விடை கொடுத் துச் சிரித்தாள்... இந்தச் சிரிப்பு தொடர வேண்டும்.

வீட்டுக்குப் போகாமல் பூங்காவில் நுழைந்தேன். நானும் ராஜனும் ஒரு காலத் தில் சதா இங்குதான் இருப்போம். இங்கு இருக்கும் ரேடியோவில், நேயர் விருப்பம், நாடகம், ஏன் விவசாய நிகழ்ச்சிகள் கூடக் கேட்போம். இருவர் வீட்டிலும் அப்போது ரேடியோ கிடையாது.

இப்போது பூங்காவில் ரேடியோ சப்தத் தைக் காணோம்...

ராஜனைப் பக்குவமாகத்தான் கையாள வேண்டும். 'நீ என்ன ஒழுங்கு?' என்று சட் டென்று கோபிப்பான். சாதுர்யம் கற்றுத் தர வேண்டும். நான் தினமும் குடித்த பின்பு, ஏலக்காய் போட்டுக் கொள்வதைச் சொல்ல வேண்டும். என் மனைவி, என்னைக் கூட முதல் நாள் கேட்டாள்... 'இனிமேல் இல்லை' என்று சொல்லி விட்டுத் தொடர்ந்தேன். அவளுக்கு நாம் செய்வதைப் புரியாமல் செய்ய வேண்டும். சகஜமாகப் பேசினால் பாதி ஐயம் போகும். மொட்டைமாடி போன்ற காற்றோட்டமான இடங்களில் பேசுதல் உசிதம்... வாடையைக் காற்று அடித் துக் கொண்டு போய்விடும். ஒருமுறை 'அழுகல் தக்காளியில் ஜூஸ் குடித்தேன்' என்றேன். பேசாமல் இருந்து விட்டாள்.

நான் தினமும் கொள்ளும் உத்திதான்.

எல்லாம் சொல்லிவிட்டு 'குடிப்பதைக் குறைத்துவிடு' எனலாம். ராஜன் கேட்டுக் கொள்வான்.

'நானே நிறுத்தி விடலாமென நினைக் கிறேன்.'

இந்த வாக்கியம் அவனைப் பாதிக்கும்.

தோளில் யாரோ அழுத்துவதை உணர்ந் தேன்.


'டேய்' என்றோம் ஒரே நேரத்தில் இருவரும்... பழைய ஜாடிக்கு மூடி....

கொஞ்ச நேரம் பொது விஷயங்கள், வேலை, சம்பளம், பெற்றோர், பொதுவான நண்பர்கள்... இறந்தகாலம்....

"யாரும் என்னைக் காக்கா பிடிக்க, நான் அனுமதிக்கிறதே இல்லை..."

"என் பதினெட்டு வருஷ சர்வீஸில் இந்த மாதிரி சொல்ற, கண்டிப்பும் கடமை உணர்ச்சியும் உள்ள மானேஜரை இப்பத்தான் ஸார் பார்க் கிறேன்."

– உ. ராஜாஜி



சட்டென்று நான் திடுக்கிட்டது போல் நடித்தேன்...

"டேய், முக்கியமான விஷயம்... அதை விட்டுட்டு எதையோ பேசறேன். ஒங்க வீட்டுக்குப் போயிருந்தேன்... ரொம்ப நேரம் வெயிட் பண்ணினேன். எங்கடா போயிட்டே?" என்றேன்.

"ஜாடிக்கு மூடி....! நான் ஒங்க வீட்டுல இருந்தேன்டா! இவ்ளோ நேரம் பாத்துட்டு இப்பத்தான் வர்றேன்..." ராஜன் கண் சிமிட்டிச் சொன்னான். உற்சாகம் போலி போலிருந்தது...

"சரி டயமாச்சு... வீட்டுக்குப் போ. அதா வது குடிக்காமல் நேரே போ" என்றான்!

ஹிந்தியில் மின்னலே

“வாங்க வாங்க. திடீர்னு வெற்றி இயக்குநரா மும்பைவாசி ஆயிட்டீங்க. கணிசமான இடைவெளிக்குப் பிறகு சந்திக்கிறோம் இல்லையா, மிகவும் மகிழ்ச்சி'' என்று கவிஞர் தாமரை, தன் அறைக்கு வந்த 'மின்னலே' இயக்குநர் கௌதம் வாசுதேவை வரவேற்றார். கச்சிதமான சிறிய அறை! புத்தகங்களாலும் கேசட்டுகளாலும் நிறைந்திருக்க, இருந்த ஒரே நாற்காலியில் கௌதம் அமர்ந்தார்.



“ஒரே ஒரு படம்! அத்தனை நட்சத்திரக் குவியல் படங்களுக்கும் 'டேக்கா' கொடுத்து விட்டு, வெற்றிகரமான 150 நாளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறதே.''

“வசீகரா மட்டும் என்னவாம்? உங்களோட வாழ்நாள் பூரா உபயோகிக்கிற விசிட்டிங் கார்டு மாதிரி ஹிட் ஆயிடுச்சே'' என்று கௌதம் பதில் பாராட்டுரை வழங்க... நேரே நம்ம விஷயத்துக்கு வந்து விட்டார்கள்.

'மின்னலே' ஹிந்தியில் தயாராகுதாமே!''

''ஆமாம். கிட்டத்தட்ட படம் முடிஞ்சு போச்சு. 'கோயி மில்கயா'னு பெயர் வெச்சிருக்கோம். வாஷு பக்னானினு ஒரு பிரபல ஹிந்திப் படத் தயாரிப்பாளர். அவர் ரீமேக் படங்கள் தயாரிப்பதில் மன்னர். தேவி தியேட்டரில் 'மின்னலே' பார்த்திருக்கார். ரொம்பப் பிடிச்சுப் போகவே மாதவனைச் சந்திச்சிருக்கார்.

“ஹிந்தியில் பண்ணலாம். ஆனால் அந்தப் படத்தை கௌதம்தான் இயக்கணும்''னு மாதவன் நிபந்தனை போடவும், 'மின்னலே' மீண்டும் மின்னல் வேகத்தில் உருவாயிடுச்சு.''

''கதாநாயகி 'யுக்தா முகி'னு செய்தி வந்ததே!''

''அது தப்பான செய்தி! 'தியா மிர்ஸா'னு கேள்விப்பட்டிருப்பீங்களே. மிஸ் ஏசியா பசிபிக் அழகிப் போட்டியில ஜெயிச்சவங்க. அவங்கதான் ஹீரோயின்.''

“அப்போ, அப்பாஸ் வேஷத்தில்?''

“ஷர்மிளா தாகூர் - பட்டோடி தம்பதியின் மகன் சையஃப் அலிகான் பண்றார்.''

''இசையமைப்பாளர், உங்க ஆளேதானா?''



“கண்டிப்பா... ஹாரிஸ் ஜெயராஜ் தான். அவருக்கும் இதுதான் முதல் ஹிந்திப்படம். 'அழகிய தீயே', 'ஓ மாமு', 'வசீகரா', 'இருவிழி உனது' நாலு பாட்டும் ஹிந்திக்குப் போகுது. மற்ற



இரண்டும் புதுசா போடறாரு."

"'மின்னலே'யில் என்னுடைய பாடல்கள் மூன்றையும் மின்னல் வேகத்துல தேர்வு பண்ணிவீங்க. பெரும்பாலான வரிகள் தொலைபேசியிலேயே பேசி முடிச்சிட்டீங்க. ஆனா, படம் எடுக்க மட்டும் ரொம்ப நாளானதா ஒரு குற்றச்சாட்டு, கோடம்பாக்கத்துல உலவுது. என்ன நடந்தது?"

"மொத்த படப்பிடிப்பு நாட்கள்னு பார்த்தா, எழுபத்து ஏழு நாட்கள்தான். ஆனா வேறே காரணங்களுக்காகப் படம் கொஞ்சம் இழுத்துடுச்சு. ரீமா, தெலுங்கில் பிசியாயிட்டாங்க. காம்பினேஷன் காட்சிகளில், அப்பாஸின் தேதிகள் கிடைக்க சிரமப்பட்டோம். முக்கால்வாசி படம் முடிஞ்ச நிலையில், தனக்குப் படத்தில் முக்கியத்துவம் இல்லைன்னு நினைச்சு, அப்பாஸ் 'டபுள் பாசிட்டிவ்' பார்த்தாதான் தேதிகள் தருவேன்னு பிடிவாதமா சொல்லிட்டார். பார்த்த பிறகுதான் சமாதானமாகி, தேதி தந்தார்."

"'மாதவன்தான், தன்னுடைய காட்சிகளை வெட்டி எறிஞ்சுட்டார்'னு அப்பாஸ் பகிரங்கமா வருத்தப்படறாரே, அவர் வருத்தம் நியாயமானதுதானா?"

"நிச்சயமா இல்லை. மாதவனுக்கும் இதுக்கும் துளிக்கூட சம்பந்தம் இல்லைன்னு இயக்குனர்ங்கற முறையில உறுதியாச் சொல்ல முடியும். படத்தின் நீளம், கதையின் போக்கு கருதி படத்தைத் திட்டமிட்டபடிதான் எடுத்தோம். இடையிலதான் அப்பாஸ் ஏதோ தப்பாப் புரிஞ்சுக்கிட்டார்."

"'மின்னலே'யில் விவேக் நகைச்சுவை



• கௌதம்- ப்ரீதி கௌதம் - பாம்பே ஜெயஸ்ரீ - தாமரை - ஹாரீஸ்

ரொம்பப் பொருத்தமா இருந்தது. ஹிந்தியிலும் அதே நகைச்சுவை பகுதி அமைக்கப்பட்டிருக்

கிறதா?''

"விவேக் காமெடியனா இருந்தாலும் மற்ற விஷயங்கள்லயும் அவருக்கு ஈடுபாடு உண்டு. முழுப் படத்துக்கான வசனத்தையும் அவரைத்தான் எழுதித் தரக் கேட்டு இருந்தேன். ஒத்துக்கிட்டார். ஆனா ரொம்ப பிசியாயிட்டதால முடியாமப் போச்சு. காமெடிப் பகுதியில அவரோட பங்களிப்பு அதிகம். நாங்க கொடுத்ததை, காட்சியின் போது நிறைய 'இம்ப்ரூவ்' செய்தார். ஹிந்தியில் 'பிரிஜேஷ்' பண்றார்."

"என்ன தாமரை, நீங்களே கேட்டுக்கிட்டிருக்கீங்க, 'வசீகரா' உருவான கதையைக் கொஞ்சம் சொல்லுங்க'' என்று நாம் குறுக்கே புக... தாமரை தொடர்ந்தார்.

''பெண்களுக்கு முப்பத்து மூணு சதவிகிதம் கிடைக்குதோ இல்லியோ, இந்தப் பாடல்ல எனக்குக் கிடைச்சது. நீங்க நல்ல காட்சியமைப்பு கொடுத்தீங்க. ஹாரிஸ் பிரமாதமான ட்யூன் கொடுத்தார். 'காதல் வயப்பட்ட பெண்ணோட கற்பனை' என்ற உள்ளடக்கம் ஒன்று போதாதா? தவிரவும் 'இது உங்க பாட்டு, என்ன வேணுன்னாலும் எழுதிக்கங்க' என்று அபரிமிதமான சுதந்தரம் கொடுத்தீங்க பாருங்க. அதுதான், என்னை அசத்திடுச்சு. நிலா, மலர், பட்டாம் பூச்சி எல்லாம் இல்லாம ஒரு பாடல் எழுதணும்னு நான் வேடிக்கையா சொன்னதை நீங்க சீரியசா எடுத்துக்கிட்டு 'ஏன் இதுலேயே எழுது'ங்களேன்னு சொன்னீங்க... அற்புதமான ட்யூனா இருந்தாலும் வார்த்தைகள் போடறதுக்குக் கஷ்டமான ட்யூன். ஹாரிஸ் ஜெயராஜ் 'கீ' போர்டில வாசிக்கறப்ப 'தன் தன்னனனா– தன் தன்னனனான்'னு முற்றுப் புள்ளியே இல்லாம ஓடிக்கிட்டிருந்தது. மூணு நாள், உங்ககிட்ட அவகாசம் கேட்டாலும் ஒரே ராத்திரியில பல்லவி, அடுத்த நாள் சரணம்னு வேகமா எழுதிட்டேன். தொலைபேசியில நீங்க உடனுக்குடன் தேர்ந்தெடுத்ததும் மிக முக்கியமான காரணம்."

"ஆமா, இந்தியிலே வசீகராவை யார் எழுதறாங்க, பாம்பே ஜெயஸ்ரீதான் பாடறாங்களா?"

''வசீகரா மட்டும் இல்லை. எல்லாப் பாடல்களையும் சமீர்னு, அங்க முன்னணிக் கவிஞர், அவர்தான் எழுதறார். வசீகராவை மொழி பெயர்க்கச் சொல்லிக் கேட்டு விட்டு 'பிரமாதமா இருக்கு. ஆனா இந்திக்கு வேற மீட்டர். அப்படியே மொழி பெயர்க்க முடியாது'ன்னு சொல்லிவிட்டார். கவிதை நயமா வேணும்னு கேட்டிருக்கேன். பாம்பே ஜெயஸ்ரீதான் பாடறாங்க."

''கோயி மில்கயா' படத்தில் ஏதேனும் மாற்றம் பண்ணியிருக்கீங்களா கௌதம்?"

"படத்தோட நீளம் கருதி, மின்னலேயில் பல அழகான காட்சிகளை வெட்டி விட்டோம். ஹிந்தியில் படம் நீளமா இருக்கலாம்ங்கறதால அதெல்லாம் சேர்த்



"தலைவரே! நாங்க தர்ம ஆஸ்பத்திரி கட்ட வசூல் பண்றோம்... நீங்களும் பங்கெடுத்துக்கணும்...!"

"ஓ... நிச்சயமா! வசூல் பண்ணிட்டு வாங்க! என் பங்கை எடுத்துக்கறேன்..."

— தஞ்சை தாமு



''நீ ஏன் நான்கு தெருவிலும் 7ம் நம்பர் வீட்டிலேயே திருடினாய்?''

''நியூமராலஜிபடி 7ம் நம்பர்தான் ராசியானதுனு ஜோசியக்காரன் சொன்னான் எஜமான்!''

— கள்ளக்குறிச்சி வே. ஆறுமுகம்

திருக்கோம்."

"தாமரை, உங்க கவிதை தொகுப்புக்கு ஏதோ பரிசெல்லாம் கிடைச்சிருக்காமே!"

"'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' கவிதைத் தொகுப்புக்கு, ஏற்கெனவே திருப்பூர்த் தமிழ்ச் சங்க விருது கிடைச்சிருந்தது. இப்ப கவிஞர் சிற்பி இலக்கிய விருது சிறப்புப் பரிசு கிடைச்சிருக்கு. அடுத்ததா ஒரு கதைத் தொகுப்பு, பிறகு ஒரு கவிதைத் தொகுப்புன்னு திட்டம் போட்டிருக்கேன். திரைப்படப் பாடலாசிரியர் தாமரைக்கு இன்னொரு முகம் இருக்கு. அந்த முகம்தான் என்னை சினிமாவுக்கு அனுப்பியது. அதை எப்பவாவது அடையாளம் காட்ட வேண்டாமா?" என்ற தாமரையிடம் மறுபடியும் கௌதம் கேள்வி!

"'மஜ்னு'வில நீங்க எழுதியிருக்கற 'அரிகோரி போன்சாயி'ங்கற பாட்டு பிரமாதமா இருக்குன்னு பரவலா பேச்சு அடிபடுது. நான் இன்னும் கேட்கலை. சமீபத்தில் வேற என்ன எழுதினீங்க?"

ரொம்ப நன்றி. பல பாடல்கள் எழுதினேன். குறிப்பிட்டு சொல்லணும்னா நாசரின் 'மாயன்' படத்தில, தேவாவின் இசையமைப்புல ஒரு பாடல் எனக்கு பரம திருப்தியா இருந்தது. 'பொண்ணுங்கன்னா கிள்ளுக்கிரையா'ன்னு ரோஜா, சவுக்கெடுத்து சொடுக்கற மாதிரி பாட்டு. எனக்கு அல்வா மாதிரி இருந்தது எழுதறதுக்கு. ஒவ்வொரு பெண்ணின் உள்ளக் குமுறலும் வெளிப்படும். சினிமாவுல இது மாதிரி பெண்ணியக் கருத்துகள் சொல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கறது அபூர்வம். கிடைச்சது. விளாசிட்டேன்" என்றவர் கௌதமிடம்,

"தமிழ்ல ஒரு வெற்றிப்படம் கொடுத்து விட்டு, நீங்க பாட்டுக்கு ஹிந்திக்குப் போயிட்டீங்க, நியாயமா?" என்றார்.

"உங்க வருத்தம் நியாயம்தான். ஹிந்தி முடியறதுக்குள்ள தமிழ்ப் படம் ஆரம்பிச்சிடுவேன். அடுத்த படத்துக்கான கதை, வசனங்கள் ரெடி. விக்ரம் கதாநாயகன், ஜோதிகா கதாநாயகியாக இருக்கலாம். கேமராமேன் ராஜசேகர், விவேக், ஹாரிஸ் ஜெயராஜ்னு அதே வெற்றிக் கூட்டணி. அனைத்துப் பாடல்களும் நீங்கதான் எழுதறீங்க. தலைப்புகூட முடிவாயிடுச்சு. 'இருவிழி உனது'ன்னு 'மின்னலே'யில ஹிட்டான பாடல் வரி!"

"அட, அது நான் எழுதின வரியாச்சே! அதுக்குத் தனியா 'செக்' தருவீங்களா?"

தாமரை வேடிக்கையாய்க் கேட்க, "அதுக்கென்ன தந்துட்டாப் போச்சு, உங்களுக்கு இல்லாததா?" என்றபடியே எழுந்து விடைபெற்றார் கௌதம்.

— அனு

படங்கள் : ஸ்ரீஹரி



"தலைவர் படு மோசம்!"
"என்னவாம்?"
"அவரோட கறுப்பு பூனைப் படையை வீட்ல எலி பிடிக்கப் பயன்படுத்தறார்!"



"சினிமா பட போஸ்டரை வீட்டு உள்ளே வந்து ஒட்டுறாங்களே... ஏன்?"
"குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படமாம்!"

— அம்பை தேவா

ராஜேஷ் குமார்

23 ஏழுபனி

லாயர் மனோன்மணி, உதட்டில் ஒட்ட வைத்துக் கொண்ட ஒரு சின்னப் புன்னகையோடு பால்பாண்டியனை ஏறிட்டாள்.

"என்ன சொன்னீங்க இன்ஸ்பெக்டர்... லீலா கிருஷ்ணன் மரணம் தற்கொலை கிடையாதா?"

"கிடையாது. திட்டமிட்ட கொலை. யாரோ அவனுக்கு வலுக்கட்டாயமாக விஷத்தைப் புகட்டியிருக்காங்க. அப்படியும் உயிர் போகாததால வலதுகை மணிக்கட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ரத்தக் குழாயைத் துண்டித்து ரத்தத்தை வெளியேற்றி இருக்கிறார்கள். ரத்தக்கறை இல்லாமல் அந்த இடத்தைச் சுத்தப்படுத்திவிட்டு, தற்கொலை மாதிரி காட்டியிருக்கிறார்கள்."

மனோன்மணி, தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த வானிடி பேக்கைப் பிரித்து உள்ளேயிருந்த அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"இந்த லெட்டரை ஒரு நிமிஷம் பார்க்கிறீங்களா?"

"இது என்ன லெட்டர்...?"

"லீலாகிருஷ்ணன், தான் இறக்கிறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னாடி இந்த லெட்டரை எழுதி, யமுனாவுக்கு போஸ்ட் பண்ணியிருக்கான். இதை மொதல்ல படியுங்க இன்ஸ்பெக்டர்..."

பால்பாண்டியன், அந்த லெட்டரை எந்த சுவாரஸ்யமும் காட்டாமல் பிரித்துப் படித்துவிட்டு, மனோன்மணியைச் சலனமில்லாத பார்வையால் நனைத்தார்.

"இந்த லெட்டர் உங்க கைக்கு எப்படி கிடைச்சது?"

"யமுனா கொடுத்தாள்."

"வீட்ல எல்லாரும் இருக்கும் போது நீங்க போய் எப்படி லெட்டர் வாங்கிட்டு வந்தீங்க...?"

"வீட்டுக்குப் பின்பக்கமா போய்."

"நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க, மனோன்மணி. யமுனாவுக்குச் சரியான கிரிமினல் மைண்ட். தனக்கு ஓர் அப்பாவி முகமூடியை மாட்டிக்கிட்டு உங்களையும் என்னையும் நல்லாவே ஏமாத்தறா.... ஒரு பெரிய குடும்பத்துக்கு மருமகளா வாழ்க்கைப்பட்டிருக்கிற அவள், அந்த அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, என்ன ஒரு மாஸ்டர் பிரெய்னோடு ஆக்ட் பண்ணிட்டிருக்கா பார்த்தீங்களா?"

"ஸாரி... இன்ஸ்பெக்டர்..!ஐ டோண்ட் அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ். நீங்க ஓர் இன்ஸ்பெக்டர். நான் ஒரு லாயர். குற்றம் பண்ணினவங்க யாரு, பண்ணாதவங்க யாருன்னு ஒருத்தரைப் பார்த்ததுமே நம்மாலே ஊகிக்க முடியுமா முடியாதா...?"

"ஓரளவுக்கு! ஆனா, சிலரை ஆழம் காண முடி





‘சிவப்புப் பனித்துளி’ன்னா என்னன்னு தெரியறதுக்குள்ளேயே ஒரு கொலை!

நிலவு

யாது. அந்தச் சிலரில் யமுனாவும் ஒருத்தி...''

"நீங்க முடிவா என்ன சொல்ல வர்றீங்க இன்ஸ்பெக்டர்...?"

"டாக்டர்ஸ் கொடுத்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி, லீலாகிருஷ்ணன் கொலை செய்யப்பட்ட விஷயம் கன்ஃபர்ம் ஆயிடுச்சு....! லீலாகிருஷ்ணனோட ஃப்ரண்ட் ஒருத்தன். அவன் பேர் வருண். போலீஸ் ரிக்கார்ட்ஸ்படி வருணும் அவ்வளவு நல்லவன் கிடையாது. அவன் மும்பையில் இருந்தபோது ஒருத்தனைக் கொலை பண்ணிட்டு, ரெண்டு வருஷம் ஜெயில்ல இருந்துட்டு வந்தவன். வருண், லீலாகிருஷ்ணன், யமுனா இந்த மூணு பேருக்கும் நடுவில் ஒரு 'பாண்ட்' இருந்திருக்கு. அந்த பாண்ட்தான் சிவப்பு பனித்துளி. இதைப்பத்தி கேட்டா வருணும் தெரியாதுன்னு சொல்றான். யமுனாவும் தெரியாதுன்னு சொல்றா. ஆனா அது என்னான்னு ரெண்டு பேருக்குமே தெரியும்... தெரிஞ்சு வெச்சுக்கிட்டே தெரியாதுன்னு சொல்றாங்க. போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே வெச்சு, விசாரணை பண்ணினா இது மாதிரியான பதில்தான் கிடைக்கும். ரெண்டு பேரையும் அரெஸ்ட் பண்ணி, லாக்கப்புக்குக் கொண்டு போனாத்தான் உண்மை வெளியே வரும்.''

"லீலாகிருஷ்ணனை, யமுனாதான் கொலை பண்ணியிருப்பான்னு நினைக்கிறீங்களா?"

"மே...பி..."

"மோட்டிவ்...?"

"பழைய காதல் விவகாரத்தைப் புருஷன் வீட்டுக்குத்

தெரியப்படுத்திடுவேன்னு லீலாகிருஷ்ணன் யமுனாவை ப்ளாக்மெயில் பண்ணியிருக்கலாம்..."

"யமுனா மாதிரியான ஒரு குடும்பப் பெண் ஒருத்தனைக் கொலை செய்யக் கூடிய அளவுக்குப் போவாளா?"

பால்பாண்டியன் சிரித்தார். "கொலையும் செய்வாள் பத்தினி..."

"நீங்க நினைக்கிற மாதிரியான பெண்ணில்லை யமுனா. தனியா வெளியே போகவே பயப்படுகிற பெண்."

"லீலாகிருஷ்ணனைக் கொலை செய்ய, யமுனாவுக்கு வருண் உதவி செய்து இருக்கலாமே...! ரிமோட் கண்ட்ரோல் மர்டர்."

"உங்க கற்பனை நல்லாவேயிருக்கு இன்ஸ்பெக்டர். உங்க என்கொய்ரி கொஞ்சம் ப்ராக்டிகலா இருந்தா பரவாயில்லை..."

"இது கற்பனை கிடையாது... மேடம்! உண்மை. யமுனாவும் வருணும்தான் லீலாகிருஷ்ணனைக் கொலை செய்தார்கள் என்கிற உண்மையை, உங்க முன்னாடி இதே ஸ்டேஷனில் சொல்ல வைக்கிறேன். இதோ, பார்த்தீங்களா அரஸ்ட் வாரண்ட். இன்னிக்கு சாயந்தரம் நாலு மணிக்கெல்லாம் யமுனா வீட்டு வாசல்ல போலீஸ் ஜீப் நிற்கும்."

"இன்ஸ்பெக்டர்... ப்ளீஸ்...டோண்ட் டேக் ஹார்ஷ் ஆக்ஷன்ஸ்.... ஒரு பெண்ணோட நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்க்கை, கீழே விழுந்த கண்ணாடி பாத்திரமாய் மாற நீங்க காரணமா இருக்கக் கூடாது... உங்க அரெஸ்ட் நடவடிக்கைகளை ரெண்டு நாளைக்குத் தள்ளி வையுங்க. அதுக்குள்ளே லீலாகிருஷ்ணனைக் கொன்ற கொலையாளி யார்ங்கிறதை கண்டுபிடிச்சு, உங்க முன்னாடி நான் கொண்டு வந்து நிறுத்தறேன்."

பால்பாண்டியன் தன் வலது கையை உயர்த்தி மனோன்மணியை அமர்த்தினார்.

"இதோ பாருங்க மேடம்... ஒரு பெண்ணுக்காக இந்த கேஸ்ல நீங்க காட்ற தீவிரம், எனக்குச் சந்தோஷமாயிருக்கு. உங்களுக்கு முழுசா ஒரு நாள் டயம் தர்றேன். நாளைக்குக் காலைலே பத்து மணிக்குள்ளே, லீலாகிருஷ்ணனோட கொலைக்கு யமுனா காரணம் இல்லைங்கிறதை தகுந்த ஆதாரங்களோடு நிருபிச்சுட்டா யமுனா இருக்கிற திசைப்பக்கமே போகமாட்டேன்... நீங்க ப்ரூஃப் பண்ணத் தவறிட்டா, நான் போலீஸ் ஜீப்பை எடுத்துக்கிட்டு, யமுனாவோட வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும். இதுக்கு ஒத்துக்கறீங்களா?"

"ம்... ஒத்துக்கறேன்."

"உங்களுக்குச் சரியா இருபத்திநாலு மணி நேரம் அவகாசம். போய் வேலையை ஆரம்பியுங்க. அதுவரைக்கும், இந்த அரஸ்ட் வாரண்ட் வெறும் பேப்பராகத்தான் என் டேபிள் மேலே இருக்கும்..."

பால்பாண்டியன் கை கூப்பினார். மனோன்மணி தளர்வாய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தாள்.

முட்டுக்காட்டை நோக்கி கார் போய்க் கொண்டிருந்தது. சாலையின் இரண்டு பக்கமும் சவுக்குத் தோப்புகள் பிடிவாதமாய் வந்து கொண்டிருக்க, நிலக்காற்று கடலை நோக்கிச் சீராய் வீசிக் கொண்டிருந்தது. வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த வருணின் தோளைத் தொட்டாள் பார்வதா.

"வருண்..."

"ம்...."

"என்ன யோசனை! ஏதாவது பேசிட்டு வாங்க. எனக்கு போரடிக்குது..."

"பார்வதா...! மனசு பூராவும் 'திக்திக்'ன்னு இருக்கு..."

"எதுக்கு பயம்...?"


"சரியா போச்சு... நீங்க கொடுத்த பத்து லட்ச ரூபாயை யாரோ எடுத்துட்டுப் போயிட்டாங்கன்னு சொன்னா, 'வெரி குட்'னு சொல்லி தோள்ல தட்டிக் கொடுப்

"சர்வர்... காபியில் சர்க்கரை இல்லை..."

"குடிக்காமல் எப்படிச் சொல்றீங்க சார்..?"

"வழக்கமா இரண்டு எறும்பு டம்ளரில் மிதக்குமே!"

– கோபிசெட்டி பாளையம்
பி.ஏ.முருகன்



பாரா என்ன?"

"வருண்! தைரியமாயிருங்க... தயானந்த் ஸார்கிட்டே எல்லாப் பிரச்னைக்கும் தீர்வு இருக்கும். பணம் திருட்டுப் போனது அவ ருக்கு அதிர்ச்சியா இருந்தாலும் அந்த திருட்டை யார் செஞ்சாங்கன்னு கண்டு பிடிக்கிற திறமையும் அவர்கிட்டே இருக்கு! அது சரி! இப்போ எதுக்காக அந்தக் காணாமே போன பணத்தைப் பத்திப் பேச்சு? நாமதான் பணத்தைப் பத்தி எதுவுமே சொல்லப் போறது இல்லையே. நீங்க கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக பத்து பதினைஞ்சு நாள் லீவு கேட்கப் போறீங்க... அவ்வளவுதான்..."

"அவர் லீவு தரலைன்னா...?"

"நான் எதுக்கு இருக்கேன்...?"

"நீ சொன்னா அவர் கேட்பாரா?"

"இதுவரைக்கும் கேட்டு வந்திருக்கார். உங்க விஷயத்துல... எப்படின்னு தெரியலை. பார்ப்போம்." பர்வதா சொல்லிக் கொண்டி ருக்கும்போதே அவளுடைய கைப்பையில் இடம்பிடித்திருந்த செல்ஃபோன் சிணுங்கி யது.

பர்வதா காரின் வேகத்தைக் குறைத்து ரோட்டோரமாய் நிறுத்தி செல்போனை எடுத்தாள்.

"ஹலோ..."

"ஹலோ... பர்வதாவா?" ஓர் ஆண் குரல் கேட்டது.

"எஸ்..."

"வருண்கிட்டே உங்க செல்போனைக் கொஞ்சம் தர்றீங்களா?"

"நீங்க யாரு...?"

"வருணோட ஃப்ரண்ட்."

"பேர்....?"

"அல்லல் காத்தான்."

"ஒரு நிமிஷம்..." சொன்ன பர்வதா வருணிடம் திரும்பினாள். செல்போனின் மவுத்பீஸை வலது உள்ளங்கையால் பொத்திக் கொண்டு சொன்னாள்.

"வருண்! உங்களுக்கு ஃபோன். உங்க ஃப்ரண்ட்னு சொல்றான். பேர் கேட்டேன். 'அல்லல் காத்தான்'னு சொல்றான்."

"அல்லல் காத்தானா?"

"ம்..."

"இப்படியொரு பேரை, இன்னிக்குத்தான் கேள்விப்படறேன்."

"பேசறீங்களா...?"

"ம்... பேசிப் பார்க்கலாம்" சொன்ன வருண், பர்வதாவின் கையில் இருந்த செல்



"நம்ம கட்சிக்கு எதிர்காலமே கிடை யாதுனு தலைவர் முடிவு பண்ணிட்டார்!"

"எதை வச்சு சொல்ற?"

"கட்சியை இன்ஷூர் பண்ண முடி யுமானு கேட்கறார்!"

– அம்பை தேவா

போனை வாங்கி காதுக்குக் கொடுத்தான்.

"யாரு...?"

"அல்லல் காத்தான்..."

"நீ யார்ன்னு எனக்குத் தெரியலை. உனக்கு என்ன வேணும்?"

"சிவப்புப் பனித்துளி..."

"சிவப்புப் பனித்துளியா?"

"ம்... யமுனா கொண்டு வந்து உன்கிட்ட கொடுத்தாளே. அந்த சிவப்புப் பனித்துளி..."

"இதோ பார்... இந்த கண்ணாமூச்சி விளையாட்டெல்லாம் என்கிட்ட வேண டாம். நீ சொல்ற அந்த சிவப்புப் பனித்துளி வார்த்தைக்கு என்ன அர்த்தம்னு எனக்குத் தெரியாது."

"இப்படி நீ சொல்றதை நான் நம்பணும்?"

"உண்மையைத்தான் சொல்லிக்கிட்டி ருக்கேன்."

"எது உண்மை எது பொய்னு எனக்கு நல்லாத் தெரியும். சிவப்புப்பனித்துளியைப் பற்றி யமுனாவுக்கு ஃபோன் பண்ணிக் கேட்டா, அவளும் தெரியாதுன்னு சொல்றா.. நீயும் தெரியாதுன்னு சொல்றே! ரெண்டு பேரும் பேசி வெச்சுகிட்டு ஒரே மாதிரி ட்ராமா பண்றீங்களா...?"

"ட்ராமாவும் கிடையாது சினிமாவும் கிடையாது. நான் சொல்றது உண்மை. நம்பறதும் நம்பாததும் உன்னோட இஷ்டம்" வருண் சொல்லிவிட்டு செல்போனை அணைத்தான். முகம் வியர்த்து வழிந்தது.

பர்வதா சொன்னாள்.

"வருண்! இப்ப ஃபோன் பண்ணின நபர்

திடீர்ப் பரிசுப் போட்டி — 11

இந்த ஃபோட்டோவைப் பாருங்க!

அஞ்சல் அட்டையை எடுங்க!

தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகும் 'பஸார்' தொடரில் இடம் பெற்றிருக்கும் இந்தக் காட்சிக்குப் பொருத்தமான



டாபிகல் வாசகத்தை எழுதி அனுப்புங்க.

சுவை + சுருக் காமெண்டுக்கு ரூ. 100 பரிசு உறுதி.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

எந்த நம்பரிலிருந்து பேசியிருக்கான்னு செல்போன் மூலமா வெளிப்பட்டிருக்கு. அந்த நம்பரை எக்ஸ்சேஞ்சல சொல்லிக் கேட்டா நபர் யார்ன்னு தெரிஞ்சுடும்....''

''ஏதாவது பப்ளிக் பூத்திலிருந்து பேசியிருக்கலாமே...?''

''எதுக்கும் விசாரணை பண்ணிப் பார்க்கலாம்...''

பர்வதா டெலிபோன் எக்ஸ்சேஞ்சுக்கு தொடர்பு கொண்டு கேட்டுப் பார்த்தாள். 'அண்ணா சாலை டெலிபோன் பூத்' என்று பதில் வந்தது. செல்போனை அணைத்து கைப்பைக்குள் போட்டுக் கொண்ட பர்வதா காரைக் கிளப்பினாள்.

வருண் இடது கை விரல்களால் தன் நெற்றிப் பொட்டைப் பற்றிக் கொண்டான்.

''ஒரு பக்கம் தயானந்த் ஸாரோட பிரச்னை, இன்னொரு பக்கம் லீலா கிருஷ்ணன், யமுனா பிரச்னை. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை.''

''வருண்! இந்த 'சிவப்புப் பனித்துளி' பிரச்னை ஒரு முடிவுக்கு வரணும்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு...''

''என்ன...?''

''நீ யமுனாவை நேரடியாய்ப் போய்ப் பார்த்துப் பேசணும். ஒருவேளை 'சிவப்புப் பனித்துளி' அந்த யமுனாகிட்டே இருக்கலாம். யமுனாவோட வீடு உனக்குத் தெரியுமா?''

''தெரியும்! லீலாகிருஷ்ணன் ஒரு தடவை காட்டியிருக்கான்...''

''இன்னிக்குச் சாயந்திரம் நாம ரெண்டு பேரும் யமுனாவைப் பார்க்கப் போறோம். அந்த சிவப்புப் பனித்துளி என்னான்னு தெரிஞ்சுக்கப் போறோம்.''

வருண் தலையாட்டினான்.

கார் வேகம் பிடித்து அடுத்த அரை மணி நேரத்தில் இருபது கிலோ மீட்டர்களை விழுங்கி, தயானந்தின் முட்டுக்காடு பங்களா காம்பவுண்ட் கேட்டுக்குள் நுழைந்தது.

பர்வதா, வருண் இரண்டு பேருமே முகம் மாறினார்கள்.

போர்டிகோவில் போலீஸ் ஜீப். வராந்தாவிலும் சிட் அவுட்டிலும் காக்கி யூனிஃபார்ம்கள் தெரிந்தன.

பர்வதா காரை நிறுத்தி இறங்கி, பதற்ற நடையோடு ஒரு போலீஸ் அதிகாரியை நோக்கிப் போனாள்.

''என்ன... ஸார்...! வாட் ஹேப்பண்ட்?''

''நீங்க யாரு...?''

''பி.ஏ.... டு மிஸ்டர் தயானந்த்...''

போலீஸ் அதிகாரி அவளை ஏறிட்டு இறுக்கமான குரலில் சொன்னார்.

''ஸாரி... டு ஸே... திஸ்...! தயானந்த் ஹாஸ் பீன் மர்டர்ட் பை சம்படி. உடம்புல மொத்தம் பதினேழு கத்திக் குத்துகள்.''

(தொடரும்)



மாண்புமிகு மெமரி - 6

கத்திரிக்காய் மறந்து போச்சே!

ஒரு தத்துவமோ கருத்தோ நமது மனத்தில் பசுமையாக நிற்க வேண்டுமானால், அதை நினைவில் கொள்ளும்போது, அதைப் பற்றி பூரணமாக ஒரு வித சந்தேகமுமில்லாமல் தெரிந்து கொண்டுவிட வேண்டும். அந்தக் கருத்தைப்பற்றிக் கீழ்க்கண்ட கேள்விகளில் எவை எல்லாம் பொருந்துமோ, அவற்றை கேட்டு நமக்கு நாமே விடையளித்துக் கொள்ள வேண்டும்.

இது ஏன் இப்படி?
இப்படி எப்போது ஏற்படுகின்றது?
இது எவ்வாறு ஏற்படுகின்றது?
இது எங்கு ஏற்படுகின்றது?
இதற்கு யார் காரணம்?
இது என்ன?

இத்தனை கேள்விகளையும் கேட்கச் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஒரு மெழுகுவர்த்தியில் கூர்மையான கருவியைக் கொண்டு ஒரு முத்திரையை ஏற்படுத்தினால், அது எவ்வளவு துல்லியமான ஒரு வடுவை ஏற்படுத்துகின்றது?

நமது நினைவாற்றலும் இப்படித்தான். நாம் பார்க்கும் ஒவ்வொரு பொருளும், நாம் கேட்கும் ஒவ்வொரு தகவலும், நாம் படிக்கும் ஒவ்வொரு விஷயமும் நமது மூளையில் எவ்வளவுக்கு எவ்வளவு துல்லியமாகப் பதிகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது நமது நினைவில் பசுமையாக இருக்கும். விஷயங்கள் துல்லியமாகப் பதிய வேண்டும் என்றால் அவற்றைப் பற்றி நாம் பல கோணங்களில் சில நிமிடமாவது சிந்தித்தல் அவசியம். அதற்காகத்தான் இந்தக் கேள்விகள்.

இப்போது, Pnemonics, Linking என்று இரண்டு நினைவாற்றல் யுக்திகளைப் பற்றி விளக்கப் போகிறேன்.

ஒரு சொற்றொடரையோ ஒரு வார்த்தையில் உள்ள எழுத்துக்களையோ வைத்து சில

திருவள்ளூர் என்.சி.ஸ்ரீதரன்

கடினமான விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்வதுதான் நிமோனிக்ஸ். பள்ளியில் படிக்கும்பொழுது வானவில்லின் நிறங்களை நினைவில் கொள்ள VIBGYOR என்ற சொல்லை நினைவில் வைத்துக் கொண் டோம் அல்லவா, அதேதான்.

10 மில்லி மீட்டர் 1 சென்டிமீட்டர்
10 சென்டிமீட்டர் 1 டெசிமீட்டர்
10 டெசிமீட்டர் 1 மீட்டர்
10 மீட்டர் 1 டெக்காமீட்டர்
10 டெக்காமீட்டர் 1 ஹெக்டாமீட்டர்
10 ஹெக்டாமீட்டர் 1 கிலோ மீட்டர்

என்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இதற்கு நாம் இவற்றைக் கீழ்க்கண்ட வரிசைப்படி மனப்பாடம் செய்யவேண்டும்.

கிலோ மீட்டர் (KILOMETER)
டெக்கா மீட்டர் (DECAMETER)
ஹெக்டா மீட்டர் (HECTAMETER)
மீட்டர் (METER)
டெசிமீட்டர் (DECIMETER)
சென்டிமீட்டர் (CENTIMETER)
மில்லிமீட்டர் (MILLIMETER)

இது சிரமமான விஷயம் அல்லவா? ஆனால் எனக்குத் தெரிந்த ஒருவர், ஒரு வாக்கியத்தில் உள்ள சொற்களில் முத லெழுத்துக்களை வைத்து இந்த வரிசையை நினைவில் வைத்துக் கொள்வார். அந்த வாக்கியம் இதுதான்...

King Henry's Daughter Makes Delicious Chocolate Mittai.

இதே வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. உங்கள் கற்பனையை உபயோகித்து வேறொரு வாக்கியத்தை அமைத்துகூட நினைவில் கொள்ளலாம்.

அதேபோல உடற்கூறுவியல் படிக்கும் பொழுது Scapula Clavide Humers Ulna Radius Carpals Metacarpals Phalanges என்ற எலும்பு களின் பெயர்களை நினைவில் வைத்துக் கொள்ள Some Children Hide Under Roadbridge Counting Minutes Playfully என்ற வாக்கியத்தை உபயோகப்படுத்தலாமே!

ஒன்றுமே புரியாத வார்த்தைகளை நினைவில் வைப்பதைவிட வேடிக்கையான அர்த்தமுள்ள வாக்கியங்களை நினைவில் வைப்பது சுலபமில்லையா?

அடுத்து Linking.

சுமார் இருபது பொருட்களை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற



சூழ்நிலை. என்ன செய்வீர்கள்? ஒரு வழி, பேப்பரையும் பென்சிலையும் எடுத்து பட்டியல் எழுதுவது. ஆனால் இதையே சாமர்த்தியமாக உங்களுடைய நினை வாற்றலை உபயோகித்தே செய்ய முடியும்.

எப்படி?

இருபது பொருட்களையும் ஏதோ ஒரு அடிப்படையில் ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இது தான் Linking.

ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள் வோம்.

கீழே குறிப்பிட்டுள்ள 20 பொருட் களையும் ஒரு முறை நன்றாகப் படியுங்கள். ஒரு நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளா தீர்கள்.

1. கேஸ் அடுப்பு
2. தீப்பெட்டி
3. ஸ்பூன்
4. தம்ளர்
5. டேபிள்
6. சேர்
7. பேனா
8. டீ.வி.
9. கருநாகம்
10. கத்தி
11. ஆணி
12. கேமரா
13. கிரிக்கெட்

14. பஸ்
15. டிக்கெட்
16. மேஜைமீது கடிகாரம்
17. மோதிரம்
18. படுக்கை
19. பால்
20. ஸ்விட்ச்

இப்பொழுது, இந்தப் பக்கத்தை மூடி வைத்துவிட்டு, எத்தனை பொருட்களை நினைவுக்குக் கொண்டுவந்து எழுத முடிகிறதோ அத்தனையும் எழுதுங்கள்.

எழுதிவிட்டீர்களா?

எத்தனை பொருட்களை உங்களால் நினைவுகூர்ந்து எழுத முடிந்தது? பதினெட்டுக்கும் மேல் உங்களால் முடிந்ததென்றால், சபாஷ், உங்களுக்கு இயற்கையாகவே நல்ல நினைவாற்றல்!

ஆனால் உங்களில் பலர் 5 அல்லது 6 பொருட்களுக்கு மேல் எழுதியிருக்க மாட்டீர்கள். அவர்களுக்கு ஒரு யுக்தியைச் சொல்கிறேன்.

இந்த இருபது பொருட்களையும் உங்களுடைய வலது மூளையின் சக்தியைப் பயன்படுத்தி ஏதோ ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புப் படுத்துங்கள். என்னுடன் நீங்களும் இது போன்று கற்பனை செய்யுங்கள்.

நீங்கள் உங்களுடைய சமையலறையிலிருந்து புறப்படுகிறீர்கள். அங்கு நீங்கள் சமையல் மேடையின் மேல் கேஸ் அடுப்பையும் அதனருகில் ஒரு தீப்பெட்டியையும் பார்க்கிறீர்கள். கேஸ் அடுப்பு உங்களுக்குப் பிடித்தமான ஒரு கம்பெனியில் தயார் செய்யப்பட்டது. தீப்பெட்டியின் மேல் ஒரு அழகான குழந்தையின் படம் போடப்பட்டுள்ளது. அந்தக் குழந்தை உங்களைப் பார்த்து சிரிக்கிறது. கேஸ் அடுப்புக்கு அருகில் ஒரு ஸ்பூனைப் பார்க்கிறீர்கள். அதில் நேற்று கலந்த காப்பியின் கறை இன்றும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. 'ஏன் அதை உடனே சுத்தம் செய்யவில்லை' என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொண்டு, டைனிங் ரூமுக்கு வருகிறீர்கள். அங்கு ஒரு மேஜையையும் அதனருகில் ஒரு நாற்காலியையும் பார்க்கிறீர்கள். மேஜைமீது ஒரு பேனாவும் டம்ளரும் இருக்கிறது. உங்களுக்குப் பிடித்தமான ஒருவருக்குக் கடிதம் எழுதுகிறீர்கள். பிறகு நீங்கள் அருகே இருக்கும் ஒரு டி.வி.யைப் பார்க்கிறீர்கள். அதில் அச்சம் கொள்ளக்கூடிய கருநாகம் படம் எடுப்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த டி.வி.யை அன்றுதான் நீங்கள் வாங்கினீர்கள். ஆன்டனாவைப் பொருத்தியவர்கள் அவர்களுடைய சுத்தியையும் ஆணிகளையும் அங்கேயே வைத்துவிட்டுச் சென்று விட்டதைப் பார்க்கிறீர்கள். டி.வி.க்கு மேல் உங்களுடைய விலை உயர்ந்த காமிராவைப் பார்க்கிறீர்கள். அது உங்களுடைய நண்பர் சிங்கப்பூரிலிருந்து வரும்போது உங்களுக்குப் பரிசாகக் கொடுத்தது. அதை எடுத்துக் கொண்டு சற்று நேரத்தில் நீங்கள் ஒரு கிரிக்கெட் மாட்சுக்குப் போகப் போகிறீர்கள். அங்கு உங்கள் அன்பு மகன் விளையாடுவதைப் படம் எடுக்கப் போகிறீர்கள். பஸ்ஸுக்கு நேரம் ஆகிவிட்டது. உங்களுடைய கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள். பஸ்ஸில் போவதற்கு டிக்கெட் வாங்க வேண்டும். எனவே உங்களுடைய பர்ஸை எடுக்கிறீர்கள். பர்ஸுக்குப் பக்கத்தில் பால் கூப்பன் இருக்கிறது. கிரிக்கெட் மாட்சிலிருந்து வரும் வழியில் பாலை வாங்கி வர, பால் கூப்பனையும் எடுத்துக் கொள்கிறீர்கள். திடீரென்று உங்களுடைய படுக்கையறையை நோக்குகிறீர்கள். அங்கு விளக்கு வீணாக எரிந்து கொண்டு இருக்கிறது. அதை உடனே சென்று அணைக்கிறீர்கள்.

கற்பனை செய்து விட்டீர்களா? இப்போது, அந்த இருபது பொருட்களையும் திரும்ப எழுதிப் பாருங்கள்.


கண்டிப்பாக உங்களால் முன்பைவிட அதிகமான பொருட்களை நினைவில் கொண்டுவர முடிந்திருக்கும்.

மார்க்கெட்டுக்குச் செல்லும்பொழுது இந்த முறையைப் பின்பற்றிப் பாருங்கள். "ஐயைய்யோ கத்திரிக்காய் மறந்து போச்சே, முருங்கைக்காய் விட்டுப் போச்சே..." என்று தடுமாற வேண்டியதே இல்லை.

''பளு தூக்கும் சாம்பியனா இருந்தா என்ன? அந்தப் பொண்ணைக் கல்யாணம் செய்துக்கக் கூடாதுன்னு உங்கம்மா ஏன் தடை விதிச்சாங்க?''

''மருமகப் பொண்ணு தூக்கி எறிஞ்சி பேசிட்டா என்ன பண்றதுன்ற பயம்தான்!''

- நரேந்திரன், திருப்போரூர்





• கேள்வி நேரம்

காசு கொடுத்து வாங்காட்டியும் கவனம்

மே 27 அன்று சென்னை, வாணி மஹாலில் நடந்த உடல்நலம் குறித்த கருத்தரங்கிலிருந்து சில துளிகள் :

விஞ்ஞானத்திலிருந்து மெய்ஞானத்துக்கு...!

"**க**ம்ப்யூட்டர் மொழியில் சொன்னால், நம் உடம்புதான் ஹார்டுவேர்; மற்றவையெல்லாம் சாஃப்ட்வேர். இந்த ஹார்டுவேர் சரியாக இருக்கும் வரை எல்லாம் சரியாகவே இருக்கும். அதில் பழுது ஏற்பட்டு விட்டால், திருநெல்வேலி பாஷையில் சொல்வார்களே அது போல 'சங்கு ஊதி விட வேண்டியது தான்'' என்று விஞ்ஞானத்தில் தம் உரையைத் துவக்கிய காவல் துறை உயர் அதிகாரி ரவி ஆறுமுகம், அதிகம் பேசியது மெய்ஞான விஷயங்களை :


• தாயின் வயிற்றிலே ஓர் உயிர் உருவாகிறபோதே, அது எத்தனை மூச்சுக்கள் உள்ளிழுக்கப் போகிறது என்பது நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது என்பது சித்தர்களின் தத்துவம். அப்படியென்றால், நாம் ஏன் உடல் நலம் பேண வேண்டும் என்று ஒரு சிலர் கேட்கலாம். அதே சித்தர்கள் உடற்பயிற்சியின் மூலமும், யோகப் பயிற்சியின் மூலமும், விதிக்கப்பட்ட மூச்சு எண்ணிக்கையை மாற்றிவிட முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.



• நன்றியுரை

• நம் நாடித் துடிப்பைப்

நில், கவனி, வெற்றிகொள்!



தேவைங்க!

பரிசோதித்த டாக்டர் 'நார்மல்' என்கிறார். இது உடல்ரீதியில் மேம்போக்காகச் சொல்லப்படும் விஷயமில்லை. நமது அதிர்வுகள் இந்தப் பிரபஞ்சத்தின் அதிர்வுகளோடு ஒத்துப் போகின்றன என்று பொருள்.

● 1971ல் கனடா நாட்டு விமானப் படையினருக்கு என்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டது 5 BX என்ற உடற்பயிற்சி. (இது பற்றிய புத்தகம் எல்லா பெரிய புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.) அனைவரும் செய்யக்கூடிய உடற்பயிற்சிகள் தான் அவை. மூன்று மாத காலம் அவற்றைச் செய்து பார்த்தால் உடலில் ஏற்படும் அற்புதமான மாற்றத்தை உணரலாம். ஊக்கமும், புத்துணர்ச்சியும் ஏற்படும். உடம்பில் வலு அதிகரிக்கும்.

● இந்த உடற்பயிற்சியை அடுத்து, மனத்துக்கும் பயற்சி அளிக்க விரும்புபவர்கள், சவாசனத்தில் படுத்து, பிரபஞ்சத்துடன் தங்களை இணைத்துக் கொள்ளும் பயிற்சியை மேற்கொள்ளலாம். இந்த ஆழ்நிலை தியான முறையில், இந்தப் பிரபஞ்சத்தில் சஞ்சரித்து விட்டு, மறுபடி மனம், இந்த உடலுக்குள் பிரவேசிக்கிற போது ஏற்படும் புத்துணர்வை, அனுபவித்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

● வசதியானவர்கள் நீச்சலும், குதிரை ஏற்றமும் செய்யலாம். போலீஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சிக் காலத்தில் குதிரை ஏற்றம் ஒரு கட்டாயப் பயிற்சி. குதிரை ஏற்றம் அத்தனை சுலபமானதில்லை. குதிரை ஒரு புத்திசாலி மிருகம். அது தன் மீது ஏறி உட்கார்ந்திருப்பவரின் உடல் ஆற்றல், மன ஆற்றல் இரண்டையும் கணித்து விடும். ஆற்றல் இல்லாது போனால், இரண்டாவது அடி எடுத்து வைக்கிறபோதே கீழே தள்ளிவிட்டு ஓடிவிடும்.

ஸ்பெஷல் தாளிப்பு!

“நம் உடம்பு ஓர் அற்புதமான கருவி. நமக்குத் தேவையானது, தேவை



● ரவி ஆறுமுகம்

யில்லாதது என்று வித்தியாசம் பார்க்காமல், எல்லாவற்றையும் இதன் உள்ளே தள்ளினால் கூட, அதிலிருந்து அதிகபட்சம் என்ன எடுத்துக் கொள்ள முடியுமோ அதை எடுத்துக் கொண்டு, தேவையில்லாதவற்றை வெளியே தள்ளி விடுகிற இந்த மிஷின், பிறந்தது முதல் இறப்பது வரை ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைத்துக் கொண்டே இருக்கிறதே! காசு கொடுத்து, வீட்டு வேலைகளைச் சுலபமாக்கிக் கொள்ள நாம் வாங்கும் மிஷின்களைப் பராமரிப்பதில் காட்டுகிற அக்கறையை, நம் உடம்பின் மீது காட்டுகிறோமா?'' என்று பார்வையாளர்களைப் பார்த்து, காரசாரமான கேள்வி மிளகாயை வீசி, தமது ஸ்பெஷல் தாளிப்பை ஆரம்பித்தார் கிச்சன் க்வீன் மல்லிகா பத்ரிநாத் தொடர்ந்தார் :

• சரிவிகித உணவு சாப்பிட வேண்டும் என்கிற எண்ணம் பரவலாக இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட உணவை, குழந்தைகளைச் சாப்பிட வைப்பது கஷ்டமாக இருக்கிறது. என் மகன் சிறுவனாக இருந்த போது, சாப்பாட்டிலிருந்து கடுகைக் கூட தூக்கி எறிந்து விட்டுத்தான் சாப்பிடுவான்! கேட்டால், 'எனக்கு அது பிடிக்கவில்லை' என்பான். அதனால் நான், நாம் சாப்பிடுகிறவற்றில் எது எதில் என்னென்ன சத்துக்கள், வைட்டமின்கள் இருக்கின்றன என்று படித்துத் தெரிந்து கொண்டு, என் மகனுக்கு விளக்கிச் சொல்ல ஆரம்பித்தேன். அதன் பிறகு அவன் ஒழுங்காகச் சாப்பிடத் தொடங்கினான். இன்று டி.வி. மூலமாக இதுபோன்ற விஷயங்களைக் குழந்தைகளுக்கும் மற்ற குடும்பத்து உறுப்பினர்களுக்கும் சுலபமாக எடுத்துச் சொல்ல முடிகிறது.

• ருசிக்காகச் சாப்பிடக்கூடாது என்று பொதுவாகச் சொல்லுவது உண்டு. என்னைக் கேட்டால் ருசிக்காகச் சாப்பிடலாம். ஆனால் எந்த அளவு சாப்பிடுகிறீர்கள் என்பது ரொம்ப முக்கியம்.

• நமக்கு ஏற்படும் உடல் தொல்லையை நோய், ஆரோக்கியக் குறைவு என்று இருவிதமாகப் பிரிக்கலாம். நோய்க்கு வெளி விஷயங்கள் காரணமாயிருக்கக்கூடும். ஆனால், ஆரோக்கியக் குறைவுக்கு முழுக்க முழுக்க நாம்தான் காரணம். வயதுக்கேற்ப உணவுப் பழக்கங்களை மாற்றிக் கொள்ளாதது இதற்கு முக்கியக் காரணம்.

• நிறைய காய்கறிகள் சாப்பிட வேண்டியது அவசியம் என்றாலும், அதிலும் கூட, வேரிலிருந்து கிடைப்பவை, தண்டிலிருந்து கிடைப்பவை, பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள் என்று வெரைட்டியைக் கடைப்பிடிக்க வேண்டும். காய்கறிகளைப் பச்சையாகச் சாப்பிடும் போது, ஒருமுறைக்கு இருமுறை நன்கு கழுவி சுத்தம் செய்துதான் பயன்படுத்த வேண்டும். இளஞ்சூடான நீரில் கழுவுவது நல்லது.

• இன்று உலக அளவில் எடுத்துக் கொண்டால் மிகவும் சத்தான ஒரு உணவு ஐட்டம் நம் ஊர் இட்லி! கார்போஹைடிரேட், புரோட்டீன், வைட்டமின் எல்லாம் உண்டு. எளிதில் ஜீரணமாகும். இட்லி பிடிக்காது என்கிற குழந்தையை, கலர்ஃபுல்லாக சட்னி வகைகள் செய்து கொடுத்து, சாப்பிட வைக்கலாம்.

மூன்று பேச்சாளர்களுள் ரவி ஆறுமுகம் அவசர அலுவல் நிமித்தம் விடைபெற்றதால் மற்ற இருவரும் பார்வையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் சொன்னார்கள்:

முருகன் : ''குடும்ப டாக்டர் என்று ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் போக வேண்டும் என்கிறீர்களே! இன்று டாக்டர் தொழில் வியாபாரமாகி விட்டதே! மத்தியதர வர்க்கத்துக்கு இது எப்படிச் சாத்தியமாகும்?''

''உங்க பையனுக்கு திமிர் ரொம்ப அதிகமாயிருச்சி ; கண்டிச்சு வையுங்க...''

''என்ன செஞ்சான்?''

''பாடம் நடத்திக்கிட்டிருக்கும்போது பாதியிலே எழுந்து, 'உங்களுக்கெல்லாம் விருப்ப ஓய்வு கிடையாதா சார்'னு கேட்குறான்!''

- வத்திராயிருப்பு தெ. சுந்தரமகாலிங்கம்



"டாக்டர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம்தான். எல்லாத் துறையிலும் ஐந்துக்கு மூன்று பேர் வியாபார ரீதியில்தான் செயல்படுகிறார்கள். இதில் டாக்டர்கள் விதிவிலக்கு அல்ல. ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு, டாக்டர்களை நம்ப வேண்டியதுதான். வேறு வழியில்லை. ஓர் ஆலோசனை : கொஞ்சம் வயதான டாக்டராகப் பார்த்துப் போனால், அனுபவம் அதிகமாகவும் வியாபார நோக்கம் குறைவாகவும் இருக்கக்கூடும்.

ராஜா : ஒல்லியாக இருப்பது ஆரோக்கியக் குறைவா?

அது தப்பான அபிப்ராயம். உடம்பு, தனக்குண்டான வேலையைச் சிரமமின்றி செய்தால் ஆரோக்கியம். கொழு கொழு என்று இருந்தால் ஆரோக்கியத்துக்கு உத்தரவாதமில்லை. வற்றல் ரொம்ப நாள் நன்றாக இருக்கும்; பூசணிக்காய் உடனே அழுகி விடும்.

சாப்பிடும் போது, இடையில் தண்ணீர் குடிக்கலாமா?

மல்லிகா பத்ரிநாத் : முடிந்தவரை தவிர்ப்பது நலம். சாப்பிடுகிற போது, தண்ணீர் குடித்தால், சாப்பிடும் உணவின் அளவு குறைந்து விடும். வயிற்றில் சுரக்கும் ஜீரண நீர்கள் நீர்த்துப் போய்விடும்.

டாக்டர் ஸ்ரீதர் : நாம் சாப்பிடும் உணவிலேயே தண்ணீர் உள்ளது. அதையும் மீறி தாகம் எடுக்கிற போது, தண்ணீர் குடித்தால் தப்பில்லை. உணவில் உப்பின் அளவு அதிகமாகிற போது தாகம் எடுப்பது சகஜம்.

பரிமளா ராஜகுமாரன் : காலையில் சாப்பிட ஏற்ற உணவு எது?

மல்லிகா : இது வயதுக்கேற்ப மாறுபடும் என்றாலும், இரவு முழுக்க சாப்பிடாமல் இருந்து விட்டு, காலையில் சாப்பிடுகிற போது, அது அனைத்து சத்துக்களும் கொண்ட உணவாக இருக்க வேண்டியது அவசியம். காலை உணவின் போது, ஆரஞ்சு, பப்பாளி, வாழைப்பழம் இப்படி ஏதாவது ஒரு பழத்தைச் சேர்த்துக் கொள்வது ரொம்ப நல்லது.

ரவிசந்திரன் : முழுமையான செக்–அப் என்பது என்ன?

டாக்டர் ஸ்ரீதர் : நூற்றுக்கு நூறு முழுமையான செக்–அப் என்று எதுவுமில்லை. மனிதனுக்குப் பொதுவாக வரக்கூடிய நோய்களின் அறிகுறி ஏதாவது உள்ளதா என்று அறிய அடிப்படை டெஸ்ட்களான பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், செஸ்ட் எக்ஸ்-ரே, ஈ.சி.ஜி. போன்றவற்றைச் செய்தாலே போதுமானது.

கோபிநாத் : பாலால் ஒரு உபயோகமும் இல்லை என்று ஒருசிலர் கூறுகிறார்களே?

''பால் ஒரு முழுமையான உணவு என்பதே என் கருத்து'' என்று டாக்டர் ஸ்ரீதர் சொல்ல, அதனை வழிமொழிய வந்தார் பார்வையாளர்களில் ஒருவராய் அமர்ந்திருந்த டாக்டர். பார்த்தசாரதி. பாலால் ஒரு பயனுமில்லை என்று சொல்லி சர்ச்சை தான் நடக்கிறதே தவிர, விஞ்ஞானபூர்வமாக அது நிரூபிக்கப்படவில்லை. என் நண்பரான ஒரு எலும்புச் சிகிச்சை நிபுணர், தம்மிடம் வந்த ஒரு பெண் நோயாளியின் எக்ஸ்ரேவைப் பார்த்துவிட்டு, கேட்ட கேள்வி : "ஏம்மா! நீங்கள் உங்க வாழ்க்கையில் பால், மோரே சேர்த்துக் கொண்டது இல்லையா?'' அந்தப் பெண்மணிக்கு 'இவ்வளவு சரியாய்க் கண்டுபிடித்துச் சொல்லி விட்டாரே இந்த டாக்டர்', என்று ஒரே ஆச்சரியம்! எலும்புகளுக்குத் தேவையான கால்ஷியம் சத்து பால், பால் பொருள்கள் மூலம்தான் கிடைக்கிறது.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**

அழைக்கிறது அமெரிக்கா!

போட்டி முடிவுகள் அடுத்த இதழில்...



'பாஸ்போர்ட், பெட்டி, படுக்கை எல்லாம் தயார் பண்ணி வெச்சிக்கோங்க! அமெரிக்கா செல்லும் அதிர்ஷ்டசாலி ஜி.கே. மாஸ்டர் நீங்களாகவும் இருக்கலாம்!

(-ஆர்)



When sorrows come, they come not single spies, but in battalions என்று ஷேக்ஸ்பியர் சொன்னது ஐந்து மாதங்களுக்கு முன் குஜராத்தில் உண்மையாயிற்று. இப்போது நேபாளத்தில், எல்லா டிவியிலும் அந்த ராஜ குடும்பத்தின் முகங்களையே காட்டிக் கொண்டிருந்தார்கள். நடுநடுவே, மர்மத்தைத் தெரிந்துகொள்ள விரும்பும் மக்களின் வன்முறைகள். (கல் வீசும் கலையில் இஸ்ரேலியர், நேபாளியர், இந்தியர், இந்தோனேஷியர் முதலிய அனைவருமே சாம்பியன்கள்.)

'எட்டரை மணிக்கு நேபாள ஸ்பெஷல்'

பட்டாளமாக வந்த பரிதாபம்!

வினோத்

என்று அறிவித்துப் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது ஸ்டார் நியூஸ். ஈமெயிலில் வந்த கேள்விகளை வைத்து நம்ம ஊர் 'நிபுணர்கள்' மச மசவென்று அலசியதோடு சரி. 'என்ன நடக்கிறதென்று எங்களுக்குத் தெரியவில்லை. நீங்களாவது சொல்ல முடியுமா?' என்று ஒரு பெண்மணி மெயிலில் கேட்டிருந்தார். எங்கேயிருந்து? அமளி நடந்து கொண்டிருக்கும் காட்மண்டுவிலிருந்தே! வேதனை என்று சொல்வதா, வேடிக்கை என்று சொல்வதா?

பெட்டியில் எப்போதும் ஒரு பகவத் கீதை புத்தகம் இருக்கும்.

சைவ உணவுதான் சாப்பிடுவார். உருளைக் கிழங்கு பிடிக்கும்.

விமானப் பயணத்தின்போது ஏ-1 எண்ணுள்ள இருக்கையில்தான் அமர்வார்.

டென்னிஸ், கால்ஃப் விளையாடுவதுண்டு.

இடது கையால் எழுதுவார். உணவு உண்பது வலது கையால்.

- அமிதாப்பச்சனின் பாடல் காட்சியொன்றைக் காட்டிய எம்டிவி திரையின் அடியிலே தந்த துணுக்குகள் இவை. ஆனந்தமான ஆசாமிதான் இந்த அமிதாப். Variety is the spice of life என்பதை உணர்ந்திருப்பவர்.

பின்னி முடித்திருக்கும் மனைவியின் கூந்தலைப் பிரித்துவிட்டு மறுபடி ஒழுங்காகப் பின்ன வேண்டும். எந்தக் கணவன் இந்த நற்பணியை விரைவாகவும் சீராகவும் செய்து முடிக்கிறாரோ அவருக்குப் பரிசு. ஜெயாவில் 'சவால்' நிகழ்ச்சி நடத்தியவர் பப்லு. (இப்போதைய பெயர் வேறே!)

அபத்தமான, அசட்டுத்தனமான போட்டியாக இருந்தாலும் பார்ப்பதற்குத் தமாஷாக இருந்தது. ஆனால் கணவருக்குப் பரிசு தந்தது நியாயமில்லை. கச்சா - முச்சாவென்று முடியை இழுத்து முறுக்கிப் பின்னி முடித்தபோது சிரித்த முகத்துடன் பொறுத்துக் கொண்டார்களே, அந்த மனைவிமார்களல்லவா பரிசுக்குரியவர்கள்? A good wife sits up with you when you are sick and puts up with you when you are not என்றார் சம்சாரத்தில் அடிபட்ட ஒருத்தர்.

அழகிய கண்களில் நீர் தளும்ப அழாத குறையாகப் புலம்பிக் கொண்டிருந்தார் அந்தச் சுடிதார் பெண். இடம் : கொடைக்கானல் ஏரிக்கரை. A damsel in distress மங்கையின் மனக்குறை யாதெனில்-

"இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காகவே நாங்கள் பல வருடங்களாக நெடுந்தூரத்திலிருந்து இங்கே வந்து கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போட்டி கிடையாதாம். தடை விதித்திருக்கிறார்களாம்."

அப்படி என்ன போட்டி? குதிரைப் போட்டியா? இல்லை. நீச்சல் போட்டியா? இல்லை. படகுப் போட்டியா? இல்லை.

வாத்துப் போட்டியாம்!

ஸன் நியூசில் வனிதையைப் பேட்டி கண்டவர் வாத்தையும் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். 'க்வாக்! க்வாக்! தப்பித்தேன்!' என்று அது சொல்லியிருக்கும். 'come on, be a good sport!' என்று அதை அதட்ட முடியுமா?

இளம்பிள்ளை வாதம் அதிகமாகப் பரவியிருப்பது இந்தியாவிலேயே, உத்தரப் பிரதேசத்தில்தான் என்று தூரதர்ஷனில் ஒரு சோகத் தகவலைச் சொன்னார்கள்.

இங்கே கிராமத்தில் பெண்கள் பலர் தங்கள் குழந்தைக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதை விரும்பவில்லையாம். வளர்ந்த பிறகு அந்தக் குழந்தைக்குக் குழந்தை பிறக்காது என்று ஒரு கருத்துப் பரவியிருப்பதே காரணமாம். பல தாய்மார்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு அப்படிச் சொல்வதையும், ஆண்கள் அவர்களை ஆதரிப்பதையும் காட்டினார்கள். அதே காட்சியில் போலியோவினால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவன் நொண்டிக் கொண்டே போவதையும் பார்க்க முடிந்தது.

எல்லா முட்டாள்தனங்களுக்கும் வறுமையே மூலம். If poverty is the mother of crimes, stupidity is its father.

உமாசங்கர் உயிருக்கு ஆபத்தா?



உமாசங்கர்! முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் மதுரை மாவட்டத்தில் கூடுதல் ஆட்சியாளர் பொறுப்பில் இருந்தபோது, சுடுகாட்டுக் கொட்டகை கட்டியதில் நடந்த ஊழலை அம்பலப்படுத்திய இளம் அதிகாரி. அதன் காரணமாக மாற்றப்பட்டதால் அதை எதிர்த்து டிரிப்யுனல் போனவர். 1996ல் ஜெயலலிதா ஆட்சி வீட்டுக்கு அனுப்பப்பட்ட பிறகு, கலைஞர் ஆட்சியில் உமாசங்கருக்குக் கோட்டையில் முக்கியப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஊழல் கண்காணிப்புத் துறையில் சிறப்பு அதிகாரியாகப் போடப்பட்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த ஊழல்களைத் தோண்டியெடுக்கும் வேலை அவருக்குக் கொடுக்கப்பட்டது.

அவரும் மிகவும் உன்னிப்பாக இரவும் பகலும் வேலை செய்து முறைகேடுகள் நடந்ததற்கான ஆதாரங்களைத் திரட்டினார். சட்டபூர்வமாக கோர்ட்டில் நிரூபிப்பதற்கு ஏற்றவாறு வழக்குகளைத் தயாரித்தார். ஜெயலலிதா உட்பட பல பழைய மாண்புகள் மாட்டிக் கொண்டனர்.

ஊழலை அம்பலப்படுத்தும் பணி முடிந்த பிறகு சிறிது காலம் தேர்தல் துறையில் பணியாற்றினார். அதன் பிறகு கலைஞரின் சொந்த மாவட்டமான திருவாரூருக்கு ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். 'E-Governance' என்னும் மின்னணு நிர்வாகத்தை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தினார். மாவட்ட நிர்வாகம் முழுவதும் கம்ப்யூட்டர்மயமாக்கப்பட்டது. நாட்டிலேயே வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு கம்ப்யூட்டரை அரசு நிர்வாகத்தில் பயன்படுத்தி மக்களின் சிரமங்களைக் குறைத்தார்; பாராட்டுகளைப் பெற்றார்.

இப்போதைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கலைஞர் ஆட்சிக்கு 'வேண்டியவர்களாக' கருதப்பட்ட பல அதிகாரிகள் முக்கியமில்லாத துறைக்கு பந்தாடப்பட்டுள்ளனர்; கட்டாயக் காத்திருப்பிலும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பழி வாங்கப் பட வேண்டிய பட்டியலில் உள்ள உமாசங்கருக்கும் ஆபத்து வந்து விட்டது. வேறு மாவட்ட ஆட்சியாளர் போடப்பட்டாலும் உமாசங்கருக்குப் புதிய பொறுப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை.

'உமாசங்கரை எப்படியாவது பழிவாங்கத் துடிக்கிறார்கள்' என்கின்றனர் திருவாரூர் புள்ளிகள். மாவட்டத்தில் ரொம்பவும் 'பெயர்போன' ஓர் ஆளுங்கட்சி பிரமுகருக்கு உமாசங்கரை 'கவனிக்க' வேண்டிய பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளதாம். இதனால், அவர் உயிருக்கே கூட ஆபத்து வரலாம் என்று 'திக் திக்'குடன் சொல்கிறார்கள் திருவாரூர் பிரமுகர்கள். மாவட்டத்தைக் கம்ப்யூட்டர்மயமாக்கியதில் ஊழல் என்று சொல்லி 'பிடிக்கவும்' வலை வீசப்பட்டிருக்கிறதாம். அது இயலாது போனால் எப்படியெல்லாம் புனைந்துரைத்து அவரைச் சிக்க வைக்கலாம் என்று பல்வேறு திட்டங்கள் உருவாகின்றனவாம்.

மின்னணு நிர்வாக சாதனை காரணமாக சமீபத்தில் தாய்லாந்தில் உமாசங்கருக்கு ஒரு விருது கொடுக்கப்பட்டது. ஆனால் நேரில் சென்று வாங்க அ.இ.அ.தி.மு.க. அரசு அனுமதி கொடுக்கவில்லை.

— நமது நிருபர்



* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கல்கி சந்தா செலுத்தினால் கோகுலம்/GOKULAM இலவசம்!

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :
மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ....

என் மகன் / மகள் பெயர் : ....

....

விலாசம் : ....

....

....

....

கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. .... அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

* தேவையற்றதை அடித்து விடவும்.

கையொப்பம் : ....

ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!

குறையொன்றுமில்லை



பகவதோ பலேனா, பகவதோ வீர்யேன....

– எந்த காரியத்தையுமே நாம் பகவத் வீர்யத்தினால்தான் பண்ணுகிறோம். அவனுடைய ப்ரீதிக்காக இந்த ஆத்மாவைக் கொண்டு இந்தக் காரியத்தை அவனே நடத்திக் கொள்கிறான்.

அந்தக் கர்மாவும் அவனே, அதை நடத்தியவனும் அவனே, அதனால் ஏற்படக்கூடிய பயனும் அவனே... என்று பலத் தியாகம், பரத் தியாகம் எல்லாம் அவன் திருவடியிலேயே நாம் பண்ணவேண்டும். அப்படிப் பண்ணிவிட்டோமானால், சத்ய காமன், சத்ய சங்கல்பனான அவன் மிகவும் சந்தோஷப்படுவான்.

அத்தனை பேரைப் பார்த்துச் சொன்னானே...! "பதினோரு வருஷ காலம் நான் பூமியிலே இருப்பேன். நீங்கள் எல்லோரும் கவலையை விடுங்கள். நான் ராவணனை அழிப்பேன்... –இது என்னுடைய சங்கல்பம். நான் வந்து பூலோகத்தில் மனிதனாகப் பிறப்பேன்"– யக்ஞ சமயத்திலே, தசரதர் யக்ஞம் பண்ணுகிறபோது, தேவர்களெல்லாம் வந்திருக்கிறார்கள், விசேஷமாக அங்கே. அப்போது அவர்களுக்கு வாக்களித்தான். சங்கல்பம் பண்ணிக் கொண்டான். பூரணமாய் அவன் சங்கல்பம் பண்ணிக் கொண்ட மாதிரி பதினோராயிரம் ஆண்டு காலம் பூமியில் வாழ்ந்தான்.

பகவானாயிருந்தாலும் அவன் தன் சங்கல்பத்தை மீறியதில்லை பாருங்கள்... அன்றைய தினம் அவனுக்குப் பதினோராயிரம் வருட காலம் முடிகிறது. –உத்தர ராமாயணத்திலே பார்த்தோமானால் இந்தக் காட்சி வருகிறது:

யமன் என்ன பண்ணினான்... ஒரு தபஸ்வி வேஷம் போட்டுக் கொண்டு அங்கேயிருந்து வந்து, வாயில்காப்போனைப் பார்த்துச் சொல்லுகிறான்: 'ராமனைப் பார்க்க வேண்டும்' என்று கேட்கிறான்.

பகவான் அவனை உடனே உள்ளே வரச் சொல்கிறான். யமனும் உள்ளே போய் ராமனுடைய திருச்செவியில், "நான் யமன் வந்திருக்கிறேன். இன்றோடு முடிகிறது... நீங்கள் கிளம்ப வேண்டும்..." என்கிறான்.

யமன் எவ்வளவு சத்ய சந்தன் பாருங்கள்! பதினோராயிரம் வருஷகாலம் முடிந்து போயிற்று; கிளம்ப வேண்டும். இனிமேல் ஒரு நாள் கூட இருப்பதற்கில்லை... என்று ராமனைக் கூட அவன் விட்டு வைக்காமல் தன் பொறுப்பை நிறைவேற்றுகிறான். அப்படிப்பட்டவன் நம்மை விட்டு வைப்பானா...!

ஆனால் பகவான்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

நினைத்துக் கொண்டு, 'இன்னும் ஒரு நாள் கூடுதலாக இருக்கிறேன்' என்று சொல்லிவிட்டானானால் யமனால் என்ன பண்ண முடியும்?! ஆனால் பகவான் வாக்கு மீற வில்லை. யமனை வரவழைத்து ஞாபகப்படுத்திக் கொண்டு கிளம்பிவிட்டான் என்பதை வால்மீகி ராமாயணத்தில் விசேஷமாக வால்மீகி சொல்லியிருக்கிறார்.

16



பிரும்மா வரம் கொடுத்துவிட்டார் ஹிரண்ய கசிபுவுக்கு.

பகவான் அவனுக்கு - பிரும்மாவுக்கு மேம்பட்டவன். ஆயிரம் கோடி யுகம் தபஸ் செய்துதான் தாம் உட்கார்ந்திருக்கிற இடத்தையே கண்டு பிடித்தார் பிரும்மா. அந்த பிரும்மாவைத் தோற்றுவித்தவன் பரமாத்மாதான். 'அந்த பிரும்மா கொடுத்த வரம் செல்லாது. நான் எப்படி வேண்டுமானாலும் கொல்லுவேன் ஹிரண்யனை' என்று பகவான் முடிவெடுத்திருந்தால் யார் அவனைக் கேட்க முடியும்! 'சர்வ சுவ்தந்தரன் நான். நான் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்!' என்று அவன் சொல்ல முடியுமே.

ஆனாலும் பிரும்மா கொடுத்த வரம் கெடக் கூடாது என்பதற்காக, அதற்குள்ளேயே சாமர்த்தியமாக-அகடித கடனா சாமர்த்தியத்துடன் ஆவிர்பவித்து ஹிரண்ய கசிபுவை முடித்தான்.

பரமாத்மாவின் சங்கல்பம் ஹிரண்ய கசிபுவை முடிக்க. ஆனால் இன்னொருத்தர் வரக்கைக் கெடுக்காமல் அந்த நிபந்தனைக்குள்ளே அடங்கும்படியான ஒரு தோற்றம் எடுத்து வந்து பிறந்தானல்லவா! அதுதான் சங்கல்பம்!

விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பகவானுக்கு சங்கல்பம். ஆனால், எல்லோரும் எதிராகப் பேசுகிறார்கள்- மொத்த பேருமே! சுக்ரீவன் எதிராகப் பேசுகிறான். அப்படியே எதிர்த் தட்டாகப் பேசுகிறான். ஆஞ்சநேயன் ஒருத்தன்தான் ராமனுடைய பேச்சை ஆமோதிக்கக் கூடியவன்.

முதலில் அவன் அந்த ஆமோதிப்பைச் சொல்லிவிடவே 'மாருதி வினய வார்த்தை செவிமடுத்தமிழ்தின் வாங்கி'க் கொள்கிறான்

பகவான்.

இங்கே வால்மீகியே ஆச்சர்யப்படுகிறார்: எல்லோரும் விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிற போது, பகவானுக்கு மூச்சே நின்றுபோய்விட்டதாம்! வாயுவின் பிள்ளையல்லவா ஆஞ்சநேயன்? அவன் பேசியவுடனேயே மூச்சு வந்துவிட்டதாம்! பரமாத்மாவுக்கே அப்போதுதான் மூச்சு வந்து சந்தோஷப்படுகிறான்! எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கேட்டான். வானரங்களெல்லாம் சொன்ன பிறகு, சுக்ரீவன் சொன்னான். வானரங்களுக்கெல்லாம் ராஜா சுக்ரீவன். அவனைக் கண்டிக்கவில்லை, பரமாத்மா. பலபேர் முன்னிலையில் அவனைக் கண்டித்தால், நாளைக்கு அந்த வானரக் கூட்டங்களெல்லாம் சுக்ரீவனை மதிக்காது.

அதற்காக, ரொம்ப லௌகிக தர்மத்தை அனுஷ்டித்து, சுக்ரீவனைக் கண்டிக்காமல், ''விபீஷணனுடைய விஷயத்தில் நீங்கள் எல்லோரும் பேசினீர்கள்; அதை நான் கேட்டேன்...'' என்று ஆரம்பித்து, விபீஷணனை ஏற்கலாம் என்ற தனது முடிவுக்கு, காரண காரியங்களோடு விளக்கம் தருகிறான் சத்ய காமனாகப்பட்ட பரமாத்மா. சத்யகாமனானவன் தன் வாக்கை மதிப்பவன் என்பது மாத்திரமல்ல... பிறர் வாக்கையும் மதித்து நடப்பவன் என்று இங்கே பகவான் காட்டித் தருகிறான்.

சத்யசங்கல்பன் பகவான். உண்மையை தர்மத்தை நிறைவேற்றுபவன். தர்மமே உருவானவனுமாக அவனே இருக்கிறான்.

ராவணனுக்கு அவனுடைய துஷ்டபரிவாரங்கள் எடுத்துச் சொல்கின்றன:

"நீதான் காமகனாயிற்றே. எங்கு வேண்டுமானாலும் நீ போவாய். அது மட்டுமல்ல... எப்படி வேண்டுமானாலும் ரூபம் எடுத்துக் கொள்வாய். அவ்வாறு எடுத்துக் கொள்ளக் கூடிய சக்தி உனக்கு இருக்கிறது அல்லவா...? ராமனாக வேஷம் போட்டுக் கொள்ளேன். அப்படி வேஷம் போட்டுக் கொண்டு நீ சீதையின் முன்னால் போய் நின்றாயானால், உடனே அவள் மயங்கிப்போய் விடுவாள்; சுலபமாக சீதையை அடைந்துவிடலாம்'' என்றார்கள்.

உடனே, ''இதை நீ சொல்ல வேண்டுமா எனக்கு?'' என்று கேட்கிறான் ராவணன்.

''ஏன்? இந்த யோசனை முன்னமே தெரியுமா...?''

அருள்வாக்கு

கோவிடமிருந்து நாம் பயன்பெறும் விஷயமாகவும் ஒன்று சொல்ல வேண்டும். உண்மையான பயன், அது தரும் த்ரவியங்களை வைதிக யஜ்ஞங்களிலும் தெய்வகார்யங்களிலும் உபயோகப்படுத்திக் கொள்வதும், அதன் பால், தயிர் முதலானவற்றை நாம் சாப்பிட்டு ஆரோக்ய விருத்தி பெறுவதுந்தான். ஆனால் துர்பாக்யவசமாக நடப்பது என்னவென்றால் ஆரோக்யத்துக்கு ஹானியான காபிக்குத் தான் இப்போது பாலில் பெரும்பகுதி போகிறது. அம்ருத துல்யமான பாலை உடம்பு, மனஸ் இரண்டையும் கெடுக்கும் விஷ வகையான கஃபைன் சேர்ந்த டிகாக்ஷனோடு சேர்த்து வீணடிக்கிறோம். பசு ரக்ஷணம் போலவே ஆத்ம

''ஏற்கெனவே இந்தப் பிரயத்தனம் நான் பண்ணினேன். ராமனாக வேஷம் போட்டுக் கொண்ட உடனேயே, சீதையை வஞ்சிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லையே! அந்த மாதிரி கெட்ட பாவம்-ராமனுடைய மனைவியை அபகரிக்க வேண்டும் என்கிற எண்ணமே வரமாட்டேன் என்கிறதே! நான் என்ன பண்ணுவேன்... அந்த வேஷத்துக்கே அவ்வளவு கௌரவம் இருக்கிறது!''

துஷ்டனான ராவணன் சொல்கிறான் இதை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்த வேஷம் போட்டுக் கொண்டாலே வஞ்சிக்க வேண்டும் என்கிற எண்ணம் வரமாட்டேன் என்கிறதாம்! 'சீதையைச் சேவிக்க வேண்டும் என்றல்லவா தோன்றுகிறது!' என்கிறான்.

'மித்ர பாவேன'- என்று வேஷம் போட்டுக் கொள்ளக் கூடியவர்களுக்குக் கூட அனுக்கிரஹம் பண்ணுகிறான் பாருங்கள் பகவான்! அது அவனுடைய காருண்யம்.

இதெல்லாமே அவனுடைய குண பூர்த்தி. சத்யகாம, சத்ய சங்கல்ப... அபஹத பாபத்வம் என்பதும் அவனுடைய குணம்.

விஷ்ணு என்பவன் யார் என்று கேட்டால் அபஹதபாபத்வம் உடையவன்

ரக்ஷணத்திலும் ஜனங்கள் கவனம் செலுத்தி, காபி குடிக்கிற கெட்ட பழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

பலமுறை காபி குடிப்பதற்குப் பதில் அந்தப் பாலில் ஒரு பாகம் கோயில் அபிஷேகத்துக்கும், ஒரு பாகம் ஏழை நோயாளிகளுக்கும் ஏழைக் குழந்தைகளின் வயிற்றுக்கும் போகுமாறு செய்ய வேண்டும். பால் ருசியே காணாமல் நோஞ்சான்களாக லக்ஷக்கணக்கான ஏழைக் குழந்தைகள் இருக்கும்போது, நினைத்தபோதெல்லாம் பல பேர் காபி ருசி பார்ப்பது ஸமூஹத்துக்குச் செய்கிற த்ரோஹமாகும்.

காபிக்குப் பதில் காலை வேளையில் மோர்க் கஞ்சி சாப்பிடலாம். 'தக்ரம் அம்ருதம்' என்று சொல்லியிருக்கிறது.



'தக்ரம்' என்றால் மோர்தான். ஒரு பங்கு பாலிலிருந்து அதைப் போல் இரண்டு மூன்று பங்கு மோர் பெறலாமாதலால் இது சிக்கனத்துக்கும் உதவுவதாக இருக்கிறது. சில பேருடைய தேஹவாகுக்குப் பால் ஒத்துக் கொள்ளாது; பேதியாகும். அப்படிப்பட்டவர்களுக்கும் ஏற்றதாக கோமாதா அந்தப் பாலிலிருந்தே இந்த மோரை அருள்கிறாள். கொழுப்புச் சத்து சேரக்கூடாத ரோகங்களுக்கு ஆளாகிறவர்களும் வெண்ணெய் கடைந்து எடுத்துவிட்ட மோர் சேர்த்துக் கொள்ளலாம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஏவனோ அவன் விஷ்ணு என்று சொல்லலாம்.

அபஹதபாபத்வம் என்றால்...?

நமக்கு ஏகமாக பாபங்கள்! எத்தனையோ விதமானவை. நாம் பண்ணக் கூடிய பாபங்களை வரிசையாக நாராயண உபநிஷத் சொல்கிறது. அகமர்ஷண ஸூக்தம் என்றொரு ஸூக்தம். அதைச் சொல்லி நாம் ஸ்நானம் பண்ணவேண்டும் என்கிறது நாராயண உபநிஷத்.

அகம் என்றால் பாபம். மர்ஷணம் என்றால் அடியோடு இல்லாமல் அடிக்கக் கூடியது. பாபத்தைப் போக்கடிக்கக் கூடிய ஸூக்தம். அந்த மந்திரத்தினால் நம்மைப் பாவனமாக்கிக் கொள்ள வேண்டும்.

அந்த விஷ்ணு புராணத்திலே சொல்லப்பட்டிருக்கிற முதல் பாபம் ப்ருணஹத்யா. கர்பத்துக்குள்ளே சிசு இருக்கிறது. திரவத்துக்குள் இருக்கிறது. அந்த சிசுவை கர்ப்பத்துக்குள்ளேயே அழிப்பது என்பது ப்ருணஹத்யா. அதைக் காட்டிலும் கொடிய பாபம் எதுவுமில்லை என்கிறது சாஸ்திரம்.

இப்படிப்பட்ட ஒரு பாபத்தை ஒருவர் செய்தாரானால், உலகத்திலே நல்லது பண்ணுகிறவர்களுக்கெல்லாம் கூட கெடுதல் ஏற்படும். விடாமல் நித்யகர்மானுஷ்டானம் பண்ணிக் கொண்டு, சாத்வீகராக ஒருத்தர் இருந்தால், அவர் வாழும் இந்த உலகிலே, வேறு ஒருத்தர் இந்தப் பாப காரியத்தைப் பண்ணினால், அவர் பாபம் இவருக்குப் போய்ச் சேர்கிறது!

இப்படி பல வகை பாபங்கள்! அவற்றுக்குப் பலனாக 21 நரகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பாபங்களைச் சில சமயம் அஞ்ஞானத்தினால் பண்ணுகிறோம். சில சமயம் தெரிந்தே பண்ணுகிறோம். இத்தனை பாபங்களும் நிச்சயம் நமக்கு வந்து சேர்ந்து கொண்டேயிருக்கும். புண்ணியம் சேர்கிறதோ இல்லையோ, பாபம் சேர்வது மாத்திரம் நிச்சயம். அதை மாத்திரம் தவிர்க்கவே முடியாது.

இந்த மாதிரி பகவானுக்குப் பாபங்கள் உண்டோ? என்று விசாரம்! அந்த விசாரத்தின் முடிவாகத்தான் அவன் அபஹத பாபத்வன் என்று சொல்கிறது வேதம். பகவான் பாபமே கலப்பில்லாதவன்.

எம்பெருமானிடத்தில் ஒரு பாபமும் கிடையாது என்று நீ நினைத்தாயானால், உன்னிடத்திலே இருக்கிற பாபக் குவியல் என்ன செய்யும்! கிட்டே வருமா! அவன் பாபமில்லாதவன் என்று நீ நினை. உன் பாபங்கள் விலகும்!

(வளரும்)





நில், கவனி, வெற்றிகொள்!

கல்கி
ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும்

இளைஞர் திருவிழா!

பக்கத்து வீட்டுக்காரனுக்குக் கால்ல முள் தைச்சா உங்க மனசு வலிக்குதே அதுமட்டும்தான் மனிதநேயமா? இல்லை... நிறைய இருக்கு. அவசரம், டென்ஷன், பரபரப்பு- இந்த நிலைமையில ஓடிக்கிட்டிருக்கிற நம்ம வாழ்க்கையில மனித நேயம்ங்கற விஷயம் மட்டும் இப்ப ரொம்பவே மிஸ்ஸிங்! எல்லாரும் மதர் தெரஸா ஆக முடியாது தான்... ஆனா எல்லாருமே ராமாயணத்து அணில் ஆக முடியும்... எப்படி...? வழி சொல்லும் இந்த விழா!

மனித நேயம்

உச்சரிக்கும்போதே மனசெல்லாம் நிறைஞ்சு போகிற இந்த வார்த்தைக்கு உயிர்கொடுத்து, உதாரணங்கள் கொடுத்துப் பேசப் போறாங்க இரண்டு வி.ஐ.பிக்கள்.

நாள் : 17.6.2001 (ஞாயிற்றுக் கிழமை)

இடம் : **ராமராவ் கலா மண்டபம், அபிபுல்லா ரோடு, சென்னை – 17**

நேரம் : மாலை 6 மணி

தலைமையுரை : **பேராசிரியர் கண. சிற்சபேசன்**

சிறப்புரை : **நடிகர், இயக்குனர் ரா. பார்த்திபன்**

திறந்த மனத்தோடு வாங்க. நிறைந்த மனத்தோட திரும்புங்க.

அனுமதி இலவசம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka